சங்கச் செவ்வியல் அறிமுகம்

# அகநானூற்றுக் காட்சிகள்

பன்முகப்பார்வையில் இலக்கிய விளக்கம்



தமிழண்ணல்

சங்கச் செவ்வியல் அறிமுகம்

# அகநானூற்றுக் காட்சிகள்

தமிழண்ணல்

விற்பனை உரிமை

**மீனாட்சி புத்தக நிலையம்**

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.
தொலைபேசி: அலுவலகம் : 2345971 வீடு : 2560517
ஈமெயில்: meenakshiputhakam@hotmail.com

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | தி வ.ஆண்டு 2041, ஆடி (ஆகஸ்டு, 2010) |
| உரிமை | : | உரையாசிரியருக்கு |
| விலை உருவா | : | **50.00** |

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அகநானூற்றுக் காட்சிகள் |
| உரையாசிரியர் பெயர் | : | தமிழண்ணல் |
| முதற்பதிப்பு | : | ஆகஸ்டு, 2010 |
| நூலின் தன்மை | : | இலக்கிய அறிமுகம் |
| தாளின் தன்மை | : | வெள்ளைத்தாள் |
| நூல் அளவு | : | கிரவுன் |
| அச்சு எழுத்து அளவு | : | 10 புள்ளி |
| பக்கங்கள் | : | 144 |
| நூலின் விலை | : | உருவா **50.00** |
| அச்சிட்டோர் | : | பரமேஸ்வரி கிராபிக்ஸ், சென்னை. |
| ஒளி அச்சுக் கோவை | : | ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை. |

---

**SELLING RIGHTS**

**MEENAKSHI PUTHAKA NILAYAM**

Mayura Complex 48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.

☎ Off : 2345971 Resi : 2560517

E-Mail: meenakshiputhakam@hotmail.com

# நூன்முகம்

'செம்மொழி' எனத் தமிழ் அறிவிக்கப் பெற்றது.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடும் நடந்தேறியது.

மாண்பமை கலைஞர், இதனைப் பள்ளி முதல் கல்லூரிகள் வரை பாடத்திட்டத்தில், ஒரு பாடமாகச் சேர்க்க வேண்டுமெனக் கூறி, அதற்கான முயற்சிகள் இந்த ஆண்டே நிறைவேற உள்ளன. உலகம் எங்கும் தமிழராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் தொல்காப்பிய அறிமுகம் வேண்டும்; திருக்குறளில் நுண் மாண் நுழைபுல அறிவு வேண்டும்; சங்க இலக்கியப் பயிற்சி வேண்டும்; இரட்டைக் காப்பியம் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். இவற்றில் தொடங்கி, ஏனைய செவ்வியல் சார்புடைய நூல்கள் பற்றிய யாவும் ஓரளவேனும், பிறருக்கு எடுத்துச் சொல்லுமளவு, அறிமுகம் வேண்டும்.

இதனை பல்வேறு துறைகளில், பல்வேறு
விதமாகப் பரப்பும் முயற்சியும் பயிற்றும்
திறனும் வேண்டும்.

அவற்றுள் இதுவும் ஒன்று. குறுந்தொகை அரும்புகள், நற்றிணை மலர்கள், புறநானூற்றுக் குறும்படங்கள் முன்பே வெளியிடப் பெற்றன. 'அகநானூற்றுக் காட்சிகள்' எனும் இது அளப்பரிய சிறப்புடைய அத்தொகையின் அறிமுக நூலாகும்.

இவை மாணவர்க்கும் மக்களுக்கும் ஓரளவேனும் தமிழ்ச் செவ்விலக்கிய மாண்புகளை உணர்த்தும்.

தமிழண்ணல்

# உள்ளுறை

## காட்சிகள்


| வ.எண் | காட்சிப் பொருள் |
|---|---|
| 1. | இன்பம் எளிது |
| 2. | முதல் திறனாய்வு |
| 3. | பேசும் பொற் சித்திரம் |
| 4. | காற்றினும் விரையும் மனம் |
| 5. | உள்ளுறை இடித்துரை |
| 6. | நந்தர்கள் |
| 7. | கடல்வழிப் பிரிவு |
| 8. | பாரதப் போர் முடிவு |
| 9. | மனம் எங்கே போனது |
| 10. | வடக்கிருத்தல் |
| 11. | தலைவன் சென்ற வழி |
| 12. | கபிலரின் குருவிகள் |
| 13. | நம்பிக்கைத் தோழி |
| 14. | முதல் இரவு |
| 15. | திருமணச் சடங்குகள் |
| 16. | பிரிவைத் தவிர்த்தல் |
| 17. | பரத்தையின் செருக்கு |
| 18. | காதல் நிகழ்ந்த கதை |
| 19. | காதலில் நகைச் சுவை |
| 20. | கலப்பு மணம் |
| 21. | காமுகனுக்குக் கடுந் தண்டனை |
| 22. | ஒரு சிறுவனின் கதை |
| 23. | முருகாற்றுப் படுத்தல் |
| 24. | களவொழுக்கத்தில் தடைகள் |
| 25. | வீடு நோக்கி விரையும் மனம் |
| 26. | மோரியரும் நந்தரும் |
| 27. | பரத்தைமைக் கேடு |
| 28. | ஒரு நாட்டிய அரங்கேற்றம் |
| 29. | கூத்தர் வாழ்வு |
| 30. | வேள்வியும் வேந்தரும் |
| | அரிய குறிப்புகள் |

# அகநானூற்றுக் காட்சிகள்

குறுந்தொகை நற்றிணை நெடுந்தொகை மூன்றையும் ஒரு சேர, ஒரே சமயத்தல் திட்டமிட்டுத் தொகுத்திருக்க வேண்டும். இவற்றுள் நெடுந்தொகை 13 அடிமுதல் 31 அடிவரையுள்ள பாடல்களைக் கொண்டது. அகத்திணையின் முதல் கரு உரி மூன்றையும் விளக்கமுறக் கூறப் பாடல்களின் அடி எண்ணிக்கை இடம் தந்தது. அதனால் நெடுந்தொகை என்ற பெயர் மறக்கப்பட்டு அகநானூறு என்றே வழங்கலாயினர்.

இதனைத் தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. தொகுத்தவர் உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மர். காலப் பழைமையால் இப் பெயர்கள் பற்றிய உண்மை வரலாறு தெரிந்திலது. அடிவரையறைப் படி தொகுத்திருப்பதைப் பார்த்தால், இது தனிமுயற்சியாலன்றி, கூட்டுமுயற்சியால் உருவானவை என எண்ண இடம் ஏற்படுகிறது.

நீண்ட பாடல்களாதலால் இவற்றில் புறச்செய்தி உவமையாகவோ, அடையாகவோ கூடுதலாக விரவி வரும். பாரதம் பாடிய பெருந்தேவனார் சிவபெருமான் மீது கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார்.

இத் தொகுப்பில் குறிக்கத் தக்க சில செய்திகள் உள. முதல் 120 பாடல்கள் **களிற்றியானை நிரை** எனவும் அடுத்த 180 பாடல்கள் **மணிமிடை பவளம்** எனவும் இறுதி 100 பாடல்கள் **நித்திலக் கோவை** எனவும் பெயரிடப்பட்டுள்ளன.

இந்நூலில் 1, 3, 5, 7, 9 என ஒற்றைப்பட வருவன எல்லாம் பாலைப்பாடல்கள். இரண்டும் எட்டும், பன்னிரண்டும் பதினெட்டும் என இவ்வாறு வருவன எல்லாம் குறிஞ்சிப்பாடல்கள். எனவே பாலைத்திணை பற்றி 200 பாடல்களும் குறிஞ்சித்திணைபற்றி 80 பாடல்களும் உள. 4, 14, 24, 34 என வருவன எல்லாம் முல்லைத் திணையின. எனவே அவை நாற்பது பாடல்கள். 6, 16, 26,36 என வருவன எல்லாம் மருதம். எனவே அவையும் நாற்பது பாடல்கள். 10, 20, 30, 40 என வருவன நெய்தலாதலின் அவையும் நாற்பது பாடல்கள். ஆகவே

| | | |
|---|---|---|
| முல்லைப்பாடல்கள் | - | 40 |
| மருதப்பாடல்கள் | - | 40 |

| | | |
|---|---|---|
| நெய்தல்பாடல்கள் | - | 40 |
| குறிஞ்சிப் பாடல்கள் | - | 80 |
| பாலைப்பாடல்கள் | - | 200 |

ஒரு பத்தில் 1, 3, 5, 7, 9 பாலை; 2, 8 குறிஞ்சி; 4 முல்லை, 6 மருதம், 10 நெய்தல் என்று மாறி மாறிக் கோத்ததிலுள்ள நுட்பம் புலனாகவில்லை.

இந்நூலில் களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக் கோவை போன்ற சொற்கள் அவ்வத் தொகுதியில் வராது, வேறு தொகுதியில் வருகின்றன. எனவே யானைக் கூட்டமும் சிறியதும் பெரியதுமாய்க் கலந்து வரும்; மணியும் பவளமும் நிறம் மாறி வரும்; முத்துக்களும் சிறியனவும் பெரியனவும் கலந்து வரும். இப் பொதுக் காரணம்பற்றி இவை பெயரிடப் பெற்றிருக்கலாம்.

இதற்கு முதல் 90 பாடல்களுக்குப் பழைய குறிப்புரை ஒன்று உளது. இதன் முதல் பதிப்பாசிரியர் வே. இராச கோபாலாச்சாரியார் ஆவார். அவர் முதல் 70 பாடல்களுக்கு மட்டும் உரை எழுதியுள்ளார். தஞ்சை நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரும் கரந்தைக் கவியரசு இரா. வேங்கடாசலம் பிள்ளையும் நூல் முழுமைக்கும் தெளிவான விளக்கவுரை எழுதிப் பதிப்பித்துள்ளனர்.

அகநானூற்றைத் திணை அடிப்படையில் முன்பே வரையறைப் படுத்தித் தொகுத்திருப்பதால், இன்ன பாடல் இன்ன திணை என அறிவதெப்படி என்பதையும் திணை மயக்கம் எதில், எவ்வாறு, எந்த அளவு வரும் என்பதையும் ஒரு பாடலில் முதல் கரு உரி அமைவதெப்படி என்பதையும் அகப்பாடலில் புறச்செய்திகள் கலக்கும் மரபு பற்றியும் அறிய வாய்ப்புளது.

இந்நூலில் மட்டுமே ஒரு பாடல் கூட சிறு சிதைவுமின்றிக் கிடைத்துள்ளது. இவற்றைக் குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, நெடுந்தொகை நானூறு என்றே அழைக்க வேண்டும்.

தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதய்யர், இவற்றில் சரியாக நானூறு, நானூறு பாடல்கள்தானா, சொல்லிவைத்தது போலக் கிடைத்திருக்கும்; தொகுத்தவர்கள் புதிதாகச் சேர்த்தோ, கழித்தோ திட்டமிட்டே தொகுத்திருக்க வேண்டும் என்பார்.

அகநானூறு என்பதற்கு ஏற்பப் புற நானூறு எனவும் தொகுத்திருப்பதால், அதுவும் இத்திட்டமிடலில் சேர்ந்ததென எண்ண இடமுளது.

# சங்க காலப் பின்னணி : ஒரு தொலைநோக்குப் பார்வை

அக்காலச் சூழ்நிலை நினைவுடன் சங்கப் பாடல்களைப் படிக்க வேண்டும்; மனித உணர்வுகள், மனநிலைப் பதிவுகள் உணர்ச்சிப் பெருக்குகள் ஆகியவற்றால், சங்கப் பாடல்கள் மனித இனம் உள்ளவரை பொருந்தக் கூடியன.

ஆனால் அடர்ந்துபடர்ந்த இயற்கைச் சூழல், மக்கள் தொகைக் குறைவு, பிற ஆடுமாடு பறவை இனங்களின் மிகுதி யாவும் மனக் கண்ணில் தோன்றுகின்றன. மக்களின் உடற்கட்டு, பலமடங்கு, இன்று கோயிற்சிற்பங்களில் காண்பதுபோல் வலுவும் தோற்றமும் மிக்கிருந்தன. பெண் வெகு விரைவில் பூரித்து வளர்ந்து பூப்பெய்தி விடுதலும் அங்ஙனம் பூப்பெய்தியதும் மணம் முடித்தலும் அன்றைய நடைமுறை வாழ்வாயிருந்தன. ஆடவன் அளவு கடந்த உடற்கட்டு, வலிமையால் பாலுணர்வில் இடையறாது ஈடுபடும் வழக்கமிருந்தது. தன் மனைவி பூப்பெய்திய காலத்தும் கருவுற்றுக் கருவுயிர்த்த காலத்தும் ஒருசில திங்கள் கூட அவன் பொறுத்திராது, பரத்தையரை நாடும் பழக்கத்திற்கு ஆட்பட்டான்.

உடற்கட்டு மட்டுமன்றி, அவன் உண்டவை, பருகியவை எல்லாம் அவனைப் போர்க்களத்தே விளையாடும் யானை, புலி, சிங்கம் என எண்ணுமளவு, அவற்றை ஒத்தனவாயிருந்தன. இத்தகைய சூழலில் பலதார மணம், பரத்தையிற்பிரிவு என்பன சமுதாயப் பொதுமை நோக்கில், குற்றமாகக் கருதப்பட்டில; ஆனால் அவை குறையாகக் கருதப்பட்டு, அக் குறைகளை அகற்றி வாழ்வோரும் இருந்தனர்.

ஒரு வீரநிலைக் கால மக்களை, வேளாண்மைக் கால மக்களாக மடை மாற்றம் செய்யும் முயற்சியாகச் சங்கப் பாடல்கள் காணப்படுகின்றன. அவர்களிடையே பழங்குடி மக்களின் இயல்பும் பண்பட்ட மக்களின் வளர்ச்சியும் கலந்து காணப்படுகின்றன.

சங்கப் புலவர்கள், சமுதாயத்தை - மக்கள் மன்பதையை உயர்வு நோக்கில் வளர்த்தெடுக்கும் பாங்கில் பாடிப் பாடி மக்கள் மனத்தைப் பண்படுத்தியுள்ளனர். தரிசு நிலமாய், புறம் போக்காய்க் காடு மேடாய்க் கிடந்த

நிலத்தை, பண்படுத்திச் செய்களாக்கி, பயிர் வளரும் கழனிகளாக, தோட்டங்களாக, துரவுகளாக மாற்றுவது போல, மக்களின் வாழ்வையும் மனநிலைகளையும் பண்படுத்தும் முயற்சி சங்கப் பாடல்களில் காணப்படுகிறது.

பாடல்களுக்குச் 'செய்' – 'செய்யுள்' என்றும், புலவர்களை உழவர்களென்றும், பாடல்களை விளை பொருள்கள் போலவும், அவற்றைப் படைப்பதை உழவுத் தொழில் போலவும் கற்பனை செய்துள்ளனர். விளை பொருள்களைப் புதிது புதிதாக விளைவித்து உண்பது போல, புதிய நூல்களை 'விளைவித்து' அவற்றைக் கேட்டு (உண்டு, பருகி) வாழ்ந்தனரென வரும் பல்வேறு உவமை, உருவகங்களையும் தொகுத்து நோக்க வேண்டும்.

'புலம்' என்ற சொல் நிலத்தையும் புலமையையும் ஒரு சேர உணர்த்தும். இருவகைச் 'செய்'யுள் பற்றிய ஒப்புமைகள் மிகப்பலவுள. நிலத்தைப் பண்படுத்துவது தொடங்கியே, மனித மனத்தைப் பண்படுத்துவது தொடர்ந்துளது.

மதுவுண்ணல், புலாலுண்ணல், பரத்தமை மூன்றும் குற்றமாகக் கருதப்படாததுடன் அன்றாட வாழ்க்கையாகவும் இருந்தன. இவற்றை நேரே கடிந்து பாடிய பாடலெதுவும் சங்கப் பாடல்களில் இல்லை. தோழியும், தலைவியும் தலைவனின் பரத்தைமை ஒழுக்கத்திற்காக வருந்தியவை, 'அறநூல்' நெறியாக உணர்த்தப்பட்டனவல்ல. சங்க கால மன்னர்கள் ஏறத்தாழ அனைவருமே வேள்வி ஆசையில் மூழ்கி, ஆரிய நெறியிற் கலந்ததற்கு உயிர்க்கொலை வேள்வியும் சோம பானமும் அவர்களின் பழக்கத்துடன், ஒத்துப்போனதுடன், மேற்கொண்டு உற்சாகமும் ஊக்கமும் தந்ததே காரணமாகும்.

ஆரியமும் சமஸ்கிருதமும் இங்கு கால்கொள்ள நேர்ந்ததற்கு, முதற்படி இதுதான்.

கிப்பன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய '**உரோமானியப் பேரரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்**' என்ற நூலைப் போலத் தமிழக '**ஆள்வோரின்**' எழுச்சியும் வீழ்ச்சியும் பற்றி எழுத நிரம்ப வாய்ப்புளது.

திருவள்ளுவர் ஒருவரே இவற்றில் பெரும் புரட்சியாளராகக் காணப்படுகிறார். பொதுவாக, மனித வாழ்வைத் திருத்தி, உயர்த்திப் பண்படுத்த முயன்ற சங்கப் புலவர்களின் சிந்தனைகள் 'வானம் அளந்ததனைத்தும் அளந்திடும்' வளமுடையினவாயின.

## 1

## இன்பம் எளிது

களவொழுக்கம் என்பது இரண்டு திங்கள்களுக்கு உட்பட்டதென்பர். அதற்குள் திருமணம் முடிந்துவிட வேண்டும். தலைவன் பொருள்தேடி வந்து, 'பரிசம்' போட்டு மணம் செய்து கொள்ள வேண்டுமென்ற வழக்கமும் இருந்தது. இதை 'வரைவு இடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல்' என்பர். இதனாலும் திருமணம் நிகழக் காலம் நீட்டிக்கலாம். தலைவன் களவுக் காலத்தில் அடிக்கடி தலைவியைச் சந்திக்க வருவான். இதற்குத் தோழியின் துணையை நாடுவான். தலைவியை அவன் பகலிற் சந்திக்க வருவதைப் பகற்குறி என்றும் இரவில் வருவதை 'இரவுக்குறி' என்றும் அழைத்தனர்.

தலைவன் சிலபோது இவ்வாறு சந்தித்தலுடன், திருமண முயற்சியின்றி நீட்டித்தால், தோழி பகலில் வருவானை இரவில் வா என்றும் இரவில் வருவானைப் பகலில் வா என்றும் இரு பொழுதும் வரவேண்டாம் என்றும் தாயர் இக்களவை அறிந்து, தலைவியை இற்செறித்தனர் என்றும் (வீட்டை விட்டுவெளியிற் போகாது தடுத்து நிறுத்தினர் என்றும் ) இவ்வாறு கூறித் தலைவனைப் பலவாறு அலைக்கழித்துத் திருமணத்திற்குத் தூண்டுவாள்.

ஒரு தலைவன் இவ்வாறு பகலில் வந்தபோது தோழி, தலைவியை 'இற்செறித்தனர்' என அறிவித்து, விரைவில் திருமணம் செய்துகொள்ளுமாறு கூறுகிறாள்.

கோழ்இலை வாழைக் கோண்மிகு பெருங்குலை
ஊழுறு தீங்கனி, உண்ணுநர்த் தடுத்த
சாரல் பலவின் சுளையொடு, ஊழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்

வளமான இலைகளையுடைய வாழையின் பெரிய குலையில் இருந்தது முதிர்ந்த இனிய வாழைப்பழம். தன்னை உண்பாரைப் பிறவற்றை

விரும்பாது தடுக்கும் அத்துணை இனிமையுடையது மலைச் சாரலிலே உள்ள பலாச்சுளை. இவை இரண்டும் உதிர்ந்ததால், பாறையில் உள்ள பெரிய சுனைநீரில் கலந்து, நன்கு முற்றிப்போன மதுவாகியது.

அறியாது உண்ட கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது
நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்
குறியா இன்பம் எளிதின் நின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்தும் நாட!

அம் மதுவை, நீரென நினைத்து அறியாது குடித்த கடுவன் (ஆண் குரங்கு) மயக்கத்தால் பக்கத்தேயுள்ள மிளகுக் கொடி படரும் சந்தன மரத்தில் ஏறமாட்டாது, கீழே கொட்டிக்கிடக்கும் நறிய பூப் படுக்கையில் மகிழ்ச்சியுடன் படுத்துறங்கும். இத்தகைய எதிர்பாராத இன்பத்தை, தலைவ! நின்மலையிலுள்ள பல விலங்குகளும் கூட எளிதில் அடையும் நாடனே!

குறித்த இன்பம் நினக்கு எவன் அரிய

விலங்குகளே எதிர்பார்த்திராத இன்பத்தை அடையும் போது, நீ திட்டமிட்டு எதிர்பார்த்த இன்பம் உனக்கு எவ்வாறு அரிதாகும்? (நீ நினைத்தால் முடியும்).

வெறுத்த ஏள் வேய்புரை பணைத்தோள்
நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்டு
இவளும் இனைய ளாயின்

மிக்க அழகினையுடைய. மூங்கிலைப் போன்ற பருத்த தோள்களை உடைய அவளும், கட்டுப்படுத்த முடியாத மனத்துடன் நின்னைக் காணும் அவாவுடையவளாக இருக்கின்றாள்.

தந்தை

அருங்கடிக் காவலர் சோர்பதன் ஒற்றிக்
கங்குல் வருதலும் உரியை

ஆகவே நீ இவள் தந்தையுடைய காக்குந்திறன் மிக்க காவலர்கள் சோர்வுற்றிருக்கும் சமயம் பார்த்து, இரவில் வந்து இவளைச் சந்தித்தற்குரியை! (இயலுமேல் வருதல் கூடும். ஆயினும் அது கடிது என்பது கருத்து.)

**பைம்புதல்**

**வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன**
**நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே.**

பசிய புதரிடையே நிற்கும் வேங்கைமரமும் ஒளிபொருந்திய பூங்கொத்துக்கள் விரிந்தன. மிக்க வெண்மை நிற மதியும், நிரம்பி முழுமதியானது!

இதில் வேங்கை பூத்துக் குலுங்கும் நாள், தினைப் பயிர் முற்றி, அறுவடை செய்யும் காலமாகும்; மேலும் முழுமதி நாளும் திருமண நாளாகும். தினை அறுவடையானால், தினைப்புனம் காக்கும் பணி முடிவடைந்துவிடும். எனவே இனித் தலைவியைக் காண்பதரிது; திருமணத்திற்குகந்த நாளும் வந்துவிட்டதால், உடனே அதற்கு முயல்க எனத் தோழி குறிப்பால் தலைவனுக்கு அறிவுறுத்துகிறாள்.

**கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை**
**ஊழுறு தீங்கனி, உண்ணுநர்த் தடுத்த**
**சாரல் பலவின் சுளையொடு ஊழ்படு**
**பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்**
**அறியாது உண்ட கடுவன் அயலது**
**கறிவளர் சாந்தம் ஏறல்செல் லாது**
**நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்**
**குறியா இன்பம் எளிதின் நின்மலைப்**
**பல்வேறு விலங்கும் எய்தும் நாட!**
**குறித்த இன்பம் நினக் கெவன் அரிய**
**வெறுத்த ஏஎர் வேய்புரை பணைத் தோள்**

நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்டு
இவளும் இனைய ளாயின் தந்தை
அருங்கடிக் காவலர் சோர்பதன் ஒற்றிக்
கங்குல் வருதலும் உரியை! பைம்புதல்
வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே

(கபிலர், குறிஞ்சி, அகம். 2)

கோழ்இலை - வளமான பெரிய இலை. கோண் மிகு - காய்கள் மிக்கு, ஊழுறுதல் - முற்றுதல். கறி - மிளகுக்கொடி. நெடுவெண் திங்கள் - முழுநிலவு நாள். ஊர்கொள்ளுதல் - நிரம்புதல்.

நறுவீ அடுக்கம் - பூப்படுக்கை. வீ - கீழே உதிர்ந்த பூ, குறியா இன்பம் - எதிர்பாராது கிடைக்கும் இன்பம்.

தலைவன் நாட்டில் விலங்குகளும் எதிர் பாராத இன்பத்தைப் பெறுகின்றன. எனவேதான் தலைவன் நினைத்தால், காதலியின் பெற்றோரிடம் பேசி முடித்து, திருமணத்தை விரைவில் நடத்திவிட முடியும் எனத் தோழி தூண்டுகிறாள்.

அவ்வாறு செய்யாமல், சுனை நீரை அறியாது குடித்த குரங்கு, தன்னை மறந்த மயக்கத்தில், மகிழ்ச்சியுடன் பூப்படுக்கையில் படுத்துக் கிடப்பது போலத் தலைவன் களவொழுக்கத்திலேயே மகிழ்ந்து, திருமண நினைவின்றி இருப்பது தவறென்ற உள்ளுறை, தலைவனுக்கு இடித்துரைப்பதாகிறது.

## 2

## முதல் திறனாய்வு

### சங்கப் பாடல்களின் கட்டமைப்பு

சங்க இலக்கியம் திணை இலக்கியம், அகம் புறம் என்ற கட்டமைப்புடையது என்பதையே திரும்பத் திரும்பக் கூறி வருகிறோம். பாடற்

கருத்தை விட, அப் பாடலை கருத்து உணர்விற்கேற்ப வடிவமைத்திருப்பது, உலக இலக்கியங்களில் அருகிக் காணப்படுவது. சங்கப் பாடல்களில் ஒவ்வொன்றிலும் இத்திறன் அமைந்துளது. ஒரு பாடலின் அடிக்கருத்தைப் பத்து அடியிலும் பாடலாம்; நூறு அடியிலும் பாடலாம். ஒவ்வோர் அடியும் அம் மூல அடிக்கருத்தை நோக்கியிருக்க வேண்டும். ஒவ்வொரு சொல்லும் மட்டுமன்றி, ஒவ்வோர் அடைமொழியும் கூட, அவ் அடிக்கருத்தை நோக்கியாக்கப் பட்டிருக்க வேண்டும். இந் நுட்பத்தைக் கண்டறியும் போதுதான், நாம் வியப்பின் உச்சத்தை அடைகிறோம்.

தலைவன் கார்காலம் வந்ததும் வருவதாகக் கூறிச் சென்றான். அதன்படி கார்காலம் வந்துவிட்டது. தலைவன் வரவை நொடிக்கு நொடி எதிர்பார்த்திருக்கும் தலைவியிடம் தோழி, கார்காலம் தொடங்கியதற்கு இசையத் தலைவனும் வந்துவிட்டான் என முன் கூட்டிக் கூறி ஆறுதல் சொல்லுமிடம் இது. இச் சூழலில் தோழி கூற்றில் கார்கால வருணனை, தலைவனின் பாசமிகு காதல், தலைவியது அழகுநலன் காக்க அவன் கூறியபடி வருதல் ஆகிய மூன்று செய்திகள் உள்ளன.

**முல்லை வைந்நுனை தோன்ற, இல்லமொடு**
**பைங்காற் கொன்றை மென்பிணி அவிழ**

முல்லைக்கொடியில் கூரிய அரும்புகள் தோன்ற, தேற்றா மரத்துடன், பசிய அடியையுடைய கொன்றை மரத்தின் மொட்டுக்கள் கட்டவிழ்ந்து மலர்கின்றன.

**இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பின்**
**பரல்அவல் அடைய இரலை தெறிப்ப**

இரும்பை முறுக்கிவிட்டாற்போன்ற கரிய கொம்பினையுடைய இரலை மான்கள், (மழைத்துளிகள் விழுந்ததால் நிரம்பிய) பள்ளங்களில் துள்ளிக் குதிக்கின்றன. பரல் – கற்கள். அவல் – பள்ளம்.

மலர்ந்த ஞாலம் புலம்புபுறக் கொடுப்பக்
கருவி வானம் கதழுறை சிதறிக்
கார்செய்தன்றே கவின்பெறு கானம்

பரந்த காட்டுநிலங்கள், நீரின்றி வாடிய நிலை போயொழிய மின்னல் முதலிய கருவிகளுடன் இடிஇடித்துப் பெய்யும் பெரிய மழைத்துளிகள் எங்கும் சிதறுமாறு, கவின்மிகு கானம் கார்காலத்தைப் பொழிந்து காட்டியது.

குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்த் தன்ன வாங்குவள் பரிய.

(தலைவன் ஏறிவரும் தேரில் பூட்டிய) கொய்த பிடரிமயிர்களுடன், புரவிகளின், தலையாட்டங்கள் பொலிவுற்று அசைய, யாழ் நரம்பு ஒலித்தாற்போன்று, இழுத்துப் பிடித்த கடிவாளம் நெகிழத் தேர் விரைகிறது.

பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்

பூக்கள் நிரம்பிய சோலைகளில் துணையுடன் தேனுண்டு தங்கும் வண்டுகள், மணி ஓசை கேட்டு அஞ்சக் கூடுமென்று, தேரில் பூட்டிய மணிகளின் நாவைக் கட்டிவிட்டு, அத் தேரை ஓடச் செய்த குறும்பொறை நாடனாம் தலைவன் அதோ வருகின்றான் பார்!

எதற்கு? உன் அழகை நினைந்து நுகர்வதற்கு!

கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத்து அமன்ற காந்தள்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி அரிவைநின் மாண்நலம் படர்ந்தே

எப்பொழுதும் ஆரவார விழாக்களையுடைய உறையூருக்குக் கிழக்கே உள்ள, நீண்ட பெரிய குன்றத்தில் நெருங்கி வளர்ந்த காந்தள் மலர்களைச் சூடியதால், நின் மேனியே நறுமணம் உடையதாகும். அத்தகைய தொடியணிந்த உன் அழகை நினைந்து, தலைவன் விரைந்து வருகின்றான்.

கார்காலம் வந்துவிட்டதால், தலைவியின் அழகை நினைந்து தலைவன் விரைந்து திரும்புகிறான் - என்பதே அடிக்கருத்து.

முல்லை வைந்நுனை தோன்ற, இல்லமொடு
பைங்கால் கொன்றை மென்பிணி அவிழ
இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பின்
பரலவல் அடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புபுறக் கொடுப்பக்
கார்செய் தன்றே கவின்பெறு கானம்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவல் புரவி
நரம்பார்த் தன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத்து அமர்ந்த காந்தள்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி அரிவைநின் மாணலம் படர்ந்தே

(குறுங்குடி மருதனார், அகம். 4)

(வைந் நுனை - கூர்மையான அரும்பு. மா இரு - பெரிய கரிய (மான் கொம்பு). புலம்பு - நீரற்ற வருத்தம். கதழ் உறை - பெரும் மழைத்துளிகள்

விரைந்து விழுதல். குரங்கு – வளைந்த. சுவல் – பிடரி மயிர், வள் – வார். பொங்கர் – பூங்கா . ஆர்த்த – கட்டிய. கறங்குதல் – ஆரவாரித்தல். அமன்ற – நெருங்கி மிகுதியாகப் பூத்த அதைச்சூடியதால் தலைவியின் மேனி நறுமண முடையதாகிறது.)

இப்பாடலுக்கு, 'நோக்கு' என்னும் திறனாய்வு அடிப்படையில், பேராசிரியர் விரிவான விளக்கம் எழுதியுள்ளார்.

தொல்காப்பியர் ஓர் இலக்கணி மட்டுமல்லர், ஒரு இலக்கியக் கொள்கையாளருமாவார் என்று விளக்கி, நோக்கு, மெய்ப்பாடு, உள்ளுறை, இறைச்சி எனும் நான்கனுக்கும் தனித்தனிச் சிறுநூல் எழுதினேன். இன்று பலரும் அது பற்றி விரிவாக எழுத, அவை வழிவகுத்தன.

'நோக்கு' – என்பது பற்றித் தொல்காப்பியர் ஒரே ஒரு நூற்பா எழுதியுள்ளார். அதற்கு இளம்பூரணரும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் தனித்தனி விளக்கம் எழுதியுள்ளனர்.

மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே (1361)

ஒரு பாடலில் – அல்லது ஒரு படைப்பிலக்கியத்தில் கூட இதைப் பொருத்திப் பார்க்கலாம். முதலில் ஒரு செய்யுளின்கண் ஒரு சொல், அசை, தொடர், அடி என எல்லாம் காரணம் கருதி, அவற்றை உற்று நோக்கிப் பயன்கொள்ளுமாறு செவ்விதாகப் பாடப் பெற வேண்டும். இந்த இடத்தில் அளபெடை ஏன் ஒரு மாத்திரை கூடியதேன் என வினவினால், அதற்குப் பொருந்திய – ஒரு விடை கிடைக்குமாறு அது அங்கு பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

ஒரு மாத்திரையே எவ்விதப் பாடலுக்கும் சிற்றெல்லை. அது முதல் அனைத்தும் வெற்றுரையோ, பயனில்லாதவையோ இன்றிப் படைக்கப் பெறவேண்டும். சுவை பயக்குமாறும் மேலும் மேலும் 'மறித்து நோக்கிப்' பயன் கொள்ளுமாறும் அமைதல் வேண்டும்.

இப் பாடலில் பேராசிரியர் 'நோக்கு' என்ற கோட்பாட்டை, ஏற்றிக் காட்டி விளக்குகின்றார். ஒரு கொள்கையை, ஒரு பாடலில் பொருத்திக் காட்டித் திறனாய்வது தான் இன்றைய நிலை. இதனைத் தமிழில் மட்டுமன்றி, பிறமொழிகள் பலவற்றுக்கும் முன்னதாகவே, உலக மொழிகளிலேயே முதன் முதலாகத் திறனாய்வுக்கலையைத் தொடங்கிவைக்கின்றார், பேராசிரியர்.

இதனால்தான் இது ஒரு தமிழ் நெறித் திறனாய்வு என்றும் இக்கோட்பாட்டை உலக இலக்கியம் எதனுடனும் பொருத்திப் பார்க்கலாம் என்றும் எழுதியுள்ளேன்.

பேராசிரியர் இப்பாடலின் அடிக்கருத்தை முதலில் தெரிவு செய்கிறார்.

தலைவன் விரைவில் திரும்புவான் எனத் தலைவியிடம் தோழி வற்புறுத்துவதே, இப் பாடலின் அடிக்கருத்து.

இப்பாடலின் கருத்தாக்கம் மூன்று பகுதிகளாக அமைந்துளது என்பது பேராசிரியர் கருத்து. நோக்கு அடிப்படையில், ஒரு பாடலின் சிற்றுறுப்பு முதல் அனைத்து உறுப்புக்களையும் கூட்டி உணர வேண்டும் – முழுமையுடன் உறுப்புகளை இணைத்து நோக்க வேண்டும் – முழுமையும் உறுப்புகளும் பொருந்தி வருமாற்றை ஒப்பிட்டு உணரவேண்டும் எனத் தொடங்குகிறார் அவர்.

> "முல்லை என்பது முதலாகக் கானம் என்பது ஈறாக நாற்சொல்லியலான் யாப்பு வழிப்பட்டதாயினும் பருவம் காட்டி வற்புறுக்கும் தோழி பருவந் தொடங்கிய துணையே காண் என்று வற்புறுத்தினாள் என்பது நோக்கி உணர வைத்தான்!" (நாற்சொல் – பெயர், வினை, இடை, உரி).
>
> "உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன் என்னும் துணையும் தலைமகனது காதல் மிகுதி கூறி வற்புறுத்தினாளென்பது நோக்கி உணர வைத்தான்."

"ஒழிந்த அடிநிலை காறும் பிரிந்த காலம் அணித்தெனக் கூறி வற்புறுத்தினாளென்பது நோக்கி உணரவைத்தான்."

'வற்புறுத்துதல்' என்ற அடிக்கருத்திற்கு தலைவன் வருவதாகக் கூறிய கார் காலம் இப்போதுதானே தொடங்கியுளது; அவனும் மிகுந்த காதலுடையவன் தானே; அவன் பிரிந்த காலமும் இப்போது தானே என மூன்று காரணம் காட்டினாளாம் தோழி. இவை மூன்றும் அடிக்கருத்திற்குத் துணை செய்யும் தலைமைக் கருத்துக்கள். இவற்றை மேலை நாட்டார் அடிக்கருத்தும் துணைத் தலைமைக் கருத்தும் என்பர். (Theme and Motif)

இனி இப்பாடலிலுள்ள ஒவ்வோர் அடைமொழி முதல் அனைத்தையும் சுட்டிக் காட்டி, பாடலின் மையக் கருத்தாகிய ஆற்றியிருத்தலுக்கே அவை துணையாகும் விதத்தை, அவர் காட்டும் அழகு மிகு சிறப்பும் திறமையும் புலமையும் சான்றதாகும்.

"முல்லை என்னாது 'வைந்நுனை' என்றதனான அவை அரும்பியது அணித்தென்பது பெறப்பட்டது, சின்னாள் கழியின் வைந்நுனை ஆகாது மெல்லென்னுமாகலின்."

"இல்லமும் கொன்றையும் மெல்லென்ற பிணி அவிழ்ந்தன என்றான், முல்லைக் கொடி கரிந்த துணை அவை முதல் கெடாது முல்லை அரும்பிய காலத்து மலர்ந்தமையின்."

"இரலை மருப்பினை இரும்பு திரித்தன்ன மருப்பு என்றதூஉம், நீர் தோய்ந்தும் வெயிலுழந்த வெப்பம் தணிந்தில, இரும்பு முறுக்கி விட்ட வழி வெப்பம் மாறா (விட்ட) வாறு போல வெம்பா நின்றன இன்னும் என்ற வாறு."

" 'பரலவலடைய இரலை தெறிப்ப' எனவே பரல்படு குழிதோறும் தெளிந்து நின்ற நீர்க்கு விருந்தின வாகலான் பல காலம் நீர் பருகியும் அப் பரலவலினது அடைகரை விடாது துள்ளுகின்றன என அதுவும் பருவம் தொடங்கினமை கூறிய வாறாயிற்று."

" 'கருவி வானம் கதழுறை சிதற' என்பதூஉம் பல உறுப்பும் குறைபடாது தொக்கு நின்றன மேகம், தமது வீக்கத்திடைக் காற்றெறியப் படுதலின் விரைந்து துளி சிதறினவென்று அவற்றையும் புதுமை கூறினான்."

"எனவே இவை எல்லாம் பருவம் தொடங்கி அணித் தென்றமையின், வற்புறுத்தற்கு இலேசாயிற்று."

" ' குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி 'என்பது, கொய்யாத உளை பல்கியும் (பிடரிமயிர்), கொய்த உளை பலகாலும் கொய்ய வேண்டுதலுமுடைய குதிரை என்றவாறு; எனவே தனது மனப் புகழ்ச்சி கூறியவாறு. அத்துணை மிகுதியுடைய குதிரை பூட்டின வாரொலி விலக்காது மணிஒலி விலக்கி வாரா நின்றான், அங்ஙனம் மாட்சிமைப் பட்ட மான் தேரனாதலான் என்ற வாறு. அதற்கென்னை காரணம் எனின், 'துணையொடு வதியும் தாதுண் பறவை' எனவே, பிரிவஞ்சி என்றவாறு. மணி நா ஒலி கேட்பின் வண்டு வெருவு மாகலின் அது கேளாமை மணி நாவினை இயங்காமை யாப்பித்த மாண் வினைத் தேரனாகி வாராநின்றானென இவையெல்லாம் தலை மகள் வன்புறைக்கு ஏதுவாயின."

"'கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது, நெடும் பெருங்குன்றத்து அமன்ற காந்தள்' தெய்வமலை யாகலான், அதனுள் அமன்ற காந்தளைத் தெய்வப் பூ எனக் கூறி, அவை போதவிழ்ந்தாற் போல அவர் புணர்ந்த காலத்துப் புதுமணம் கமழ்ந்தநின் கைத் தொடிகள் அவை அரியவாகிப் பிரிந்த காலத்துப் போன்று வடிவொத்து மணம் குறைபட்ட துணையேயால், அவர் பிரிந்து செய்த தன்மையின் என இதுவும் வன்புறைக்சே உறுப்பாயிற்று. இவ்வாறே பலவும் நோக்கி உணர்தற்குக் கருவியாகிய சொல்லும் பொருளும் எல்லாம் 'மாத்திரை முதலா அடிநிலை காறும்' என அடங்கக் கூறி நோக்குதற்குக் காரணம் நோக்கென்றான் என்பது."

'வன்புறை' - என்பது அகத்திணையில் ஒரு கூற்று, தோழி தலைவியை வற்புறுத்தி ஆற்றுவிப்பது. இப் பாடலில் ஒவ்வொரு சொல்லும் தொடரும் அது ஒன்றை நோக்கியே அமைந்திருப்பதைப் பேராசிரியர், திறனாய்ந்து கூறியிருக்கும் அழகு தனி நூலாக விரிக்கத் தக்கது.

## 3

## பேசும் பொற்சித்திரம்

## ஒரு மௌன நாடகம்

தலைவன் பொருள் தேடப் பிரிய எண்ணினான். தலைவி தன்னைத் தலைவன் பிரிவதற்கு இசையவில்லை. அவனோ தேர் முதலியவற்றை ஆயத்தம் செய்கிறான். அவள் முகம் வாடுகிறது.

அவன் பிரிந்து போக நினைக்கும் பாலை நிலக்காட்டை நினைத்துப் பார்க்கிறாள். முன்பு தன்னைப் பிரிய மாட்டேன் என அவன் சொல்லிய உறுதி மொழிகளை நினைக்கிறாள். காதலரைப் பிரிந்து வருத்துவது அறமாகுமா?

கையில் குழந்தையுடனும் கண்ணில் நீருடனும் அவன் எதிரே வந்து நிற்கின்றாள்.

அவள் விட்ட பெரு மூச்சில், குழந்தை தலையிற் சூடியிருந்த பூக்கள் வாடிப் போகின்றன.

இதனால் தலைவன் நெஞ்சம் அவனுக்குச் சொல்கிறது : கூட இருக்கும்போதே வாடும் இவள், நாம் பிரிந்தால் உயிர் பிழைப்பதரிது என்று கூறி, அவன் பிரிவதைத் தடுத்துவிடுகிறது.

பேசாமலே பேசும் இம் மோன நாடகத்தை, பாலை பாடிய பெருங் கடுங்கோ, மிகச் சிறப்பாகப் பாடியுள்ளார்.

அளிநிலை பொறாஅது அமரிய முகத்தள்
விளிநிலை கேளாள், தமியள் மென்மெல
குறுக வந்துதன் கூர்எயிறு தோன்ற
வறிது அகத்தெழுந்த வாயல் முறுவலள்

வருத்தம் மிக்க தலைவியின் சித்திரம் இது. 'எவ்வளவு கனிவுடன் பார்த்தாலும்' அதை ஏற்காது முகத்தை மாற வைத்துக் கொள்கிறாள். அன்புடன் அழைத்தாலும் அது காதில் விழாதது போல நடந்துகொள்கிறாள். மெல்ல மெல்ல, தன் சிவந்த பாதங்கள் பட்டு நிலம் சுவடுபடும்படி அருகே நடந்து வந்து, தன் பொய்யான புன்முறுவலைக் காட்டமுயல்கிறாள்.

(அளி நிலை – அன்புடன் பழகுதல். அமரிய – வேறுபட்ட. விளிநிலை – கூப்பிடுதல். மண்தரையில் காற்சுவடு பதியும்படி அத்துணை வருத்தத்துடன் – மனச்சுமையுடன் நடக்கின்றாள். எயிறு – பல்வரிசை. வாய்அல் – உண்மையில்லாத புன்னகை.)

கண்ணியது உணரா அளவை ஒண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்

தலைவன் மனத்துள் பிரிய நினைத்ததை உணரு முன்னரே, தலைவி அவன் பொருளுக்காக என்று பிரிவதை ஒப்பாத மனத்துடன்,

முளிந்த ஓமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட்டு ஏய்ப்ப
உதிர்வன படூஉம் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
பாத்தி அன்ன குடுமிக் கூர்ங்கல்
விரல்நுதி சிதைக்கும் நிரைநிலை அதர
பரல்முரம் பாகிய பயமில் கானம்

காய்ந்த ஓமை மரங்கள் உள்ள மிகப்பழைய காட்டுப் பகுதியில் பளிங்கு போன்ற நெல்லிக் காய்கள் உயர்ந்த மேடான பாறைமேல், சிறார் விளையாடும் வட்டுக்கள் போல உதிர்ந்து கிடக்கின்றன. இவ்வாறான வெப்பம் தாக்கும் காட்டில், நன்கு தீட்டப்பட்ட கூரிய முனையையுடைய. வரிசையாக வைத்தன போன்ற உச்சித்தலையையுடைய கூரிய கற்கள் போவார் கால்விரல் நுனிகளைச் சிதைக்கும். இவ்வாறு வரிசையான, பல வழிப் பாதைகளைக் கொண்டன, பரல் கற்கள் கிடக்கும் வளமற்ற காடுகள் (பாலை நிலம்).

(முளிந்த– வெப்பத்தால் காய்ந்த. முதையல் – பழைமையான. மோடு – உயர்ந்த மேடு . வட்டு – விளையாடும் வட்டுக்காய். கவாஅன் – குன்றுகள். மாய்த்தல் – தீட்டுதல். மழுகு நுனை – தேய்ந்த முனை. குடுமி – உச்சி. அதர் – வழி. பரல்கற்கள் குவிந்த மேட்டு நிலம். முரம்பு – கரடு முரடான பாதை. பயம் – வளம்.)

**இறப்ப எண்ணுதி ராயின் அறத்தாறு**
**அன்றுஎன மொழிந்த தொன்றுபடு கிளவி**
**அன்ன வாக என்னுநள் போல**
**முன்னம் காட்டி முகத்தின் உரையா**
**ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து ஒற்றி**

இத்தகைய காட்டுவழியைக் கடந்து போக எண்ணுவீராயின், அஃது அறவழி அன்று (காதலரைப் பிரிவது அறமன்று) என்று முன்பு நீர் சொன்ன வார்த்தை, வெறும் வாய்ப் பேச்சாகவே இருந்து போகட்டும் என்பதைச் சொல்லாமலே முகக் குறிப்பைக் காட்டி உணர்த்தி, ஓவியம் போலப் பேசாது நின்று, பிரிவுக்கு உடம்படாமையைக் குறிப்பால் காட்டினாள்.

(இறத்தல் – கடந்து செல்லுதல். தொன்றுபடு கிளவி – முன்பு களவுக் காலத்தில் பிரியேன், பிரியின் உயிர் தரியேன்; உற்ற காதலரைப் பிரிதல் அறமன்று என்று தலைவன் கூறிய சொற்கள். முன்னம் – குறிப்பு, சைகை.

முகத்தின் உரையா – வாய் பேசாது, முகத்தாலேயே குறிப்பில் உணர்த்துதல். ஓவச் செய்தி – ஓவியம் பேசாது பேசுவது போல் நிற்கும் காட்சி. ஒன்று – உடம்படாமை. ஒற்றி – குறிப்பாலுணர்த்தி.)

**பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு**
**ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன்தலைத்**
**தூநீர் பயந்த துணையமை பிணையல்**
**மோயினள் உயிர்த்த காலை, மாமலர்**
**மணியுரு இழந்த அணியழி தோற்றம்**

அவள் நடந்துவந்த நிலம் அழுந்திப் பள்ளமானது. அவள் சொல்ல நினைத்ததை அவள் முகம் சொன்னது. கண்ணினுள் கருவிழிப் பாவையில் நீர் நிரம்ப அவனைப் பார்த்தாள். அவள் தன் மார்புடன் அணைத்த புதல்வனின் தலையிற் சூடிய, தூய நீரில் மலர்ந்த பூங்கண்ணி, அவளது பெரு மூச்சால் வாடியது. (துணையமை பிணையல் – இரண்டிரண்டாகக் கட்டிய மலர்க் கண்ணி. உயிர்த்தல் – பெருமூச்சு விடுதல்.)

**கண்டே கடிந்தனம் செலவே, ஒண்தொடி**
**உழையம் ஆகவும் இனைவோள்**
**பிழையலள் மாதோ பிரிதும் நாம் எனவே.**

"தொடியணிந்த இவள் நாம் பக்கத் திருக்கவும் இவ்வாறு வருந்துகிறாள். இனி நாம் பிரியின் பிழைத்திராள் போலும். ஆகவே, நெஞ்சமே! இதனைக் கண்டே நாம் பிரிவைத் தவிர்த்தோம்!" (கடிந்தனம் – கை விட்டோம் . உழை – பக்கம். இனைதல் – வருந்துதல்.)

இப் பாடலை அடிப்படையாகக் கொண்டு, பாலைத் திணைப் பாடல்களை விளக்கி, 'ஓவச்செய்தி' எனத் தனி நூலே எழுதினார், மு. வரதராசனார்.

இதனைப் பேசாமலே நடக்கும் ஒரு நாடகமாக நடித்துக் காட்டலாம். அவள் பிரிவிற்கு அஞ்சுவதற்கு, அவன் செல்ல நினைக்கும் காட்டின் கொடுமையும் ஒரு காரணம். இப் பாடலில் உள்ள ஒவ்வொரு சொல்லும், தொடரும் நுட்பமான உணர்வுகளின் வெளிப்பாடாக உள்ளன. ஒரு குறும்படக் காட்சிக்குரிய கருவும் பின்புலமும் கூட இதிலுள்ளன.

ஒரு பெண் கணவனுடன் சிறு ஊடல் கொண்டு, வருத்தமும் கோபமுமாக இருக்கும்போது, இப்பொழுது எவ்வாறு பேசாமலே நடந்துகொள்வாளோ, அதே மெய்ப்பாட்டுடன் அன்றைய தலைவியும் நடந்து கொள்கிறாள்.

இம் மனநிலைப் பொருத்தத்தால், இப்பாடற் கருத்து இன்றும் நிலைபேறுடையதாகிறது.

அளிநிலை பொறாஅது அமரிய முகத்தள்
விளிநிலை கேளாள் தமியள் மென்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற
வறிதகத்து எழுந்த வாயல் முறுவலள்
கண்ணியது உணரா அளவை ஒண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த ஓமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட்டு ஏய்ப்ப
உதிர்வன படூஉம் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
பாத்தி அன்ன குடுமிக் கூர்ங்கல்
விரல்நுதி சிதைக்கும் நிரைநிலை அதர
பரல்முரம்பு ஆகிய பயம்இல் கானம்

இறப்ப எண்ணுதி ராயின் அறத்தாறு
அன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன வாக என்னுநள் போல
முன்னம் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்றுநினைந்து ஒற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு
ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன்தலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணியுரு இழந்த அணியழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே, ஒண்தொடி
உழையம்ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதும் நாம் எனினே.

(பாலை பாடிய பெருங் கடுங்கோ, அகம்.5)

## 4

## காற்றினும் விரையும் மனம்

வினை முற்றி (சென்ற காரியம் முடித்து) மீண்ட தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

காரியம் முடியும் வரை அதிலேயே கண்ணாக இருப்பவர்களுக்கு வீட்டு நினைவு வராது; முடிந்ததும் அக் கணமே வீட்டிற்குப் போய்விட வேண்டுமென்று மனம் விரையும்.

இங்கு தலைமகன் மிகத் தூரத்திலிருக்கிற, தலைவியது சிற்றூரை எண்ணிப் பார்க்கிறான். அவ்வூரையடைய தேரில் பூட்டிய குதிரைகள் மிகவும் விரைகின்றன. அதனை மேலும் மேலும் பாகன் துரத்துகின்றான். எனினும் தலைவனின் மனமோ இவற்றைவிட விரைவாகப் பறந்து, தூரத்திலுள்ள வீட்டிற்கே சென்று மனைவியை அடைகின்றது.

இம் மனநிலை விரைவு இன்னுமிருப்பதால் இத்தகைய பாடல்களைப் படிக்கும் பொழுது, அவை பழைய காலத்தனவாகத் தோன்றவில்லை.

தலைவியிருப்பது எத்தகைய ஊர்? எங்கே உளது? கொல்லனது கைத் தொழிலால் பொலிந்த, கூரிய குறிய குப்பிகளையுடையது வில்லம்பு. அம்புகளை அம்பறாத் தூணி நிறையப் பெய்து வைத்துள்ளனர்.

அவ் அப்பு என்ற குப்பி போன்று இலுப்பை அரும்பியுளது. சுற்றிலும் செப்புத் தகட்டைப் போன்ற தழைகள் உள்ளன. அவற்றிடையே நெய்யை ஒத்த இனிய துளையுள்ள இலுப்பைப் பூக்கள் உள்ளன. அவற்றில் பஞ்சுபோன்ற துய் கழன்று, காம்பினை நீக்கிக் காணத்தக்க துளைகள் உள்ளன. அவை வானின்று விழும் பனிக்கட்டி போல காற்றால் சிதறுண்டு விழுகின்றன. அவை பவளம்போல் சிவந்த மேடுகளில் இரத்தத்தின் மேலுள்ள கொழுப்பெனப் பரந்து கிடக்கின்றன. இத்தகைய இலுப்பை மரங்கள் அடர்ந்த சுரவழியிடையே, அழகிய குடிகளையுடைய அவளது ஊர் உளது.

கொல்வினைப் பொலிந்த கூர்ங்குறும் புழுகின்
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
அப்பு நுனை ஏய்ப்ப அரும்பிய இருப்பைச்
செப்படர் அன்ன செங்குழை அகந்தோறு
இழுதின் அன்ன தீம்புழல் துய்வாய்
உழுதுகாண் துளைய வாகி ஆர்கழல்பு
ஆலிவானில் காலொடு பாறித்
துப்பின் அன்ன செங்கோட்டு இயவின்
நெய்த்தோர் மீமிசை நிணத்திற் பரிக்கும்
அத்தம் நண்ணிய – அங்குடிச் சீறூர்

(புழுகு – அம்பு நுனியில் வைக்கும் குப்பி, அது மல்லிகை மொட்டுப் போலவும் இருக்கும். வீங்க – நிரம்ப. இருப்பைப் பூவையும் அதன் தழையையும் மலர்ந்த பூக்களின் தலையில் பஞ்சு போன்ற துய்யை உடைய அழகையும் அது கழன்று சிவந்த தரையில் விழுந்து பரந்து நெய்போல் கிடக்கும் மென்மையையும் இப்பகுதி படம் வரைந்து காட்டுகிறது. இருப்பையை இன்று இலுப்பை என்பர்.)

சொல்லவந்த இயற்கையை அல்லது ஒருபொருளை உவமை, உருவகத் தூரிகையால் வண்ணந்தீட்டி, உள்ளதை உள்ளபடி, அதன் நுண்ணிய தன்மை வரை காட்டுவது சங்கப் பாடலின் சிறப்பு.

கொடுநுண் ஓதி மகளிர் ஓக்கிய
தொடிமாண் உலக்கைத் தூண்டுரற் பாணி
நெடுமால் வரைய குடிஞையொடு இரட்டும்
குன்றுபின் ஒழியப் போகி, உரந்துரந்து
ஞாயிறு படினும் ஊர்சேய்த்து எனாது
துனைபரி துரக்கும் துஞ்சாச் செலவின்
எம்மினும் விரைந்து வல் எய்தி.

வளைந்த நுண்ணிய கூந்தலையுடைய மகளிர், பூண் பிடித்த நல்ல உலக்கையால் குத்தும் போது பாடும் வள்ளைப்பாட்டு, பெரிய மலையிடத்ததாகிய ஆந்தையின் ஒலியுடன் மாறி மாறி ஒலிக்கும். இத்தகைய குன்றுகள் ஒவ்வொன்றாகப் பின்னே போகத் தேர் விரைந்து முன்னோக்கிப் போகிறது. குதிரைகளின் வலிமையை ஊக்கி ஞாயிறு மறையினும் ஊர் மிகத் தூரத்திலுள்ளது என்று கருதாது, விரையும் குதிரைகளை மேலும் விரைந்தோடச்செய்து, சிறிதும் இடையில் தங்காமல் ஓடும் தேரைவிட, என்மனம் மிக விரைந்து போய்விட்டது. இவ்வாறு தலைவன் கூறுகின்றான். அவன் மனம் எங்கே போனது? ஓதி – கூந்தல். உலக்கைப் பாட்டு – வள்ளைப்பாட்டு. குடிஞை – ஆந்தை. குன்று பின்னே போகப் போகத் தேர் முன்னே போவதாகக் கூறுவதில், தேரின் விரைவு

தெரியப் படுத்தப்படுகிறது. உரம் – வலிமை. துனைபரி – இயல்பாகவே விரையும் குதிரைகள். துஞ்சாச் செலவு – இடையில் கணங்கூட நிற்காது ஓடும் விரைவு).

பன்மாண்

ஓங்கிய நல்லில் ஒருசிறை நிலைஇய்
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோள் எய்திக்
கை கவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை அன்ன பின்னகம் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ?
நாணொடு மிடைந்த கற்பின் வாள்நுதல்
அம்தீம் கிளவிக் குறுமகள்
மென்தோள் பெறநசைஇச் சென்றஎன் நெஞ்சே!

நாணத்துடன் கூடிய கற்புள்ள; ஒள்ளிய நெற்றியும் இனிய, பேச்சுமுடைய இளையாளாகிய என் மனைவியின் மெல்லிய தோளைத் தழுவ விருப்பப்பட்ட என்மனம் இவ்வாறு எம்மினும் விரைந்து போய்விட்டது.

"பலவாறு மாட்சிமைப்பட்ட கட்டுகளையுடைய நல்ல வளமனையின் ஒரு பக்கத்தே போய், என்னை எதிர்பார்த்து நிற்கின்றாள். அங்கு பல்லி ஒலிக்கும்தோறும் நல்லகுறி என்று போற்றுகின்றாள். கன்றுகள் வீடுதிரும்பும் மாலைப் பொழுது அது. அவள் பின்னே, அவளுக்குத் தெரியாமல் கையைக் கவித்துக் கொண்டே, சென்று, அவள் கண்களைக் கைகளால் மறைக்க வேண்டும். திடுக்கிட்டுத் திரும்பும் அவள் கூந்தலைத் தொட்டு, வளைக் கைகளைத் தடவித் தழுவிக் கொள்ள என்மனம் விரைந்ததோ?" (என் மனம் என்னிலும் விரைந்து சென்றுவிட்டதென, பாகன் கேட்பத் தலைவன் கூறி மகிழும் காட்சி இது.)

இன்றும் தான் விரும்பும் இடம் நோக்கித் தன் மனம் விரைவதை அறியாதவர் யார்?

தலைவன் அவள் பின்னே சென்று, கைகளால் கண்களைப் பொத்தித் திடுக்கிட வைப்பது, இன்றைய மகாகவி பாரதிவரை பாடிய உலக இயல்பன்றோ?

ஆந்தை மாறி மாறி ஒலிப்பது, உலக்கையை மாறி மாறிக் குத்தும் போது எழும் ஒலியுடன் எதிரொலிப்பது மிக இயல்பானது.

ஆலையில்லா ஊருக்கு இலுப்பைபூச் சர்க்கரை – என்பர். இவ் வருணனையால் அதன் உண்மை ஓரளவு புலனாகிறது.

கொல்வினைப் பொலிந்த கூர்ங்குறும் புழுகின்
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
அப்புநுனை ஏய்ப்ப அரும்பிய இருப்பைச்
செப்படர் அன்ன செங்குழை அகந்தோறு
இழுதின் அன்ன தீம்புழல் துய்வாய்
உழுது காண் துளைய ஆகி, ஆர் கழல்பு
ஆலி வானின் காலொடு பாறி
துப்பின் அன்ன செங் கோட்டு இயவின்
நெய்த்தோர் மீமிசை நிணத்தின் பரிக்கும்
அத்தம் நண்ணிய அம் குடிச் சீறூர்
கொடு நுண் ஓதி மகளிர் ஓக்கிய
தொடி மாண் உலக்கைத் தூண்டு உரல் பாணி
நெடு மால் வரைய குடிஞையோடு இரட்டும்
குன்று பின் ஒழியப் போகி, உரம் துரந்து
ஞாயிறு படினும், 'ஊர் சேய்த்து' எனாது
துனை பரி துரக்கும் துஞ்சாச் செலவின்
எம்மினும், விரைந்து வல் எய்தி, பல் மாண்
ஓங்கிய நல் இல் ஒரு சிறை நிலைஇ
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவி

கன்று புகு மாலை நின்றோள் எய்தி
கை கவியாச் சென்று, கண் புதையாக் குறுகி
பிடிக் கை அன்ன பின்னகம் தீண்டி
தொடிக் கை தைவரத் தோய்ந்தன்றுகொல்லோ –
நாணொடு மிடைந்த கற்பின், வாள் நுதல்
அம் தீம் கிளவிக் குறுமகள்
மென் தோள் பெற நசைஇச் சென்ற என் நெஞ்சே?

(கல்லாடனார், அகம். 9)

நாம் இலுப்பை மரம் பூத்துக் குலுங்குவதை நேரில் பார்த்துவிட்டு, முதல் பத்து அடிகளைப் படிக்க வேண்டும். இலுப்பை அரும்பு, தழை, உட்துளையுள்ள பஞ்சனைய துய் உள்ளமலர், செம்மண் நிலத்தில் ஆலங்கட்டி போல் உதிர்ந்து கிடத்தல், அப் பூவின் தோற்றம் தன்மை அழகு யாவும் சொற்களென்னும் தூரிகை கொண்டு ஓவியமாய் வரையப்படுகின்றன.

காதலர் விளையாட்டு இன்றும் நிலைத்ததொரு இயல்பு. சங்கப் பாடல்கள் விளங்கவேண்டுமேல், தமிழகம் முழுவதும் இயற்கை நலம் கொழிக்கச் செய்ய வேண்டும்.

'இயற்கைவளம் கொழிப்போம்' – என அரசே ஓர் பொதுநல இயக்கத்தைத் தோற்றுவிக்க வேண்டும். சிற்றூர் முதல் ஊருக்கு நடுவே, அங்கங்கே ஐந்து பூங்காக்களை உண்டாக்கிக் காத்து வளர்க்க வேண்டும். மலைகள், குன்றுகள், பாறைகள் முதல் அறுத்தொழிப்பதை உடனே நிறுத்த வேண்டும். மலைகளைப் பூமித்தாயின் மார்பகங்கள் என்பர். தமிழ்நாடு முழுவதும் குன்றுகளை அறுத்தெடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது எவ்வளவு கொடுமை. இன்று மதுரையைச் சுற்றியுள்ள குன்றுகள், மலைகள் அனைத்தும் அறுக்கப்பட்டுவிட்டன. இதனால் கிடைக்கும்

செல்வமும் அவற்றைச் சேர்க்கும் செல்வர்களும் காலத்தால் அழியக் கூடியவர்களே. அவர்கள் காலத்தால் அழியாதிருக்கக் கூடிய இயற்கையை அழிப்பதால், நிலையாக அடையப் போவது எதுவுமில்லை.

5

## உள்ளுறை இடித்துரை

சேற்று நிலை முனைஇய செங்கட் காரான்
ஊர்மடி கங்குலின் நோன்தளை பரிந்து
ஊர்முள் வேலி கோட்டின் நீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுடன் இரிய
அந்தூம்பு வள்ளை மயக்கி, தாமரை
வண்டூது பனிமலர் ஆரும் ஊர!

தான் நிற்கும் இடத்தைச் சேறாக்கி, அதில் நிற்றலை வெறுத்த எருமை, ஊர் உறங்கும் வேளையில், வலிய கட்டுத் தறியை அறுத்துக் கொண்டு, கூரிய முள்ளையுடைய வேலியைத் தன் கொம்புகளாலே நீக்கி விட்டு, நீர்மிக்க வயலில் மீன்களெல்லாம் ஓட, அழகிய துளையுள்ள வள்ளைக் கொடியைக் கலக்கி, வண்டுகள் ஊதும் புத்தம் புதிய மலர்களை நிறையத் தின்னும் ஊரனே!

யாரையோ நிற் புலக்கேம்!

நீர் யாரோ? உம்முடன் எமக்கு என்ன உறவு? உம்முடன் நாங்கள் ஊடல் கொள்ளத் தேவையில்லை.

வாருற்று

உறையிறந்து ஒளிரும் தாழிருங் கூந்தல்
பிறரும் ஒருத்தியை நம்மனைத் தந்து
வதுவை அயர்ந்தனை என்ப - அஃதுயாம்
கூறேம் வாழியர் எந்தை!

நீண்டு, கரிய மழைத்துளியையவிட நீண்டு தொங்கும் கூந்தலையுடைய இளைய பரத்தையை, நம் வீட்டிற்கே கூட்டி வந்து மணந்தனை என்று ஊரார் பலரும் கூறுகின்றனர். அதனை யாம் கூறேம், ஐயனே!

செறுநர்

களிறுடை அருஞ்சமம் ததைய நூறும்
ஒளிறுவாள் தானைக் கொற்றச் செழியன்
பிண்ட நெல்லின் அள்ளூர் அன்னஎன்
ஒண்தொடி நெகிழினும் நெகிழ்க!
சென்றீ பெரும நின் தகைக்குநர் யாரோ?

பகைவரது களிறுடைய போரில் அவர்கள் சிதையும்படி அழிக்கும், ஒள்ளிய வாளையுடைய கொற்றச் செழியனது பிண்டமாகிய நெற்கோட்டைகள் மிக்க அள்ளூர் போன்ற அழகிய எம் வளையல்கள் நெகிழ்ந்து வீழ்ந்தாலும் விழட்டும். நீ விரும்பிய இடத்திற்குச் செல்வாயாக! இனி உன்னைத் தடுப்பார் யாரோ? (நீ கட்டுப் பாடற்று எப்படியேனும் அலைவாயாக!)

தலைவனின் பரத்தைமை ஒழுக்கத்தை நகையாடித் தோழி உள்ளுறை வைத்துப் பேசுகிறாள்.

எருமை - தலைவன். அது தான் நிற்குமிடத்தைச் சேறாக்கியது போல, இவனும் தன் இல்லறத்தைக் கெடுத்துக் கொள்கின்றான். அது தறியை அறுத்தது - இவன் நாணத்தைக் கைவிட்டது. வேலியைக் கொம்பால் நீக்கியது - கட்டுப்பாட்டைக் கடந்தது. பழனம் - பரத்தையர் சேரி. மீனுடன் இரிய - பரத்தை தோழியர் விலக. வள்ளையை மயக்கியது - பரத்தையின் தாயரைக் கலக்கியது. தாமரை வண்டுது பனிமலர் - இளைய பரத்தையர். அவர்களைக் கூடி மகிழ்ந்தானாம். இத்தகைய எருமை திரியும் ஊரனே என்றதில், நீயும் அதைப் போன்றவனே எனப் பலவற்றையும்

ஒற்றற்கொன்று ஒப்புநோக்க வைத்தலால் இது உள்ளுறை உவமம் ஆயிற்று. உள்ளுறை உவமத்தை ஓரிரு அடியிலும் கூறலாம். இது முழுவதும் ஒப்புநோக்கத் தக்கதாயுளது.

சேற்று நிலை முனைஇய செங் கட் காரான்
ஊர் மடி கங்குலில், நோன் தளை பரிந்து
கூர் முள் வேலி கோட்டின் நீக்கி
நீர் முதிர் பழனத்து மீன் உடன் இரிய
அம் தூம்பு வள்ளை மயக்கி, தாமரை
வண்டு ஊது பனி மலர் ஆரும் ஊர!
யாரையோ? நிற் புலக்கேம். வாருற்று
உறை இறந்து, ஒளிரும் தாழ் இருங் கூந்தல்
பிறரும், ஒருத்தியை நம் மனைத் தந்து
வதுவை அயர்ந்தனை என்ப. அஃது யாம்
கூறேம். வாழியர், எந்தை! செறுநர்
களிறுடை அருஞ் சமம் ததைய நூறும்
ஒளிறு வாட் தானைக் கொற்றச் செழியன்
பிண்ட நெல்லின் அள்ளூர் அன்ன என்
ஒண் தொடி நெகிழினும் நெகிழ்க;
சென்றீ, பெரும! நிற் தகைக்குநர் யாரோ?

வாயில் வேண்டிச் சென்ற தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது.

(அள்ளூர் நன் முல்லையார், அகம். 46)

தன் வீட்டிற்கே பரத்தையை அழைத்து வந்தனன் என்பதால், இது மிகப்பெரிய வளமனை எனத் தெரிகிறது.

இதைவிடக் கடுமையாகப் பரத்தைமையுடைய ஆடவனை நகையாட இயலாது.

## 6

## நந்தர்கள்

மாமூலனார் வடநாடு பற்றியும் இமயமலை பற்றியும் தெளிவான அறிவுடையவராயுள்ளார். தமிழில் அன்று உரைநடையில் எழுதும் வழக்கம் இல்லாது போயிற்றா? இருந்து மறைந்ததா? தொல்காப்பியர் உரை என்ற சொல்லை, வாயால் விளக்கியுரைப்பதும் கதை சொல்வதும் என விளக்குவதுடன் நின்று விடுகிறார். மாமூலனார் போலும் புலவர்களைப் பின்பற்றி நக்கீரர், ஔவையார் போலும் பிறர் பலரும் விந்திய மலையைக் கடந்து, இன்றைய ஆந்திர இராயல சீமை எனப்படும் பாலை நிலத்தைக் கடந்து, வடநாட்டிற்கு வாணிகம் செய்யச் சென்றதைப் பாடியுள்ளனர். கங்கை, இமயம் பற்றி எல்லாம் கவிதைகளில் இடம் பெறக் கூடிய அளவே செய்திகள் கிடைக்கின்றன. இவை வரலாறாக விரித்தெழுதப் பட்டிருந்தால், தமிழர் நாகரிகப் பரப்பு பளிச்சென விளங்கியிருக்கும்.பிரிவுத்துயரம் :

### வயங்கொளி

நிழற்பால் அறலின் நெறித்த கூந்தல்
குழல்குரல் பாவை இரங்க, நத்துறந்து
ஒண்தொடி நெகிழச் சாஅய்ச் செல்லலொடு
கண்பனி கலுழ்ந்துயாம் ஒழிய

நிழலிலுள்ள ஆற்று அறல்போல, நெளி நெளியான கூந்தலையும் குழலனைய குரலையும் உடைய பாவை போலும் நாம் வருந்த, நம் வளை நெகிழ, மெலிந்து கண்ணீர் பெருக்கி நாம் இங்கேயிருக்க அவர் நம்மைப் பிரிந்து போயினார். பிரிந்து சென்றவழி :

கண்பனி கலுழ்ந்துயாம் ஒழியப் பொறையடைந்து
இன்சிலை எழிலேறு கெண்டிப் புரைய
நிணம்பொதி விழுத்தடி நெருப்பின் வைத்தெடுத்து
அணங்கரு மரபின் பேஎய் போல

விளர் ஊன் தின்ற வேட்கை நீங்கத்
துகளற விளைந்த தோப்பி பருகிக்
குலாஅ வல்வில் கொடு நோக்கு ஆடவர்
புலால் கையர், பூசா வாயர்
ஒராஅ உருட்டும் குடுமிக் குராலொடு
மராஅம் சீறூர் மருங்கில் தூங்கும்
செந்நுதல் யானை வேங்கடம் தழீஇ
வெம் முனை அருஞ்சுரம் இறந்தோர்
நம்மினும் வலிதாத் தூக்கிய பொருளே

கொடிய மறவர்கள் குன்றை அடைந்து எருதைக் கொன்று கொழுப்புப் பொருந்திய அதன் தசையைச் சுட்டு, பேய்களைப் போல அந்த இறைச்சியைத் தின்று, நீர்வேட்கை நீங்க, நன்கு விளைந்த தோப்பிக் கள்ளைக் குடித்து, புலால் நீங்காத கையுடனும் கழுவாத வாயுடனும் கோட்டான் ஒலியுடன் மாறி மாறி ஒலித்துக் கூத்தாடுகின்றனர். இத்தகைய யானைகள் திரியும் வேங்கடமலையைச் சார்ந்து கிடக்கும் அரிய பாலைவழியைக் கடந்து, நம் தலைவர் நம்மை பிரிவதற்காகச் செல்ல நினைத்தவர், நம்மைவிடச் சிறப்பாகக் கருதிய பொருள் எதுவாக இருக்கும்?

புகையின் பொங்கி, வியல் விசும்பு உகந்து
பனி ஊர் அழற் கொடி கடுப்பத் தோன்றும்
இமயச் செவ் வரை மானும் கொல்லோ?
பல் புகழ் நிறைந்த வெல் போர் நந்தர்
சீர் மிகு பாடலிக் குழீஇ, கங்கை
நீர் முதல் கரந்த நிதியம்கொல்லோ?
எவன்கொல்? - வாழி, தோழி! - வயங்கு ஒளி
நிழற்பால் அறலின் நெறித்த கூந்தல்
குழற் குரல், பாவை இரங்க, நத்துறந்து
ஒண் தொடி நெகிழச் சாஅய், செல்லலொடு

அகன்ற வானில் புகை போல் பொங்கி, பனி தவழும் செந்நெருப்புப் போலத் தோன்றும் இமய மலையளவு செல்வமாக இருக்குமோ? அல்லது புகழ் நிறைந்த நந்தர்கள் சிறப்புமிக்க பாடலிபுத்திரத்திலே, புதைத்து வைத்து, அது கங்கை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட செல்வமாக இருக்குமோ? எதுவாக இருக்கும்?

மாமூலனார் இமயமலைத் தோற்றத்தைச் சுட்டிக்காட்டுவது, அவரது நேரடி அனுபவம் போலத் தோற்றுகிறது. மாமூலனார் நந்தர் கால ஆட்சியின் இறுதியில் நீண்ட நாள் வாழந்தவராகத் தோற்றுகிறது.

**கண் பனி கலுழ்ந்து யாம் ஒழிய, பொறை அடைந்து**
**இன் சிலை எழில் ஏறு கெண்டி, புரைய**
**நிணம் பொதி விழுத் தடி நெருப்பின் வைத்து எடுத்து**
**அணங்கு அரு மரபின் பேஎய் பருகி**
**குலாஅ வல் வில் கொடு நோக்கு ஆடவர்**
**புலாஅல் கையர், பூசா வாயர்**
**ஒராஅ உருள் துடி குடுமிக் குராலொடு**
**மராஅஞ் சீறூர் மருங்கில் தூங்கும்**
**செந் நுதல் யானை வேங்கடம் தழீஇ**
**வெம் முனை அருஞ் சுரம் இறந்தோர்**
**நம்மினும் வலிதாத் தூக்கிய பொருளே!**

பிரிவிடை வேறுபட்ட தலைமகள், ஆற்றாமை மீதூர, தோழிக்குச் சொல்லியது.

(மாமூலனார், அகம். 265)

## 7

## கடல்வழிப் பிரிவு

கடல்வழிப் பிரிவு பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. தமிழர்களின் கடல்வழி வாணிகம் முதலானவை பற்றியும்

கடற்கொள்ளையர்களுடன் போராடியது பற்றியும் கடற் பயணம் பற்றியும் நூற்றுக்கு மேற்பட்ட குறிப்புக்கள் உள்ளன. ஆனால் தலைவன் தன் காதலியை – மனைவியைத் தரைவழிப் பிரிந்தமை பற்றியே அனைத்துப் பாடல்களும் உள்ளன. மதுரை மருதனிள நாகனார் பாடிய இவ் ஒரு பாடல் மட்டுமே, கடல்வழிப் பிரிவு பற்றியதாகவுளது.

உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கடல் நீரிடைப் போழ
இரவும் எல்லையும் அசைவின் றாகி
விரைசெலல் இயற்கை வங்கூழ் ஆட்டக்
கோடுயர் திணிமணல் அகன்துறை நீகான்
மாட ஒள்ளெரி மருங்கறிந்து ஒய்ய
ஆள்வினைப் பிரிந்த காதலர் நாள்பல
கழியாமையே அழிபடர் அகல
வருவர் மன்னால் தோழி!

வங்கம் – மிகப் பெரிய கப்பல். அது உலகு எழுந்து வந்ததுபோல் எனப்படுகிறது, அலைகளையுடைய கடல்நீரைப் பிளந்து கொண்டு செல்கிறது. இரவும் பகலும் எங்கும் தங்காமல், விரைந்து செலுத்தும் இயற்கையாகிய காற்றுச் செலுத்த, நாவாய் ஓட்டுபவன், கரை உயர்ந்த அகன்ற துறைகளிலே மாடங்களில் வைக்கப்பட்ட ஒள்ளெரி விளக்கினால் துறை அறிந்து வங்கத்தைச் செலுத்துவான். இவ்வாறு பொருளீட்டச் சென்ற தலைவன் விரைவில் திரும்ப வேண்டும் என்பது தலைவியின் அவா.

நமது மருதநில ஊரில் கருவிளையும் வெண்பகன்றையும் மலரும். காற்று அவற்றை அசைக்க, பலாக்காய் போலும் புறத்தினையுடைய பாகற்கொடி, கூதாளிக் கொடிகளுடன் கிடந்து அசைந்தாடும். இவ்வாறு வீசும் வாடைக்காற்று, மாடமுள்ள மனையின்கண்ணே இரவெல்லாம் வீசி, திருந்திய அணிகள் கழன்றுவிழுமாறு அழகுகெடச் செய்வதை அவருக்குப்

போய்ச் சொல்லக் கூடிய - தூதுபோகக் கூடிய அன்புடையாரை நாம் பெற்றால் நல்லது.

தண்பணைப்
பொருபுனல் வைப்பின் நம்மூர் ஆங்கண்
கருவிளை முரணிய தண்புதற் பகன்றைப்
பெருவளம் மலர அல்லி தீண்டிப்
பலவுக்காய்ப் புறத்த பசும்பழப் பாகல்
கூதள மூதிலைக் கொடிநிரைத் தூங்க
அறனின்று அலைக்கும் ஆனா வாடை
கடிமனை மாடத்துக் கங்குல் வீசித்
திருந்திழை நெகிழ்ந்து பெருங்கவின் சாய
உரையொடு செல்லும் அன்பினர்ப் பெறினே

இத்தகைய தூது செல்வார் இருந்தால், தலைவர் தம் துயர் நீங்க விரைந்து வருவர் என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

உலகு கிளர்ந்தன்ன உரு கெழு வங்கம்
புலவுத் திரைப் பெருங் கடல் நீர் இடைப் போழ
இரவும் எல்லையும் அசைவு இன்று ஆகி
விரை செலல் இயற்கை வங்கூழ் ஆட்ட
கோடு உயர் திணி மணல் அகன் துறை, நீகான்
மாட ஒள் எரி மருங்கு அறிந்து ஒய்ய
ஆள் வினைப் பிரிந்த காதலர் நாள் பல
கழியாமையே, அழி படர் அகல
வருவர் மன்னால் - தோழி!- தண் பணைப்
பொரு புனல் வைப்பின் நம் ஊர் ஆங்கண்
கருவிளை முரணிய தண் புதல் பகன்றை
பெரு வளம் மலர அல்லி தீண்டி

பலவுக் காய்ப் புறத்த பசும் பழப் பாகல்
கூதள மூதிலைக் கொடி நிரைத் தூங்க
அறன் இன்று அலைக்கும் ஆனாவாடை
கடி மனை மாடத்துக் கங்குல் வீச
'திருந்துஇழை நெகிழ்ந்து பெருங் கவின் சாய
நிரை வளை ஊருந் தோள்' என
உரையொடு செல்லும் அன்பினர்ப் பெறினே.

பிரிவிடை வேறுபட்ட தலைமகன், ஆற்றாமை மீதூர, தோழிக்குச் சொல்லியது.

– (மதுரை மருதன் இளநாகனார், அகம் . 255)

(வங்கம் – மிகப் பெரிய நாவாய்க் கப்பல். வங்கூழ் – சுழற்காற்று. நீகான் – மாலுமி. மாட ஒள் எரி – கலங்கரை விளக்கம்).

## 8

## பாரதப் போர் முடிவு

இதுவும் வரலாற்றுச் செய்தியை உள்ளடக்கிய பாடலாகும்.

அலமரல் மழைக்கண் மல்குபனி வாரநின்
அலர்முலை நனைய அழாஅல் தோழி!

தோழி தலைவியை ஆற்றுவிப்பது இது. கலங்கும் கண்ணில் நீர்தளும்பி, நின் பரந்த மார்பை நனைக்கும்படி, தோழியே அழாதே!

எரிகவர்பு உண்ட கரிபுறப் பெருநிலம்
பீடுகெழு மருங்கின் ஓடுமழை துறந்தென
ஊன்இல் யானை உயங்கும் வேனில்

நெருப்புச் சுட்டு எரித்த பெரிய நிலத்தில், ஓடுகிற முகில் பெய்யாது வேறுபுலம் போனதால், வாடிய யானை வருந்தும் கோடையில்.

மறப்படைக் குதிரை மாறா மைந்தின்
துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ் சோறு கொடுத்த ஞான்றைஇரும்பல்
கூளிச் சுற்றம் குழீஇயிருந் தாங்கு
குறியவும் நெடியவும் குன்றுதலை மணந்த
சுரன்இறந்து அகன்றன ராயினும்

குதிரைப் படையையும் வலிமையையும் உடையராய்ப் போரிட்டுத் துறக்கம் எய்திய, குறையாத புகழையுடைய, இறந்துபட்ட வீரர்களுக்கு என, தென்புலக் கடனாற்ற பெருஞ்சோறு படைத்திட்ட காலத்தில் கரிய பல பேய்கள் குழுமியிருந்தது போல, குறியவும் நெடியவுமான குன்றுகளையுடைய பாலைவழியில் அவர் பிரிந்து சென்றாலும்

மிகநனி
மடங்கா உள்ளமொடு மதிமயக் குறாஅப்
பெருள்வயின் நீடலோ இலர்நின்
இருள்ஐங் கூந்தல் இன்துயில் மறந்தே.

மிகவும் அடங்காத ஆசையுடன், மதிமயக்குற்று, மேலும் மேலும் பொருள்தேட என்று, காலம் நீட்டிக்க மாட்டார். உன் கரிய ஐம்பகுப்பாய் அழகுற்ற கூந்தலில் கொள்ளும் இனிய துயிலை மறந்து, அங்கே இனியும்தங்க மாட்டார்.

இவ்வாறு தோழி ஆறுதல் கூறுகிறாள்.

பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் பாரதப் போரில் கவுரவர் நூற்றுவரும் போரிட்டு அழிந்தபின், பெருஞ் சோறு அளித்ததாகப் புறநானூற்றில் வருகிறது. (2). சிலப்பதிகாரத்திலும் பாண்டவர் கவுரவர் ஆகிய இருவரும் பொருத போரில், இருதிறத்து இறந்தார்க்கும் பெருஞ் சோறளித்தமை குறிக்கப்படுகிறது (ஊசல் வரி).

மா மூலனார் ஒரு வரலாற்றுப் புலவர். அவர் தொன்மையை நினைந்தே, இப் பாடலில் முதியர்ப் பேணிய உதியஞ்சேரல் என்று குறித்தாராதல் வேண்டும். இவை மேலும் ஆராய்தற்குரியன.

அலமரல் மழைக் கண் மல்கு பனி வார, நின்
அலர் முனை நனைய, அழாஅல் - தோழி!
எரி கவர்பு உண்ட கரி புறப் பெரு நிலம்
பீடு கெழு மருங்கின் ஓடு மழை துறந்தென
ஊன் இல் யானை உயங்கும் வேனில்
மறப் படைக் குதிரை, மாறா மைந்தின்
துறக்கம் எய்திய தொய்யா நல் இசை
முதியர்ப் பேணிய, உதியஞ் சேரல்
பெருஞ் சோறு கொடுத்த ஞான்றை, இரும்பல்
கூளிச் சுற்றம் குழீஇ இருந்தாங்கு
குறியவும் நெடியவும் குன்று தலைமணந்த
சுரன் இறந்து அகன்றனர் ஆயினும், மிக நனி
மடங்கா உள்ளமொடு மதி மயங்குறாஅ,
பொருள்வயின் நீடலோஇலர் - நின்
இருள் ஐங் கூந்தல் இன் துயில் மறந்தே.

பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

- (மாமூலனார், அகம். 233)

பெருஞ்சோற்று நிலை என்பது புறத்தில் ஒரு துறை. போருக்குப் போகும் படைவீரர்களுக்கு, அரசன் விருந்து கொடுத்தனுப்புவது இது. சிலப்பதிகாரத்திலும் இக் குறிப்பு உளது.

பாரதப் போர் இதிகாசக் கதையா? வரலாறா? தமிழில் உள்ள குறிப்புக்களால் இது வரலாறு என அறிகிறோம்: இரு பக்கத்துப் படைகளும்

அழிந்த, பேரவலக் காலத்தில், அவ் இருதிறத்தார்க்கும் சேரமன்னன் சோறு படைத்துக் காத்ததாக வருகிறது.

இதனை முற்றிலும் புனைகதை என மறுப்பது இயலாது.

## 9

## மனம் எங்கே போனது?

சிலசமயம் நாம் இருக்குமிடத்தில் தங்காமல், நாம் பார்ப்பதைப் பாராமல், நாம் கேட்பதைக் கேட்காமல் நம் மனம் எங்கோ, அது நினைத்த இடத்திற்கு, விரும்பிய தேயத்திற்குப் போய்விடும்.

உடலுக்குக் காலமும் இடமும் உண்டு; மனத்திற்கு அவ்விரண்டும் இல்லை.

தோழியும் தலைவியும் இரவு நேரத்தில் உடனிருந்தார்கள். தோழி பலமுறை கூப்பிட்டும் அது தலைவி காதில் விழவில்லை. அதற்குக் காரணம் அவள் மனம் அங்கு இருந்தால்தானே!

ஓர் அதட்டுப் போட்டுத் தோழி அழைத்த போதுதான் தலைவி திரும்பினாள். 'என்னடி நீ எங்கே இருக்கிறாய்?' என்று தோழி கேட்டபோது, தலைவி சொன்ன விடைதான் இப்பாட்டு.

**மன்றுபா டவிந்து மனைமடிந் தன்றே**
**கொன்றோர் அன்ன கொடுமை ஓடின்றே**
**யாமம் கொளவரின் கனைஇக் காமம்**
**கடலினும் உரைஇக் கரைபொழி யும்மே**

ஊர்மன்றம் ஒலி அடங்கிவிட்டது. வீடுகள் அனைத்தும் மக்கள் உறங்கிப் போய்விட்டனர். ஏதோ கொலை நடந்தது போன்று, இரவு நேரம் கொடுமையுடன் கழிகிறது. இனி நள்ளிரவு வரின், காமம் மிக்கு கடலை விடக் கூடுதலாகக் கரை கடந்து போய்விடும்.

எவன் கொல் வாழி! தோழி! மயங்கி
இன்ன மாகவும் நன்னர் நெஞ்சம்
என்னொடும் நின்னொடும் சூழாது கைம்மிக்கு

என்னவென்று சொல்வேனடி தோழி! மயக்கமுற்று நாம் இங்கே இவ்வாறு பிரிவால் வருந்தி இருக்கவும் என்னுடைய இந்த நல்ல நெஞ்சம் என்னையும் கேட்காது, உன்னொடும் கலந்து ஆலோசனை கேட்காது, எல்லை கடந்து...

இறும்பு பட்டு இருளிய இட்டருஞ் சிலம்பில்
குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கான நாடன் வரூஉம் யானைக்
கயிற்றுப் புறத் தன்ன கன்மிசைச் சிறுநெறி

குறுங்காடாக இருண்டுகிடக்கும் செல்லுதற்கரிய மலையில், அங்கே சிறிய சுனையிலே கிடக்கும் வண்டு மொய்க்கும் புதிய குவளை மலர்களைச் சூடிக் கொண்டு, கான நாடனாகிய நம் தலைவன் வருகிறான். அவன் வரும் மலைவழி, யானைமீது கிடக்கும் கயிறுபோன்ற ஒற்றையடிச் சிறுவழியாகும்.

மாரி வானம் தலைஇ நீர்வார்பு
இட்டருங் கண்ண படுகுழி இயவின்
இருளிடை மிதிப்புழி நோக்கி அவர்
தளரடி தாங்கிய சென்றது, இன்றே

மழை பெய்தலால் மலைவழியில் நீர் ஒழுகும். காலிட இயலாத சிறிய படுகுழிவழியில், கும்மிருட்டில் அவர் கால் வைத்து மிதிக்குமிடத்தில் அவர் அடி தளரும் என்று நினைத்து அச்சமயத்தே, அதை விழுந்துவிடாமல் தாங்கும்படி சென்றுவிட்டது! நான் என்ன செய்வேன்?

மன்று பாடு அவிந்து மனை மடிந்தன்றே;
கொன்றோரன்ன கொடுமையோ டின்றே
யாமம் கொள வரின் கனைஇ, காமம்
கடலினும் உரைஇ, கரை பொழியும்மே.
எவன்கொல் – வாழி, தோழி! – மயங்கி
இன்னம் ஆகவும், நன்னர் நெஞ்சம்
என்னொடும் நின்னொடும் சூழாது, கைம்மிக்கு
இறும்பு பட்டு இருளிய இட்டு அருஞ் சிலம்பில்
குறுஞ் சுனைக் குவளை வண்டு படச் சூடி
கான நாடன் வரூஉம், யானைக்
கயிற்றுப் புறத்தன்ன, கல்மிசைச் சிறு நெறி
மாரி வானம் தலைஇ நீர் வார்பு
இட்டு அருங் கண்ண படுகுழி இயவின்
இருளிடை மிதிப்புழி நோக்கி அவர்
தளர்அடி தாங்கிய சென்றது, இன்றே?

இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாக, தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

– (கபிலர், அகம். 128)

இவ் வுரையாடல், தலைவன் சற்றுக் கேட்கும் தூரத்தே நின்ற இடத்திற்கருகே, அவன் செவியில் விழுமாறு பேசப்பட்டது. சிறந்த உளவியலமைந்த பாடலிது.

ஒரு சிறு கதைபோல் கபிலரால் புனையப் பட்டுள்ளது.

## 10

## வடக்கிருத்தல்

ஏதேனும் தீராத துன்பம் நேர்ந்துழி, வடக்கு நோக்கி, உண்ணாதிருந்து உயிர்விடும் 'வடக்கிருத்தல்' என்ற வழக்கம் முன்பு இருந்துளது.

கோப் பெருஞ் சோழன் வாழ்விலும் இது நிகழ்ந்ததைப் புறநானூற்றால் அறிகிறோம்.

தலைவி தன் காதலனுடன் 'உடன்போக்கு' எனும் முறையில் சென்றுவிட்டாள். பிரிந்த தாய் மிகவும் வருந்துகிறாள். அவளை அண்டை வீட்டுப் பெண்டிர் ஆறுதல் கூறி, ஆற்றுவிக்க முயல்கின்றனர். அப்போது அவர்க்கு அத் தாய் மறுமொழிவதாக இப் பாடல் வருகிறது.

காய்ந்துசெலற் கனலி கல்பகத் தெறுதலின்
நீந்துகுருகு உருகும் என்றூழ் நீளிடை
உளிமுக வெம்பரல் அடிவருத் துறாலின்
விளிமுறை அறியா வேய்கரி கானம்
வயக்களிற் றன்ன காளையொடு என்மகள்
கழிந்ததற்கு அழிந்தன்றோ இலெனே!

காய்ந்து செல்லும் ஞாயிறு, மலை பிளக்கும்படி வெப்பத்தை வீசுகிறது. வானில் பறக்கும் பறவைகள் சூட்டால் உருகும்படி போகிற நீண்டவழி, உளிபோல் குத்தும் பரற்கருத்துக்கள் காலிற் குத்தி வருத்தும். எங்கு என்ன நேருமோ என்று அறிய முடியாத, மூங்கில்கள் கரியும் காடு. இப் பாலை வழியில் வலிமை மிக்க யானை போலும் தலைவனுடன் என்மகள் போனதற்கு யான் வருந்தவில்லை.

ஒழிந்துயான்
ஊதுலைக் குருகின் உள்ளுயிர்த்து அசைஇ
வேவது போலும் வெய்ய நெஞ்சமொடு
கண்படை பெறேஎன் கனவ

யான் கொல்லனது ஊதுலை போலப் பெரு மூச்சு விட்டு, வருந்தி,எரிவது போலத் துன்புறுத்தும் மனத்துடன் கண்ணுறக்கம் இல்லாது கனவு கண்டு இங்கே இருக்கலானேன்.

மகளைப் பிரிந்த தாய் பலவாறு வருந்திக் கனவு கண்டு, மனம் வெந்து நொந்து ஊதுலை போலப் பெருமூச்சுவிட்டு வருந்துகிறாள். என் மகள் போனதற்காக வருந்தவில்லை; அவளைப் பிரிந்தபின்னும் என் உயிர் போகாததற்காக வருந்துகிறேன் என்று கூறுகிறாள், தாய்.

ஒண்படைக்
கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் நாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள் வடக் கிருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்
பெரும்பிறிதாகியாங்கு, பிரிந்து இவண்
காதல் வேண்டிஎன் துறந்து
போதல் செல்லாஎன் உயிரொடு புலந்தே

படைபலம் மிக்க கரிகால் வளவனுடன், வெண்ணிப் பறந்தலைப் போரில் பொருது, தோற்று, புறமுதுகில் புண் பட்டதனால், அதற்காகச் சேரலாதன் வெட்கப்பட்டான். போர்க்களத் தருகிலேயே வாளைப் போட்டுவிட்டு, உயிரை விடுதற்காக வடக்கிருந்தான். அவன் தோற்றது கேட்ட இன்னாத பேச்சையும், அவனது மான உணர்வை வியந்து பேசும் இனிய உரையையும் கேட்ட புலமைச் சான்றோர்கள் தாமும் அவனொடு அரும்பெறல் உலகம் செல்ல – அதாவது மேலுலகம் போக வடக்கிருந்து உடன் உயிர் நீத்தனர்.

யானோ பிரிந்தும் இவ்வுலகில் வாழ்வதற்கு ஆசைப்பட்டு, அவர்களைப் போல் உயிர் துறக்காது, இங்கு இன்னமும் இந்த உயிருடன் இருப்பதற்கே வருந்துகின்றேன்.

காய்ந்து செலற் கனலி கல் பகத் தெறுதலின்
ஈந்து குருகு உருகும் என்றூழ் நீள் இடை
உளி முக வெம் பரல் அடி வருத்துறாலின்
விளி முறை அறியா வேய் கரி கானம்
வயக் களிற்று அன்ன காளையொடு என் மகள்
கழிந்ததற்கு அழிந்தன்றோஇலெனே! ஒழிந்து யாம்
ஊது உலைக் குருகின் உள் உயிர்த்து, அசைஇ
வேவது போலும் வெய்ய நெஞ்சமொடு
கண்படை பெறேன், கனவ - ஒண் படைக்
கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருது புண் நாணிய சேரலாதன்
அழி கள மருங்கின் வாள் வடக்கிருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும் பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்
பெரும்பிறிது ஆகியாங்கு, பிரிந்து இவண்
காதல் வேண்டி, எற் துறந்து
போதல்செல்லா என் உயிரொடு புலந்தே.

புணர்ந்துடன் போய தலைமகட்கு இரங்கிய தாய் தெருட்டும் அயலிலாட்டியர்க்கு உரைத்தது

(மாமூலனார், அகம். 55)

## 11

## தலைவன் சென்ற வழி

மாமூலனார் ஒரு வரலாற்றுப் புலவர். தலைமகன் பிரிவிடை ஆற்றாத தலைவிக்காக வருந்திய தோழிக்குத் தலைவி சொல்லியது, இப்பாடல். மோரியர்கள் தென்திசையை வெல்ல வேண்டுமென்று வந்தபோது, தமிழகத்திற்கு வடக்கேயிருந்த வடுகர் என்பார், அம் மோரியர்க்குப் பணிந்து

துணையாயினராம். அவர்களை முன்னே அனுப்பிப் பின்னே மோரியர் படை வந்ததாம். இம் மோரியர்கள் மிகப் பெரிய படைகளை வைத்திருந்தனர். யானை, தேர், குதிரை, காலாட்படை என இவர்களிடமிருந்த படைப் பெருக்கத்தைப் பற்றி, இந்திய வரலாற்றாசிரியர்கள் குறித்துள்ளனர்.

மோரியர்களுள் சந்திர குப்த மௌரியனே, சாணக்கியரின் உதவியுடன், வடநாட்டின் கிழக்கிலும் மேற்கிலும் பல பகுதிகளை வென்றான் என்பர். தென்திசை நோக்கியும் அவனே படையெடுத்து வந்திருக்க வேண்டும்.

அவன் மகன் பிந்து சாரன் படையெடுத்ததாக எவ்விதச் செய்தியும் கிடைக்கவில்லை.

அவன் மகன் அசோகன் கலிங்கத்தை வென்றதுடன் போர் செய்வதையே கைவிட்டான்.

சந்திர குப்த மௌரியன் படையெடுத்து வந்த போது, விந்திய மலைப் பகுதியில், அவன் வந்த வழியில், அவனது தேர்ப் படைகள் வர முடியாதவாறு பனிபடர்ந்த பெருங்குன்றுகள் இருந்துள்ளன. அவன் அக் குன்றுகளை அறுத்து, 'உலக இடைகழி' போல, மிகப்பெரிய வழியை உண்டாக்கி, தேர்களைச் செலுத்திக் கொண்டு வந்துள்ளான்.

முன்பெல்லாம் வடநாட்டிற்கு மலைப் பாங்கான பிற வழிகளில் வாணிகத்தின் பொருட்டுச் சென்ற, தமிழ் நாட்டு வணிகர்கள், பிற்பாடு இவ்வாறு மோரியர் குடைந்தமைத்த வழியிலேயே, எளிதாகச் சென்றுள்ளனர். இதை மாமூலனார் பதிவு செய்வதற்கே, இப் பாடலைப் பாடியிருப்பது போல் தோன்றுகிறது. மேலும் இப் புலவரே அகம் 251-லும் இதைக் குறிப்பிடுகின்றார். உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனாரும்

அகம் 69-இல், இதே வரலாற்றைக் குறிக்கின்றார். புறநானூறு 175-இல் கள்ளிலாத்திரையனார் மோரியர் மலையைக் குடைந்து வழியமைத்ததைக் குறிப்பிடுகின்றார். மோரியர் தென்திசை வரவு, நந்தராட்சிக்கு முன்பா, பின்பா என்பதும் ஆராய்தற்குரியதாக உளது.

ஊரில் உடனிருக்கும் போது, நாம் அஞ்சாதிருக்கப் ''பிரியேன்' என்று கூறியவர், இன்று ஊரார் அவர் வாராததால் அலர் தூற்றுமளவு, இத்துணைக் காலமாகியும் வந்திலர். தாம் சொன்ன சொல் தவறாகிவிடுமே என நினைத்திலர்.

அசையும் இயல்பையுடைய மயில்கள் உதிர்த்த தோகைகளை, தம் வலிய வில்லிலே சுற்றி, நாணை வளைத்து விரைந்து தாக்கும் கடிய அம்புகளையுடைய வடுகர்கள், தமக்குத் துணையாக முன்னே செல்ல, மோரியர் தென்திசைநோக்கிப் படையெடுத்து வந்தபோது, ஓங்கிய குன்றத்தினைக் குடைந்து தம் தேர்கள் செல்ல உண்டாக்கிய வழியின் மூலம் நம் தலைவர் பிரிந்து சென்றார். இனி நாம் என்ன செய்யலாம் என ஆராய்ந்து கூறுவாயாக!

**செய்வது தெரிந்திசின் – தோழி! – அல்கலும்**
**அகலுள் ஆண்மை அச்சு அறக் கூறிய**
**சொல் பழுது ஆகும் என்றும் அஞ்சாது**
**ஒல்கு இயல் மட மயில் ஒழித்த பீலி**
**வான் போழ் வல் வில் சுற்றி, நோன் சிலை**
**அவ் வார் விளிம்பிற்கு அமைந்த நொவ்வு இயல்**
**கனை குரல் இசைக்கும் விரை செலல் கடுங் கணை**
**முரண் மிகு வடுகர் முன்னுற, மோரியர்**
**தென் திசை மாதிரம் முன்னிய வரவிற்கு**
**விண்ணுற ஓங்கிய பனி இருங் குன்றத்து**

ஒண் கதிர்த் திகிரி உருளிய குறைத்த
அறை இறந்து, அவரோ சென்றனர் –
பறை அறைந்தன்ன அலர் நமக்கு ஒழித்தே.

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு ஆற்றாளாய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

– (மாமூலனார், அகம். 281)

(அகலுள் – ஊருள். அச்சுஅற – அச்சம் நீங்க. போழ் – தோல் வார். வார் விளிம்பு – நாணின் விளிம்பு. நொவ்வு இயல் – விரையும் இயல்புடைய. கனை குரல் – அம்பு விரையும் ஒலி. மாதிரம் – திசை. திகிரி – தேர்ச் சக்கரம். அறை – குன்று, பாறை.)

## 12

## கபிலரின் குருவிகள்

இன்று நாய்கள் முதல் யானைகள் வரை, நன்கு பழக்கி அரிய செயல்களைச் செய்யவைக்கின்றனர். பாரி மலையை மூவேந்தர்கள் பல ஆண்டுகள் முற்றுகையிட்டிருந்ததால், மலைமேல் வாழ்ந்த மக்கள் உணவின்றி வாடாதிருக்கக் கபிலர் ஒரு முயற்சி செய்தார், மிகப்பலவான குருவிக் கூட்டத்தைப் பழக்கினார். அவை காலையில் பறந்துபோய், நெற்கதிர்களைத் தேடிக் கவ்விக்கொண்டு, மாலையில் மலைக்குத் திரும்புமாம்.

தலைவன் தலைவியர் காதல் யாரும் அறியாதது. 'பேய் கண்ட கனவு போல' என்பது அன்று ஒரு பழமொழி போலும். அது வெளியே தெரியாதவாறு போல, இடையில் பிறர் அறிதலை அஞ்சி, மறைவாக அடக்குதலால் மிக நுட்பமாகப் பொருந்திய காமம் இப்போது அலராகிவிட்டது.

கபிலர் பழக்கிய குருவிக் கூட்டம். காலையில் போய், நெற்கதிர்களுடன் மாலையில் திரும்பி வந்ததுபோல் நம் தலைவர் திரும்பி வருவார் எனத் தெளிவாகத் தெரியவில்லை. எனவே நானும் அவர் சென்ற வழிபார்த்துச் செல்லுதலைத் துணிந்துள்ளேன். இவ்வாறு எண்ணுகிறாள் தலைவி.

இடைபிறர் அறிதல் அஞ்சி மறைகரந்து
பேஎய் கண்ட கனவிற் பன்மாண்
நுண்ணிதின் இயைந்த காமம்

நம் காமம் பேய் கண்ட கனவு வெளித் தெரியாதவாறு போல, இடையே பிறர் அறிதற்கு அஞ்சி, மறைவாக நுண்ணிதின் தொடங்கியது.

வென்வேல்
மறமிகு தானைப் பசும்பூண் பொறையன்
கார்புகன்று எடுத்த சூர்புகல் நனந்தலை
மாயிருங் கொல்லி உச்சித் தாஅய்த்
ததைந்துசெல் அருவியின் அலரெழப் பிரிந்தோர்

வீரம் மிக்க பசும்பூண் பொறையனின், மழை விரும்பிப் பொழிந்த அச்சந்தரும் கொல்லிமலை உச்சியில் தாவிப் பாயும் அருவி ஓசைபோல, ஊரெல்லாம் அலர் எழ நம்மைப் பிரிந்தார், நம் தலைவர்.

புலம்கந்தாக இரவலர் செலினே
வரைபுரை களிற்றொடு நன்கலன் ஈயும்
உரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பின்
நிறை பறைக் குரீஇஇனம் காலைப்போகி
முடங்குபுறச் செந்நெல் தரீஇயர் ஓராங்கு
இரைதேர் கொட்பினவாகிப் பொழுதுபடப்
படர்கொள் மாலைப் படர்தந் தாங்கு

புலமையே பற்றுக் கோடாக இரவலர் சென்றால் அவர்கட்கு யானையும் பொன் அணிகளும் பரிசிலாகக் கொடுக்கும் பாரியின் பறம்புமலையில் வரிசையாகப் பறக்கும் குருவிக் கூட்டம், வளைந்த நெற்கதிர்களைக் கொண்டுவர, இரை தேடிச் சுழன்று பறந்து போய், பொழுதுபடும் வேளையில் திரும்பிவருவது போல.

வருவர் என்று உணர்ந்த மடங்கெழு நெஞ்சம்
ஐயம் தெளியரோ, நீயே பலவுடன்
வறன் மரம் பொருந்திய சிள்வீடு உமணர்
கணநிரை மணியின் ஆர்க்கும் சுரனிறந்து
அழிநீர் மீன்பெயர்ந் தாங்கு அவர்
வழிநடைச் சேறல் வலித்தி சின் யானே

அப்பறவைகள் போல, அவர் திரும்பி வருவார் என எண்ணும் அறிவற்ற நெஞ்சமே! ஐயம் நீங்கித் தெளிவாயாக! வறண்ட மரங்கள் அடர்ந்த இடத்தில் சிள் வீடு வண்டுகள், உமணர்களின் வண்டியிலுள்ள மணிகள் ஒலிப்பது போல ஓசையிடும், பாலை வழியைக் கடந்து, நீர் அற்ற இடம் விட்டு நீருள்ள இடத்திற்கு மீன்கள் போவதுபோல, அவர் சென்ற வழியே நடத்தலை நான் துணிந்துள்ளேன்.

தலைவன் என்ன ஆனான் என்பதே தெரியாததால் தலைவி, அவன் போன வழி தேடிப் போக முடிவு செய்கின்றாள். இப் பாடலில் கபிலரின் அரிய முயற்சி இடம் பெற்றிருப்பதே சிறப்பு. மதுரை நக்கீரனாரும் இச்செய்தியைச் சுட்டியுள்ளார். (அகம். 78)

இடை பிறர் அறிதல் அஞ்சி, மறை கரந்து,
பேஎய் கண்ட கனவின், பல் மாண்
நுண்ணிதின் இயைந்த காமம் வென் வேல்
மறம் மிகு தானை, பசும் பூண், பொறையன்

கார் புகன்று எடுத்த சூர் புகல் நனந்தலை
மா இருங் கொல்லி உச்சித் தாஅய்
ததைந்து செல் அருவியின் அலர் எழப் பிரிந்தோர்
புலம் கந்தாக இரவலர் செலினே
வரை புரை களிற்றொடு நன் கலன் ஈயும்
உரை சால் வண் புகழ்ப் பாரி பறம்பின்
நிரை பறைக் குரீஇயினம் காலைப் போகி
முடங்கு புறச் செந்நெல் தரீஇயர், ஓராங்கு
இரை தேர் கொட்பின ஆகி, பொழுது படப்
படர் கொள் மாலைப் படர்தந்தாங்கு
வருவர் என்று உணர்ந்த, மடம் கெழு, நெஞ்சம்!
ஐயம் தெளியரோ, நீயே; பல உடன்
வறல் மரம் பொருந்திய சிள்வீடு, உமணர்
கண நிரை மணியின், ஆர்க்கும் சுரன் இறந்து
அழி நீர் மின் பெயர்ந்தாங்கு, அவர்
வழி நடைச் சேறல் வலித்திசின், யானே.

தலைமகன் பிரிவின்கண் வேட்கை மீதூர்ந்த தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

(ஔவையார், அகம். 303)

## 13

## நம்பிக்கைத் தோழி

தலைவன் பொருள் தேடிவரப் போனவன் குறித்த நாளில் திரும்பவில்லை. தோழி, நாம் துன்புறுவதை அறிபவனாதலின் மொழி பெயர் தேயத்தே – அதாவது வேற்றுமொழி பேசும் நாட்டில் இருந்தாலும், செல்வம் சேர்ப்பதையே எண்ணித் தங்க மாட்டான், நம் துயர் தீர்க்க விரைவில் வந்துவிடுவான் என்று ஆறுதல் கூறுகிறாள்.

இப்பாடலில் தோழி கூற்றில் ஒரு வரலாற்றுண்மை உவமையாக வந்துளது. அந் நாளில் பொன், மணி முதலாய செல்வத்தை, அளவின்றிக் குவித்தவர்கள் வெள்ளம், தாமரை, ஆம்பல் முதலான பேரெண்களையுடைய அச் செல்வத்தை, குடம் முதலான பாத்திரத்திலிட்டு, அடையாளம் தெரியும்படி, மண்ணில் புதைத்துக் காப்பர். அதை வேண்டும்போது எடுத்துக் கொள்வர். சிலபோது, அது மறந்துபோவதுண்டு; பின்னால் வந்தவர்களுக்கு இடம் தெரியாமல் போவதுண்டு. அண்மைக் காலம் வரை, 'புதையல்' என்று பொற்காசுகள் போன்றவற்றை, நிலத்தை எதற்காகவேனும் தோண்டும்போது, எதிர்பாராமல் காணப்பெற்று எடுத்ததுண்டு. சேரலாதன் என்ற மன்னன் தன் மரந்தை நகரின் முற்றத்தே இங்ஙனம் புதைத்து வைத்து, அதனை மண் அரித்துவிட்டதாகவும் அச் செல்வமே கிடைத்தாலும் தலைவன் இனியும் தாமதிக்க மாட்டான் என்றும் தோழி கூறுகிறாள்.

இதுபோல் வடநாட்டில் பாடலிபுத்திர நகரில் நந்தர்கள் நிலத்தடியில் செல்வத்தைப் புதைத்து வைத்திருந்த செய்தியை, இதே மாமூலனார் குறிப்பிடுகிறார் (265).

இடைக்காலம் வரை இவ் வழக்கம் இருந்ததை, 'பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கும், கேடு கெட்ட மானிடர்காள்' என்று ஔவையார் குறிப்பிடுகின்றார்.

.... வாழி! தோழி!, செங்கோல்
கருங்கால் மராத்து வாஅல்மெல் இணர்
சுரிந்து வணர் பித்தை பொலியச் சூடி,
கல்லா மழவர் வில்லிடம் தழீஇ
வருநர்ப் பார்க்கும் வெருவரு கவலை
மொழிபெயர் தேஎத்த ராயினும்
பழிதீர் காதலர் சென்ற நாட்டே

கருநிற அடியையுடைய வெண்கடம்ப மரத்தின் வெண்மையான மெல்லிய பூங்கொத்தை, சுருண்டு நெளிந்த தலைமயிரில் அழகுறச் சூடிக்கொண்டு, பண்படாத மழவர் வில்லை இடத் தோளில் தாங்கியபடி, வழிப் பறி செய்ய, எதிரில் வருவோரை எதிர்பார்த்திருக்கும் அஞ்சும்படியான பாலை வழியில் சென்று, வேற்றுமொழி பேசும் நாட்டில் நம் தலைவர் இருந்தாலும்...

வலம்படு முரசின் சேரலாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பறுத்து, இமயத்து
முன்னோர் மருள வணங்குவில் பொறித்து
நன்னகர் மரந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்றுவாய் நிறையக் குவைஇ, அன்று அவண்
நிலம்தினத் துறந்த நிதியத்து அன்ன
ஒருநாள், ஒருபகற் பெறினும்....

வெற்றிமுரசுடைய சேரலாதன் கடற்பகைவரை வென்று, அவர்தம் காவல் மரமாம் கடம்பை வெட்டி வீழ்த்தினன். இமயத்தில் தன் முன்னோர் போல, தங்கள் வில் சின்னத்தைப் பொறித்து வைத்தனன். பகைவர்கள் பணிந்து தந்த திறைகளான பல பொற்கலங்களையும் பொன்னாற் செய்த பாவைகளையும் வயிரம் முதலியவற்றையும் ஆம்பல் என்னும் பேரெண்ணுடைய அவற்றை ஒருசேர ஒரு பாத்திரம் நிறையக் குவித்து, மண்ணில் புதைத்து வைத்தான். பின்னர் அது நிலத்தில் அரிக்கப்பட்டு விட்டதால், கைவிடப்பட்டுப் போனது. அதுபோன்ற செல்வத்தை, ஒரே நாளில், ஒரு பகற்பொழுதில் பெறலாமாயினும்...

இலங்குவளை நெகிழச் சாஅய், அல்கலும்
கலங்கு அஞர் உழந்து, நாம் இவண் ஒழிய....
வழிநாள் தங்கலர்!

நாம் வளைநெகிழ வருந்தி, நாள்தோறும் கலங்கித் துன்புற்று இங்கே வருந்தும்படி அங்கே தங்க மாட்டார்; விரைவில் வந்துவிடுவார்!

இலங்கு வளை நெகிழச் சாஅய், அல்கலும்
கலங்குஅஞர் உழந்து, நாம் இவண் ஒழிய
வலம் படு முரசிற் சேரலாதன்
முந்நீர் ஒட்டிக் கடம்பு அறுத்து, இமயத்து
முன்னோர் மருள வணங்குவில் பொறித்து
நல் நகர் மரந்தை முற்றத்து ஒன்னார்
பணி திறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்று வாய் நிறையக் குவைஇ, அன்று அவண்
நிலம் தினத் துறந்த நிதியத்து அன்ன
ஒருநாள் ஒரு பகற் பெறினும், வழிநாள்
தங்கலர் – வாழி, தோழி! – செங்கோற்
கருங் கால் மராத்து வாஅல் மெல் இணர்
சுரிந்து வணர் பித்தை பொலியச் சூடி
கல்லா மழவர் வில் இடம் தழீஇ
வருநர்ப் பார்க்கும் வெருவரு கவலை
மொழி பெயர் தேஎத்தர் ஆயினும்
பழி தீர் காதலர் சென்ற நாட்டே.

பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

– மாமூலனார், அகம். 127

## 14

## முதல் இரவு

சங்கப் பாடல்களில் திருமணம் நிகழ்வு, அகநானூற்றில் மட்டும் இரண்டு பாடல்களில் காணப்படுகிறது. இன்று சிறுகதை, புதினம்,

திரைக்காட்சிகள் என எதுவானாலும் காதல் பற்றிய கருப்பொருளே பலவாறு பின்னிப் புனையப் படுகின்றன. மேலை நாகரிகக் கலப்பால், குடும்பக் கட்டமைப்பு மிகவும் சீர்குலைக்கப்பட்டு வரும் இன்றைய சூழ்நிலையிலும், பெரியோர் பார்த்துச் செய்யும் திருமணங்களும் கூடுதலாகவே நிகழ்கின்றன.

பெரியோர் முடிவு செய்யும் திருமணங்களே அன்றும் மிகுதியாக நடைபெற்றன என நாம் சான்று காட்டி நிறுவமுடியும். ஆனால் புலவர்கள், சுவை நலன் கருதிப் பாடியவை மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளன. காதல் கருத்தமையாவிடின் கதைகள் மக்களை ஈர்ப்பதில்லை.

முழுமதியை சகடம் எனப்படும் உரோகணி சேரும் நாள் திருமணத்திற்கும் பொருத்தமாகக் கருதப்பட்டது.

முழுமதி நாளில் திருமணம் நடக்கும்.

வேங்கை பூக்கும் காலம், தினை முற்றி அறுவடை செய்யும் காலம். ஆதலின் வேங்கை பூக்கும் நாள், திருமண நாள் எனக் கொண்டாடினர்.

களவு ஒழுக்கம் என்பது ஒன்றிரண்டு திங்கள்களுக்குள் முடிவது என்பது பொது வழக்கு. தலைவன் பரிசம் போட்டுப் பெண்ணை மணப்பதே தமழர் வழக்கம். பெண்ணையும் கொடுத்து, 'வரதட்சணையும்' கொடுப்பது தமிழர் வழக்கமன்று. அதற்கான சான்று தமிழ் இலக்கியத்தில் இல்லை.

வீரநிலைக் காலத்தில் புலியைக் கொன்று, அதன் பல்லைக் கொணர்ந்தவன், அதையே அணிவித்துப் பெண்ணை மணந்தான். காலப்போக்கில், முல்லை நிலத்தில் கொல்லேறு தழுவியவனுக்கு - காளையை அடக்கியவனுக்கு மணம் செய்வித்தனர். மருத நிலத்தவர்கள் பொருள் தேடி வந்து, பொன்னும் பொருளும் பரிசாகத் தந்து, பெண்ணை மணந்தனர்.

இவ்வாறு பெண்ணுக்கு பொன்னும் பொருளும் தந்து மணப்பதற்காக, தலைவன் 'வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்தால்' காலம் நீட்டிக்கும்.

இன்றுபோல் அன்றும் ஆணாதிக்கம் இருந்தது. இருந்தாலும் குடும்பம் மனைவிக்கே உரிமை தந்தது. அவள் குழந்தை பெற்று, குடிவழி காப்பவள். தலைவன், பரத்தைமை உடையவனேயாயினும் அதற்கு நாணினான்; மனைவிக்கு அஞ்சி நடந்தான். வீடு என்னும் போது அவளுக்கே உரிமை அதிகம். 'அஞ்ச வந்த மனைவியின் உரிமை' என்றே கூறுவார் தொல்காப்பியர். மனைவி, இல்லாள் எனும் சொற்களும் அதற்கு எதிரான சொற்களின்மையும் கூடத் தமிழரின் பொதுப் பண்பாட்டை, அனைவரும் ஏற்று நடந்த சமுக நீதியை, இல்வாழ்க்கை எனும் அறத்தை உணர்த்தும். இவை தமிழர் வாழ்வின் பொதுவிதி; எழுதப்படாத சட்டம் போலத் தொடர்ந்து இயங்கி வந்துளது. குறையும் குற்றமும் இருந்த இடத்தே, அறமும் நீதியும் இருக்கவே செய்தன.

**திருமண நிகழ்வு**

மைப்புறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி

குற்றமற்ற இறைச்சியுடனாக்கிய நெய் கனிந்த வெண்சோறு படைத்து, ஊரிலுள்ள உற்றார் உறவினர் எல்லோர்க்கும் வரையாது விருந்து அளிக்கப் படுகிறது.

புள்ளுப் புணர்ந்து இனிய வாகத் தெள்ளொளி
அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்
சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுள் பேணிப்
படுமணை முழவொடு பருஉப்பணை இமிழ
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்
பூக்கணும் இமையார் நோக்குபு மறைய

புள் நிமித்தம் நன்றாயமைய, வான் ஒளி வீசித்திகழ, திங்களை உரோகணி நாள் மீன் கூடும் நல்ல நாளில் மணமனையை அலங்கரித்து, கடவுளை வணங்கி, முழவு அதிர, முரசம் ஒலிக்க மகளிர் கூடி வதுவை - திருமணத்திற்கு என நீராட்டினர். இதுவே மணநீராட்டினர் எனப்பட்டு மணம் எனப்பட்டது. முதற்பொருள் இதுவே. மண்ணுதல் நீராட்டுதல் மணம். அப்போது அணிசெய்து கொண்ட மணமகளைக் கூர்மையாய்ப் பார்த்து, அழகை வியந்து விரைந்து சென்றனர். (புள் - நிமித்தம் பார்த்தல். சகடம் - உரோகிணி நாள் மீன். பணை - முரசு. மண்ணுதல் - நீராட்டுதல். நீராட்டி அணி செய்தலாலேதான் இது மணம் எனப்பட்டது. வதுவை - திருமணம்.)

மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த பயம்பு அமல் அறுகைத்
தழங்குகுரல் வானின் தலைப்பெயற்கு ஈன்ற
மண்ணுமணி அன்ன மாஇதழ்ப் பாவைத்
தண்நறு முகையொடு வெண்நூல் சூட்டித்
தூவுடைப் பொலிந்து மேவரத் துவன்றி
மழைபட் டன்ன மணல்மலி பந்தர்
இழைஅணி சிறப்பின் பெயர்வியர்ப்பு ஆற்றி.

வாகையினது கவர்த்த இலையுடன் கன்று கறித்துத் தின்ற அறுகம்புல்லின் கிழங்கைச் சேர்த்து வெண்ணூலில் கட்டியதைக் கொண்டு, கைகளில் காப்புக் கட்டினர். இன்றும் மணமக்களுக்கு வேறுவகையில் ஐயர் காப்புக் கட்டுவது, பழந்தமிழர் வழக்கத்தை அவர் தமக்கேற்பச் சிறிது மாற்றிகொண்டதேயாம்.

மணமக்கள் தூய கோடி ஆடை உடுத்து, வெண்மணல் பரப்பிய மணப் பந்தலில், 'ஈதல் அரிய இழை அணி' எனப்படும் மங்கல நாண் கட்டி, மணமகளை மணமகன் மணந்தனன். இது 'இழை அணி சிறப்பு' எனப்படுகிறது.

திருமணம் முடிந்து வியர்வை நீங்கிய நேரத்திற்குப் பிறகு நடந்தவை இனிக் கூறப்படுகின்றன. தலைவன் தலைவியது ஊடலைத் தவிர்க்க, முன்பு திருமண நாளன்று முதலிரவு நிகழ்ச்சியைத் தன் நெஞ்சிற்குக் கூறுவதுபோல அவள் செவியில் விழுமாறு சொல்கின்றான்.

பெயர் வியர்ப்பு ஆற்றித்
தமர் நமக்கு ஈத்த தலைநாள் இரவின்
உவர்நீங்கு கற்பின்எம் உயிர்உடம்பு அடுவி
முருங்காக் கலிங்கம் முழுவதும் வளைஇப்
பெரும்புழுக்கு உற்றநின் பிறைநுதல் பொறிவியர்
உறுவளி ஆற்றச் சிறுவரை திறவென
ஆர்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலின்
உறைகழி வாளின் உருவுபெயர்ந்து இமைப்ப
மறைதிறன் அறியா ளாகி ஒய்யென
நாணினள் இறைஞ்சி யோளே பேணிப்
பரூஉப்பகை ஆம்பல் குரூஉத்தொடை நீவிச்
சுரும்பு இமிர் ஆய்மலர் வேய்ந்த
இரும்பல் கூந்தல் இருள்மறை ஒளித்தே.

சற்று வியர்வை நீங்கி, ஓய்வுகொண்ட பிறகு, நம் உறவினர் நம்மை ஒன்று கூட்டி முதல்இரவிற்கு அனுப்பினர். அப்போது வெறுப்பற்ற அன்புடன் என் உயிர்க்கு உடம்பாகப் பொருந்திய நீ, கசங்காத கோடி ஆடையில் முழுவதும் உன்மேல் வளைத்து மூடிக்கொண்டாய்! அதனால் மிகவும் புழுக்கமுற்று உன் நெற்றியில் வியர்வைத்துளிகள் நிரம்பின என்று கூறிச் சற்றே காற்றுபடட்டும் என்று கலிங்கத்தைத் திற என்றேன். ஆர்வ நெஞ்சமுடன் நீபோர்த்தியிருந்த போர்வையை முற்றும் விலக்கினேன். உறை அவிழ்த்த வாள்போல் ஒளிவீசும் உன் உடல் திகழ, அதை மறைக்கும் திறம் அறியாது, ஆம்பற்பூவால் ஆன மாலையைத் தடவி எடுத்து, மலர்கள் சூடிய கூந்தலால் உன் மறைவிடத்தை மறைத்து, நாணப்பட்டு விரைந்து விருப்புற்று என்பால்

இறைஞ்சினாய்! (அத்தகையவள் இப்பொழுது ஊடல் தவிர்க்க மறுக்கிறாயே என்று கூறி, அவள் மனத்தை மாற்ற முயல்கிறான் தலைவன்.)

மைப்பறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப் புணர்ந்தினிய வாகத் தெள்ளொளி
அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்
சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்த கடவுள் பேணிப்
படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்று
பூக்கணும் இமையார் நோக்குபு மறைய
மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
பழங் கன்று கறித்த பயம்பு அமல் அறுகைத்
தழங்குகுரல் வானின் தலைப்பெயற்கு ஈன்ற
மண்ணு மணி அன்ன மாஇதழ்ப் பாவைத்
தண் நறு முகையொடு வெண் நூல் சூட்டி
தூ உடைப் பொலிந்து மேவரத் துவன்றி
மழை பட்டன்ன மணல் மலி பந்தர்
இழை அணி சிறப்பின் பெயர் வியர்ப்பு ஆற்றி
தமர் நமக்கு ஈத்த தலைநாள் இரவின்
உவர் நீங்கு கற்பின் உயிர் உடம்படுவி!
முருங்காக் கலிங்கம் முழுவதும் வளைஇ
பெரும் புழுக்குற்ற நின் பிறைநுதற் பொறி வியர்
உறு வளி ஆற்றச் சிறு வரை திற என
ஆர்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலின்

உறை கழி வாளின் உருவு பெயர்ந்து இமைப்ப
மறை திறன் அறியாள்ஆகி, ஒய்யென
நாணினள் இறைஞ்சியோளே - பேணி
பரூஉப் பகை ஆம்பற் குரூஉத் தொடை நீவி
சுரும்பு இமிர் ஆய்மலர் வேய்ந்த
இரும் பல் கூந்தல் இருள் மறை ஒளித்தே.

உணர்ப்பு வாரா ஊடற்கண் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

- (விற்றூற்று மூதெயினனார், அகம். 136)

(புழுக்கு - இறைச்சி. புரையோர் - உயர்ந்தவர், மூத்த உற்றார், உறவினர், ஊரினர். சகடம் - உரோகணி. பணை - முரசு. வதுவை - திருமணச் சடங்கு. இறைஞ்சுதல் - உடம்படுதல்)

15

## திருமணச் சடங்குகள்

திருமண நாள் பற்றிப் பல சங்கப் பாடல்கள் உள. மதியை சகடம் எனப்படும் உரோகணி சேரும் நாள் - அதாவது உரோகணி நாள் - உரோகணி நட்சத்திரம் திருமணத்திற்கு உகந்த நாள் எனக் கருதப்பட்டது. நிறைமதி நாளையும் வேங்கை சிலிர்த்துச் சிவந்து பூத்துக் குலுங்கும் காலத்தையும் மணம் செயும் நாளாகக் கருதினர். வேங்கை மலருங் காலம் தினை முற்றி அறுவடை செய்யும் காலம். அது குறுகிய காலப் பயிர். இரண்டு திங்களில் அறுவடை செய்யுமளவு கதிர்கள் முற்றி விளைந்து விடும். தினைப் புனம் காக்க கன்னிப் பெண்களை அனுப்புவது வழக்காறு. தினை முற்றிவிட்டால், அறுவடை யாகுமாதலால். களவொழுக்கமும் முடிந்துவிடும். உடனே திருமணத்திற்குத் தூண்டுவதே பெருவழக்கு.

இடையே பின்னரும் இரவுக் குறி, பகற்குறி எனக் காதலர் சந்திப்பதும் பெற்றோர் இசையாமையால் இற்செறிப்பு முதலியனவும் வேறுவழியின்றேல் உடன் போக்கு, மடலேறல் முதலியனவும் நிகழற்பாலன.

வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிவு என்பதும், திருமண நாளை நீட்டிக்கும்.

ஆயினும் நமக்குக் கிடைத்துள்ள அனைத்து அகத்திணைப் பாடல்களிலும் திருமணச் சடங்கை ஓரளவு விரித்துக் கூறுவன இரண்டு அகநானூற்றுப் பாடல்களே (86, 136). அவற்றுள் இப்பாடல் மிக விரிவாகக் கூறுகிறது. இது தலைவியைக் கூடி இன்புறுங்காலத்தில், தலைவன் முன்பு தங்கட்குத் திருமணம் நடந்த முறையையும் முதலிரவில் கூடி இன்புற்றதையும் சொல்லி, அவளை மகிழ்வித்ததாகும்.

| | |
|---|---|
| உழுந்து தலைப் பெய்த | உழுந்துடன் கூட்டிச் செய்த |
| கொழுங்களி மிதவை | பொங்கலுடன், சோற்றுணவு விருந்து |
| பெருஞ் சோற்று அமலை | இடையறாது நடந்தபடி இருக்க |
| நிற்ப | |
| நிரை கால் தண்பெரும் | வரிசையாகக் கால்களை நிறுத்திப் |
| பந்தர்த் தரு மணல் | போட்ட மணப் பந்தலில் புதிய |
| ஞெமிரி | மணலைக் கொணர்ந்து பரப்பி |
| மனை விளக்குறுத்து | வீட்டினுள் விளக்கேற்றிவைத்து |
| மாலை தொடரி | பூமாலைகளை எங்கும் தொங்கவிட்டு |
| கனை இருள் அகன்ற | மிக்க இருள் நீங்கிய |
| கவின் பெறு காலை | விடியிற் காலையில் (வளர்பிறை) |
| கோள் கால் நீங்கிய | தீய கோள்களின் தொடர்பு நீங்கிய, |
| கொடுவெண் திங்கள் | வளைந்த வெண்திங்களை |
| கேடுஇல் விழுப்புகழ் | சிறந்த புகழுடைய சகடம் (எ) உரோகணி |
| நாள் தலை வந்தென | நாள் வந்து சேர்ந்ததாக |

| | |
|---|---|
| உச்சிக் குடத்தர் | உச்சியில் நீர்நிறைந்த குடத்தினை |
| புத்தகல் மண்டையர் | உடையவரும், புதிய அகன்ற |
| பொதுசெய் கம்பலை | தாம்பாளத்தை உடையவருமாக, |
| முதுசெம் பெண்டிர் | மணத்தினைச் செய்து வைக்கும் |
| முன்னவும் பின்னவும் | ஆரவாரமுடைய, வயது முதிர்ந்த |
| முறை முறை தரத்தர | மகளிர், திருமணச் சடங்கில் முன்னே |
| | செய்வனவும்பின்னே செய்வனவுமான |
| | சடங்குக் குரியவற்றை முறைப்படி |
| | தரத்தர |
| புதல்வற் பயந்த | மக்களைப் பெற்ற தேமலையுடைய |
| திதலை அவ் வயிற்று | அழகிய வயிற்றினையுடைய தூய |
| வாலிழை மகளிர் | அணிகளை அணிந்த மங்கல |
| நால்வர் கூடி | மகளிர் கூடி, மணம் செய்வித்தனர். |
| கற்பினின் வழாஅ | "கற்பினால் வழுவாது, நல்ல பல |
| நற்பல உதவிப் | பேறுகளையும் தந்து, உன் |
| பெற்றோன் பெட்கும் | கணவனை விரும்பிப் பேணும் |
| பிணையை ஆகஎன | விருப்பத்தையுடைய துணைவி |
| நீரொடு சொரிந்த | ஆகுக எனக் கூறி, நீருடன் கூட்டிச் |
| ஈரிதழ் அலரி | செறிந்த ஈரம் உலராத புதிய |
| பல்லிருங்கதும்பின் | மலர்களுடன் நெல்லும் சேர்த்து, |
| நெல்லொடு தயங்க | மிகக்கரிய கூந்தலிலே பெய்து |
| வதுவை நன்மணம் | வாழ்த்தினர். இவ்வாறு 'வதுவை' |
| கழிந்த பின்றை | என்னும் திருமணம் முடிந்தது. அதன் |
| | பிறகு...". |
| கல்லென் சும்மையர் | சுற்றத்தார் ஆடிப்பாடி இசை ஒலித்த |
| ஞெரேரெனப் புகுதந்து | வராய், விரைந்து வந்து |

| | |
|---|---|
| பேரில் கிழத்தி ஆகஎனத் | பிள்ளைகள் பெற்றுப் பெரிய |
| தமர்தர | மனைக்கிழத்தி ஆகுக என, உறவினர் |
| ஓர்இல் கூடிய | தர, ஓர் அறைக்குள் நாம் இருவரும் |
| உடன் புணர் கங்குல் | கூடிய அம் முதலிரவில் |
| கொடும்புறம் வளைஇக் | முதுகை வளைத்து, கோடிப் புடை |
| கோடிக் கலிங்கத்து | வைக்குள் மூடி, ஒடுங்கிக் கிடந்த |
| ஒடுங்கினள் கிடந்த | உன்னை, முதுகுப் புறமாகத் தழுவி, |
| ஓர்புறம் தழீஇ | முன்பக்கமாகத் தழுவும் ஆர்வத்துடன் |
| முயங்கல் விருப்பொடு | முகத்தை மூடியிருந்த உடையை |
| முகம்புதை திறப்ப | நீக்க, அஞ்சி, பெருமூச்சு விட்டனை |
| அஞ்சினள் உயிர்த்த காலை | |
| யாழ! நின் | பெண்ணே! என்ன வெட்கம்? ஏன்? |
| நெஞ்சம் படர்ந்தது | உன் உள்ளத்தில் உள்ளதை |
| எஞ்சாது உரைஎன | மறையாது சொல் என்றேன். இனிய |
| இன்னகை இருக்கைப் | அவ் இருக்கையில், நான் தயங்கி |
| பின்யான் வினவலின் | வினவினேன். |
| செஞ்சூட்டு ஒண்குழை | அதற்கு நீ செம்மணிகள் பதித்த |
| வண்காது துயல்வர | ஒள்ளிய காதணிகள் அசைய, மனம் |
| அகம்மலி உவகையளாகி | நிறைந்த மகிழ்ச்சியுடன் நாணத்தால் |
| முகன் இகுத்து | முகம் கவிழ்ந்து ஒடுங்கிய கூந்தலுடன் |
| மாவின் மடங்கொள் | மாமைநிறத்தினையுடைய இளமையுடன் |
| மதைஇய நோக்கின் | கூடிய மதர்த்த பார்வை ஒன்றைவீசி |
| ஒடுங்கீர் ஓதி மாயோள் | நோக்கி, விரைந்து தலைவணங்கினாய்! |
| ஒய்யென இறைஞ்சியோள்! | |

திருமணமும் முதல் இரவும் இவ்வாறு முடிந்தன.

உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ் சோற்று அமலை நிற்ப, நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனை விளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
உச்சி குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலைஅவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோன் பெட்கும் பிணையை யாகுஎன
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரில் கிழத்தி யாகஎனத் தமர்தர
ஓரில் கூடிய உடன்புணர் கங்குல்
கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள் கிடந்த ஓர்புறம் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப
அஞ்சினள் உயிர்த்த காலை, யாழநின்
நெஞ்சம் படர்ந்தது எஞ்சாது உரைஎன
இன்னகை இருக்கைப் பின்யான் வினவலின்
செஞ்சூட்டு ஒண்குழை வண்காது துயல்வர

அகமலி உவகையள் ஆகி முகன்இகுத்து
ஒய்யென இறைஞ்சி யோளே, மாவின்
மடங்கொள் மதைஇய நோக்கின்
ஒடுங்கீர் ஓதி மாஅ யோளே

(நல்லாவூர்கிழார், அகம். 86)

(உழுந்தங்களியும் சோற்றுத் திரளும் மணவிருந்து. ஞெமிரி – பரப்பி. கோள் - இங்கு தீய கிரகங்கள், பொது – உற்றார், உறவினர், நண்பர் எனப் பலரும் கலந்து கொள்வதால் திருமணம் 'பொது' எனப்பட்டது என்பது , நாட்டாரையா உரை.)

பெற்றோன் பெட்கும் பிணையை – கணவனை விரும்பும் மனைவி, கணவனால் விரும்பப்படும் மனைவி (பிணை – மனைவி) என இருவழியும் பொருள்படும். கதுப்பு – கூந்தல். 'நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி, பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்கப்' பெய்து வாழ்த்துதல், இன்றும் நகரத்தார் மரபில் உண்டு. இதை 'மணமிடுதல்' என்பர். மாவின் – மானின். ஓதி – கூந்தல்)

இப்பாடலைப் பாடிய நல்லாவூர் கிழார் போலவே, அகம்136ஆம் பாடலிலும் விற்றூற்று முதெயினனாரும், அக் காலச் சடங்குமுறை சிலவற்றையேனும் பதிவு செய்துள்ளார்.

அன்று மகளிரே முன் நின்று மணம் செய்வித்துள்ளனர். 'புதல்வர்ப் பயந்த திதலைஅவ் வயிறு' – பிள்ளை பெற்றவரை, கன்னிப் பெண்ணா என்பதை, தேமல் படர்ந்து திரைத்த வயிறு காட்டிவிடும். மிக நுட்பமாக யாவும் பாடப் பெற்றன என்பதற்கு இதுவும் ஒரு சான்று. 136ஆம் பாடலில் வரும் திருமணச் சடங்குகள்:

1. திருமணம் ஊர்ப் பொது. சான்றோர் உற்றார் உறவினர் பலரும் கலந்துகொள்வர்.

2. திருமண விருந்து இடையறாது நிகழும்.
3. நல்ல நாள், நிமித்தம் எல்லாம் பார்த்துள்ளனர்.
4. திங்களை உரோகணி சேரும் நாளே திருமண நாள்.
5. மண மனையை அலங்கரிப்பர்.
6. கடவுளை முதலில் வணங்கித் தொடங்குவர்.
7. மண முழவும் முரசும் ஒலிக்கும்.
8. மகளிரே 'வதுவை' யை நடத்தி வைத்தனர்.
9. வாகையின் கவர்த்த இலையுடன், அறுகம்புல் கிழங்குடன் கூடிய அரும்பை வெண்ணூலிற் கட்டி, மணமக்களுக்குக் கைகளில் காப்புப் கட்டுவர்.
10. கோடி ஆடை உடுத்துவர்.
11. மண ஒலி – முழவொலி – மிக்க மணப்பந்தர்.
12. இழை அணி அணிவித்தல் (மங்கல நாண்) ('ஈகை அரிய இழைஅணி' என்பது சிலம்பு.)
13. முதல் இரவு நிகழ்வுகள் இரண்டு பாடல்களிலும் நாகரிகமாக விளக்கப்பட்டுள்ளன.

அன்று பல குடியினர், பல பகுதியினர் வெவ்வேறு விதமாக மணவினை நிகழ்த்தியிருக்கக் கூடும். இப் பாடலில் வருவனவும் சேர்த்துக் கொள்க.

நாட்டுப் புறத்தில், சிற்றூர்களில் நடந்த திருமணங்கள் இவை.

காவிரிப்பூம் பட்டினம் போன்றவற்றில், தமிழரின் சடங்குகளையே தாம் செய்வதாக ஏற்றதுடன், 'தீவலம் செய்தல், அம்மி மிதித்தல்' எனச் சில தமிழர்க்கு ஒவ்வாத பழக்கங்களைப் புகுத்தி விட்டனர். சிலம்பில் கோவலன் கண்ணகி திருமணம் 'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலம் செய்வது' நகரங்களில் புகுந்த, புதியவை. அன்றும் இன்றும் இத்தகையவை புதுமை கருதியோ, பிறவாறோ நகரங்களில் முதலில் புகுந்தே, பிறகு நாட்டிற்குள் பரவும்

## 16

## குடவோலை முறைத் தேர்தல்

– வெய்துற
இடிஉமிழ் வானம் நீங்கி யாங்கணும்
குடிபதிப் பெயர்ந்த சுட்டுடை முதுபாழ்

வெப்பம் மிக இடியுடன் பெய்ய வேண்டிய மழை பெய்யாதொழிய, அவ் இடமனைத்திலுமிருந்து குடிமக்கள் வேறு இடங்களுக்குப் போகும்படியான, ஐயோ இது பாலை நிலம் என்று பலரும் சுட்டிக் கூறி வருந்தும்படியான பழைய பாழ்பட்ட பாலைநிலம்.

கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்
பொறிகண்டு அழிக்கும் ஆவண மாக்களின்
உயிர்திறம் பெயர நல்லமர்க் கடந்த
தறுகணாளர் குடர்தரீஇத் தெறுவரச்
செஞ்செவி எருவை அஞ்சுவர இகுக்கும்
கல்லதர்க் கவலை போகின்...

கயிற்றால் கட்டிய குடத்திலுள்ள ஓலைகளை, வெளியே எடுப்பதற்காக அக் குடத்தின் மேலிட்ட இலச்சினையைச் சரிபார்த்து அழித்து, ஒவ்வோரோலையாக எடுக்கும் தேர்வாணைய மக்களைப் போல, (பருந்து, குடலினுள் இருந்து தசைகளை உருவி எடுக்கிறது.)

நல்ல போரிலே வென்று உயிர் நற்கதிக்குப்பிரிந்து போகவே, அவ் வீரரின் குடலை உருவி எடுத்தற்காக, செஞ்செவிப் பருந்து அஞ்சும்படி இழுக்கும், கல் நிறைந்த கவர்த்த வழியிடையே, போனால்... (குழிசி – குடம். எருவை – பருந்து. கவலை – கவர்த்த வழிகள்.)

சீறூர்ப்
புல்லரை இத்திப் புகர்படு நீழல்
எல்வளி அலைக்கும் இருள்கூர் மாலை

சிறிய ஊர்களின் பக்கத்தில் புல்லிய அடியினையுடைய இத்தி மரத்தின் புள்ளிகள் பொருந்திய நிழலில், ஒளிவீசும் காற்று சுழன்றடிக்கும் இருள் மிகும் மாலை நேரத்தில்

வானவன் மறவன் வணங்குவில் தடக்கை
ஆனா நறவின் வண்மகிழ்ப் பிட்டன்
பொருந்தா மன்னர் அருஞ்சமத்து உயர்த்த
திருந்துஇலை எஃகம் போல
அருந்துயர் தரும் இவள் பனிவார் கண்ணே

சேர வேந்தனின் படைத் தலைவனும் வளைந்த வில்லேந்திய தடக்கையை யுடையவனும் குறையாத மதுவினையுமுடைய மகிழ்ச்சி மிக்க பிட்டன் என்பானது, பொருந்தாத பகை மன்னர் மீது உயர்த்திய வேலைப்போல இவளது பனிவார்கண் அருந்துயர் தரும். (சமம் – போர் (சமர்). திருந்து இலை எஃகம் – வேலின் தலைப் பக்கம். பனிவார் கண் – நீர் வடியும் கண்கள்)

நன்னுதல் பசப்பவும் ஆள்வினை தரீஇயர்
துன்னருங் கானம் துன்னுதல் நன்று எனப்
பின் நின்று சூழ்ந்தனை யாயின் நன்று இன்னாச்
சூழ்ந்திசின் வாழிய நெஞ்சே!

நல்ல நெற்றி பசலையடையும்படி, பொருள் தேடித் தருவதற்காக, நெருங்குதற்கரிய பாலை வழியில் போதல் நன்று என, என் பின்னின்று என்னை விரட்டுகிற – விரட்ட எண்ணுகிற நெஞ்சமே, மிகவும் கொடியதொன்றைச் சிந்தித்தனை ஆகின்றாய்!

இவ்வாறு பிரியக் கருதும் நெஞ்சிற்குச் சொல்லுகின்றான்.

இடைக் காலச் சோழர் காலம் வரை இருந்த, குட வோலைமுறை என்ற தேர்தல் முறை இதில் சுட்டப்படுகிறது. ஊராட்சி உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கத் தகுதியுடையார் தாம் நினைப்பவர் பெயரை எழுதிக் குடத்தினுள் போடுவர். பின்னர் தேர்தல் நடத்தும் ஆவணமாக்கள், இலச்சினையை நீக்கி, குடத்தினுள் கைவிட்டு ஓலைகளை எடுத்து எண்ணிக் கூடுதல் வாக்குப் பெற்றவரைத் தெரிவிப்பர். தமிழரின் இத் தேர்தல் முறை பிற்காலக் கல்வெட்டுக்களில் விரிவாக உளது.

நல் நுதல் பசப்பவும், ஆள்வினை தரீஇயர்
துன் அருங் கானம் துன்னுதல் நன்று எனப்
பின்னின்று சூழ்ந்தனை ஆயின், நன்று இன்னாச்
சூழ்ந்திசின் - வாழிய, நெஞ்சே! - வெய்துற
இடி உமிழ் வானம் நீங்கி, யாங்கணும்
குடி பதிப்பெயர்ந்த சுட்டுடை முது பாழ்
கயிறு பிணிக் குழிசி ஓலை கொண்மார்
பொறி கண்டு அழிக்கும் ஆவணமாக்களின்
உயிர் திறம் பெயர, நல் அமர்க் கடந்த
தறுகணாளர்குடர் தரீஇ, தெறுவர
செஞ் செவி எருவை, அஞ்சுவர இகுக்கும்
கல் அதர்க் கவலை போகின், சீறூர்ப்
புல் அரை இத்திப் புகர் படு நீழல்
எல் வளி அலைக்கும், இருள் கூர் மாலை
வானவன் மறவன், வணங்குவில் தடக் கை
ஆனா நறவின் வண் மகிழ், பிட்டன்
பொருந்தா மன்னர் அருஞ் சமத்து உயர்த்த
திருந்து இலை எஃகம் போல
அருந் துயர் தரும், இவள் பனி வார் கண்ணே.

தலைமகன் பிரியக் கருதிய நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்குவித்தது.

(மருதன் இளநாகனார், அகம்.77)

(ஆள்வினை – பொருளீட்டல். சுட்டுடைமுது பாழ் – பாழ்பட்ட இடமென்று சுட்டிக் கூறப்படுமிடம். குழிசி – குடம். கயிற்றால் கட்டி, இலச்சினை வைக்கப்பட்டுள்ளது. ஆவண மாக்கள் – தேர்தல் நடத்துவோர். எருவை – பருந்து.)

## 17

## பரத்தையின் செருக்கு

தலைமகனைப் பரத்தை தன் அழகுகாட்டி 'நயப்படுத்திக் கொண்டாள்' என்று தலைவி வருந்தினாள். அதைக் கேட்ட பரத்தை தலைமகளுக்கு வேண்டியவர்கள் காதில் விழ, தலைவன் தானாக எங்கள் ஆடல் பாடலைக் கேட்கவந்தானேயன்றி, நாங்கள் ஒன்றும் அழைக்கவில்லை. நான் நினைத்தால் காதலனை இழந்து தவித்த ஆதிமந்தி போலத் தலைவி வருந்தும்படி, தலைவனை என் கைவயப் படுத்திக் கொள்வேன் என்று பரத்தை செருக்குடன் பேசுகின்றாள்.

ஆட்டனத்தி ஆதிமந்தி இருவரும் ஆடல் வல்ல காதலர்கள். ஏதோ காரணத்தால் மனவேறுபாடு காரணமாகப் பிரிந்த ஆட்டனத்தியை, காவிரியாறு இழுத்துச் செல்ல நேரிட்டுள்ளது. காவிரிக் கரையோரமாகத் தன் காதலனைத் தேடியவாறு, ஆதிமந்தி ஓடுகிறாள். இவ் வரலாறு பல பாடல்களில் வருகிறது (அகம். 222)

**மண்கனை முழவொடு மகிழ்மிகத் தூங்க**
**தண்துறை ஊரன், எம் சேரி வந்தென**
**இன்கடுங் கள்ளின் அஃதை களிற்றொடு**
**நன்கலன் ஈயும் நாண்மகிழ் இருக்கை**
**அவைபுகு பொருநர் பறையின் ஆனாது**
**கழறுப என்ப அவன் பெண்டிர்**

மார்ச்சனை தடவிய முழவொடு நாங்கள் மகிழ்ந்து கூத்தாட, தண்துறை ஊரனாம் தலைவன் அதைக் காண எம் சேரி வந்தனன். அதற்காகத் தலைவி எங்களை இடையறாது பழித்துப்பேசுகின்றாள் என்று கூறுகிறாள்.

இனிய கடுங்கள்ளையுடைய அஃதை என்பான், தன்பால் வருபவர்க்கு களிறும் அணிகலமும் தருவதால், அவனது நாளோலக்கத்தில் உட்புகும் பொருநரது தோற்கருவிகள் ஒலித்த வண்ணமிருக்கும். அதுபோலத் தலைவி பேசுகிறாளாம்.

அந்தில்

கச்சினன் கழலினன் தேந்தார் மார்பினன்
வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியல்
சுரியலம் பொருநனைக் கண்டிரோவென
ஆதி மந்தி பேதுற்று இனையச்
சிறை பறைந்து உரைஇச் செங்குணக்கு ஒழுகும்
அம்தண் காவிரி போலக்
கொண்டுகை வலிததல் சூழ்ந்திசின் யானே

கச்சு அணிந்த, கழல் கட்டிய, மாலையணிந்த மார்பினனும் அழகமைந்த தெரியலையணிந்தவனும் சுருண்ட தலைமுடியை உடையவனுமாகிய ஆட்டனத்தியைக் கண்டீரோ என ஆதிமந்தி வருந்தியழ, கரையுடன் மோதி ஓடும் காவிரியாறு நேர்கிழக்கே, அவனைக் கவர்ந்துகொண்டு ஓடுவதுபோல, தலைவி வருந்த நான் தலைவனைக் கவர்ந்துகொள்ள உறுதிபூண்டுள்ளேன்.

மண் கனை முழவொடு மகிழ் மிகத் தூங்க
தண் துறை ஊரன் எம் சேரி வந்தென –
இன் கடுங் கள்ளின் அஃதை களிற்றொடு
நன் கலன் ஈயும் நாள் மகிழ் இருக்கை
அவை புகு பொருநர் பறையின், ஆனாது
கழறுப என்ப, அவன் பெண்டிர்; ‘அந்தில்
கச்சினன், கழலினன், தேம் தார் மார்பினன்
வகை அமைப் பொலிந்த, வனப்பு அமை, தெரியல்
சுரியல் அம் பொருநனைக் கண்டிரோ?’ என

ஆதிமந்தி பேதுற்று இனைய
சிறை பறைந்து உரைஇச் செங்குணக்கு ஒழுகும்
அம் தண் காவிரி போல,
கொண்டு கைவலித்தல் சூழ்ந்திசின், யானே.

தலைவனை நயப்பித்துக் கொண்டாள் என்று கழறக் கேட்ட பரத்தை, தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப, சொல்லியது.

(பரணர், அகம். 76)

## 18

## காதல் நிகழ்ந்த கதை

செவிலித்தாயிடம் தோழி தலைவியின் காதலை நேரே சொல்கிறாள். அவன் 'கடவுள்முன் உறுதிமொழி கூறி இவளை மணப்பான்' என்று முடிக்கின்றாள்.

அக் காலத்தே மகளிர் பன்னிரண்டு வயதை ஒட்டிய, சிறுமியராம் பருவத்திலேயே பருவ வயதை எய்தினர் என்றும் உடனே திருமணம் செய்யப் பெற்றனரென்றும் வருவன, அக் கால மாந்தர்தம் உடற்கட்டை நினைவூட்டுகின்றன. சி.எம்.பௌரா, தம் கிரேக்க வாழ்வியல் (Greek Experience) என்ற நூலில், மகளிர் பன்னிரண்டு வயதிலேயே திருமணம் பேசப்பட்டனரென்றும் அன்றைய பரத்தையர் கலைத்துறைகளில் – இசை, நாட்டியம், நாடகம்– மிகத் திறன் படைத்த அழகியராக இருந்தமை பற்றியும் விரிவாக எழுதுவன, அவ்வாறே இங்கும் ஒத்து வருகின்றன.

கானல்

தொடலை ஆயமொடு கடலுடன் ஆடியும்
சிற்றில் இழைத்தும் சிறுசோறு குவைஇயும்
வருந்திய வருத்தம் தீர, யாம்சிறிது
இருந்தன மாக எய்த வந்து

கடற்சோலையில் மாலைசூடிய தோழியருடன் கடலில் நீராடி விளையாடினர். பிறகு மணலில் சிற்றில் இழைத்துச் சிறுசோறு சமைத்து ஆடும் விளையாட்டில் ஈடுபட்டனர். இதனால் ஏற்பட்ட களைப்புத்தீர மணற்பரப்பின் ஒருபக்கத்தே சிறிது நேரம் சென்றமர்ந்தனர். அந் நேரம் பார்த்து, தலைவன் அப் பக்கம் வந்தான்.

'தடமென் பணைத்தோள் மடநல் லீரே
எல்லும் எல்லின்று, அசைவுமிக உடையேன்
மெல்லிலைப் பரப்பின் விருந்துண்டு யானும் இக்
கல்லென் சிறுகுடித் தங்கின் மற்று எவனோ?
எனமொழிந்தனனே ஒருவன்.'

அகன்று பருத்த தோளினை உடையீர்! பகற்பொழுதும் போய்விட்டது. யான் மிகவும் சோர்ந்துள்ளேன். நீங்கள் மெல்லிய இலையிலிடும் விருந்து படைத்தலை உண்டு, யானும் இச்சிறுகுடியில் இங்கு தங்கினால் தவறொன்றுமில்லையே என்று கேட்டனன். (முன்பின் அறியாததால் 'ஒருவன்' என்றாள்.)

அவற்கண்டு
இறைஞ்சிய முகத்துஎம் புறம்சேர்பு பொருந்தி
இவைநுமக்கு உரிய அல்ல, இழிந்த
கொழுமீன் வல்சி என்றனம், இழுமென...

அவனைக் கண்டு, வெட்கத்தில் குனிந்த முகத்துடன் எம் முதுகுப்புறமாய் ஒருவர்பின் ஒருவராய் மறைந்து கொண்டு மெல்லிய குரலில், "இவை உமக்குரியன அல்ல, மிகக் கீழான மீனுடன் சமைத்த உணவு இது" என்றனம்.

நெடுங்கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ
காணாமோ எனக் காலிற் சிதையா
நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளும்

என்னே குறித்த நோக்கமொடு நன்னுதால்!
ஒழிகோ யான்என அழிதகக் கூறி
யான் பெயர்க என்ன நோக்கித் தான்தன்
நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் இன்றும் என் கட்கே.

நீண்ட கொடிகள் அசையும் நாவாய்கள் கடலிலே மிதப்பன தெரியாதோ (நீங்கள் ஒன்றும் ஏழைகள் அல்ல என்பது கருத்து) என்று கூறி, சிறுவீடு முதலியவற்றைக் காலால் சிதைத்து விட்டனன். உடனே தலைவியுடன் நின்ற தோழியர் பலரும் ஓடிவிட்டனர். அவ்வாறு திரும்ப நினைத்தவருள் என்னை மட்டும் குறிப்பாகப் பார்த்து, 'நன்னுதால்! பெண்ணே! யான் போகட்டுமா' என்று வருத்தத்துடன் கூறினான். நானும் 'போகலாம்' என்று கூற, 'என்னையே நோக்கித் தான் தன் பெரிய தேரின் கொடிஞ்சியைப் பற்றி நின்றனன்'. அது இன்றும் என்கண் முன் உளது.

அன்னை அறியினும் அறிக, அலர்வாய்
அம்மென் சேரி கேட்பினும் கேட்க!
பிறிதொன்று இன்மை அறியக் கூறிக்
கொடுஞ் சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கிக்
கடுஞ்சூள் தருகுவன் நினக்கே!

எனவே, இக் காதல் உறுதி. இதனைத் தாய் அறியினும் நன்றே! பலரும் அலர்பேசி, அதை ஊரெல்லாம் கேட்பினும் கேட்கட்டுமே! வேறு எதுவும் மாற்றமில்லை என்று பலரும் அறியக் கூறி, கடல்சூழ் புகார்த்தெய்வம் மீது உறுதி கூறி, சூள் உரைப்பான் அத்தலைவன் (மறவாது வந்து மணப்பான் என்பதாம்.)

பிற்காலத்தில் வரும் பெண்பாற் பிள்ளைத் தமிழில், சிற்றில் இழைத்தல் சிறு சோறு சமைத்தல் முதலானவை இங்கு தொடங்குவதைக் காணலாம். தோழி செவிலியிடம் கூறுமிது, ஒரு சிறுகதை போல் புனையப்படுகிறது.

அன்னை அறியினும் அறிக; அலர்வாய்
அம் மென் சேரி கேட்பினும் கேட்க;
பிறிது ஒன்று இன்மை அறியக் கூறி
கொடுஞ் சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கி
கடுஞ் சூள் தருகுவன், நினக்கே; கானல்
தொடலை ஆயமொடு கடல் உடன் ஆடியும்
சிற்றில் இழைத்தும், சிறு சோறு குவைஇயும்
வருந்திய வருத்தம் தீர, யாம் சிறிது
இருந்தனமாக, எய்த வந்து
தடமென் பணைத் தோள் மட நல்லீரே!
எல்லும் எல்லின்று; அசைவு மிக உடையேன்;
மெல் இலைப் பரப்பின் விருந்து உண்டு, யானும் இக்
கல்லென் சிறுகுடித் தங்கின் மற்று எவனோ?
என மொழிந்தனனே, ஒருவன். அவற் கண்டு
இறைஞ்சிய முகத்தெம் புறம் சேர்பு பொருந்தி
இவை நுமக்கு உரிய அல்ல; இழிந்த
கொழு மீன் வல்சி என்றனம், இழுமென.
நெடுங் கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ
காணாமோ? எனக் காலின் சிதையா
நில்லது பெயர்ந்த பல்லோருள்ளும்
என்னே குறித்த நோக்கமொடு, 'நன்னுதால்!
ஒழிகோ யான்?' என அழிதகக் கூறி
யான், பெயர்க என்ன, நோக்கி, தான் தன்
நெடுந் தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் இன்றும் என் கட்கே.

தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நின்றது.

- (போந்தைப் பசலையார், அகம். 110)

(கடுஞ்சூள் - கடல் தெய்வம் மீது ஆணையிட்டுக் கூறும் உறுதி மொழி. எல் -ஞாயிறு. அசைவு - சோர்வு. கொடிஞ்சி - தேர்முன் உள்ள கைப்பிடி. வல்சி - உணவு.)

## 19

## காதலில் நகைச்சுவை

காதற் பாடல்களை சில வகையாகப் பிரித்துப் பார்க்கலாம். நிலமக்கள் காதலெனத் தெளிவாகத் தெரிவன ஒரு வகை. உழவர், வேட்டுவர், பரதவர், கானவர் என அறியும்படி பாடல்கள் அமைந்திருக்கும். தலைமக்கள் எனத் தேருடன் வரும் தலைவன், வளமனை வாழும் தலைவி எனத் தெளிவாகத் தெரிவன பலவுள. நெய்தல்திணைப் பாடல்கள் போலும் சிலவற்றில், தலைமக்கள் என எண்ணத்தக்கவர்கள், நிலமக்களைக் காதலிப்பது போலத் தெளிவாக அறியப்படுகின்றன. இவை மூன்றும் இன்றி, தெளிவாகப் பிரித்தறிய முடியாதபடி வரும் காதலர்களைப் பற்றிய பாடல்கள் பெரும்பான்மையாகும்.

மணமாகாத கன்னியர் தினைப்புனம் காப்பதும் இளைஞர்கள் வேட்டையாடச் செல்வதும், குறிஞ்சித்திணை வாழ்வில் இயல்பாகக் களவுக் காதல் மிகக் காரணமாயிற்று.

தினைப்புனம் காக்க அனுப்பப்பட்ட ஒரு பெண், அங்கு தான் கண்டு காதலிதத வேட்டுவனுடன் மகிழ்ந்திருப்பதிலேயே பொழுதைப் போக்கி விடுகிறாள். தினைப்புனம் காப்பதை மறந்து விடுகிறாள்.

இதைப் பார்த்த தோழி, தலைவிக்கு அறிவுரை சொல்வதாக ஒரு பாடலை பாண்டியன் அறிவுடைநம்பி பாடியுள்ளார்.

மெய்யின் தீரா மேவரு காமமொடு
எய்யாய் ஆயினும் உரைப்பல்! தோழி!

உடம்பின்கண் தீராத காமவுணர்வுடன் பொருந்தி, உண்மை அறியாதவளாக இருக்கின்றாயே! தோழி! உனக்குத் தெரியாவிட்டாலும் நான் சொல்வதைக் கேள்!

கொய்யா முன்னும் குரல்வார்பு தினையே
அருவி ஆன்ற பைங்கால் தோறும்
இருவி தோன்றின பலவே

கதிர் முற்றிய தினை, நீரற்ற பசிய அடிதோறும் (கதிர்களைக் கிளிகள் கொத்திப் போய்விடுதலால்), கொய்வதற்கு முன்பே வெறும் தட்டையாகப் பலவும் தோன்றுகின்றன.

நீயே
முருகு முரண்கொள்ளும் தேம்பாய் கண்ணி
பரியல் நாயொடு பல்மலைப் படரும்
வேட்டுவற் பெறலொடு அமைந்தனை

இதையறியாத நீ, முருகு போலும் இனிய மணம் கமழும் கண்ணியை அணிந்து, விரையும் நாயுடன் பல மலைகளைக் கடந்து வரும் வேட்டுவனுடன் உறவு கொள்வதோடு இருந்து விடுகின்றாய்!

யாழ நின்
பூக்கெழு தொடலை நுடங்க எழுந்தெழுந்து
கிள்ளைத் தெள்விளி இடையிடை பயிற்றி
ஆங்காங்கு ஒழுகாய் ஆயின் அன்னை
சிறுகிளி கடிதல் தேற்றாள் இவள் என
பிறர்த்தந்து நிறுக்குவளாயின்
உறற்கு அரிதாகும், அவன் மலர்ந்த மார்பே

தோழி! உனது பூமிடைந்த மாலை அசைய, அடிக்கடி எழுந்து, கிளிகளை விரட்டும் ஒலியினை இடையிடையே எழுப்பி அவ்வப் போதெனும் நடக்காவிட்டால், நம் தாய் இவளுக்குக் கிளிகளை விரட்டத் தெரியவில்லை என்று பிறரைக் கொண்டு, தினைப்புனங்காக்க நிறுத்துவாளாயின், நீ உன் காதலன் மார்பை அடைவதென்பது முற்றும் அற்றுப் போகும். இதை அறிந்துகொள்!

அதாவது கிளிகளை ஓட்டுவது போல் இடையிடையே நடிக்கவாவது செய் என்பதாம்.

இதில் வரும் தலைவியும் வேட்டுவனும் அந்நிலத்தில் வாழும் பொது மக்கள் ஆவர்.

தோழியின் பேச்சில் நகையாடற்குறிப்புளது.

மெய்யின் தீரா மேவரு காமமொடு
எய்யாய் ஆயினும், உரைப்பல் - தோழி!
கொய்யா முன்னும், குரல் வார்பு, தினையே
அருவி ஆன்ற பைங் கால் தோறும்
இருவி தோன்றின பலவே. நீயே
முருகு முரண்கொள்ளும் தேம் பாய் கண்ணி
பரியல் நாயொடு பல் மலைப் படரும்
வேட்டுவற் பெறலொடு அமைந்தனை; யாழ நின்
பூக் கெழு தொடலை நுடங்க, எழுந்து எழுந்து
கிள்ளைத் தெள் விளி இடைஇடை பயிற்றி
ஆங்கு ஆங்கு ஒழுகாய்ஆயின், அன்னை
'சிறு கிளி கடிதல் தேற்றாள், இவள்' என
பிறர்த் தந்து நிறுக்குவள் ஆயின்
உறற்கு அரிது ஆகும், அவன் மலர்ந்த மார்பே

தலைமகன் சிறைப்புறத்தானாக, தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.

- (பாண்டியன் அறிவுடை நம்பி, அகம். 28)

(எய்யாய் - அறியாய். குரல் - தினைக்கதிர். அருவி ஆன்ற - நீரற்ற. இருவி - தினையின் அடித்தட்டை. முருகு - முருகன். பரியல் - விரையும். தொடலை - மாலை).

# 20

## கலப்பு மணம்

நெய்தல் நிலமாம் கடற்கரையும் மருத நிலமாம் ஆற்றுப் பாசன நிலமும் அடுத்தடுத்து இருந்தன.

இது போலவே குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் (மலையும் காடும்) அடுத்தடுத்து இருந்தன.

அகத்திணைப் பாடல்களில், 'நிலன் ஒருங்கு மயங்குதல் இன்றென மொழிப' (958) என்று தொல்காப்பியர் சொன்னாலும் இந் நிலங்களிடையேயும் கலந்து வரும் பாடல்கள் காணப்படுகின்றன.

நெய்தல் நிலத் தலைவியர் – கன்னிப் பெண்கள் அழகுடையர். இதனால் மருத நிலத் தலைவர்கள், நெய்தற் பெண்களைக் காதலித்தமை பல பாடல்களில் இடம் பெறுகின்றன. நிலப் பின்னணி பெரிதும் நெய்தலைச் சார்ந்திருக்கும்.

உப்பு வணிகராம் உமணர்கள், வண்டிகளில் உப்பு மூடைகளை ஏற்றிக்கொண்டு, குன்றுகளைக் கடந்து கூட்டம் கூட்டமாகப் பிற நிலங்களுக்கும் நாடுகளுக்கும் சென்று வாணிகம் செய்துள்ளனர்.

ஒரு காலத்தில் நெருப்பு கிடைத்தற்கரிய பொருளாகக் கருதப்பட்டது போல, பிற்பாடு உப்பும் கிடைத்தற்கு அரியதொன்றாகக் கருதப்பட்டுள்ளது.

உப்பு வண்டிகளுடன் உமணர்கள் ஓர் மருத நில ஊரில் சென்று தங்கினர். உமணர் மகள் நெல்லைச் சுமந்து கொண்டு, அந்த ஊர் வீதிகளில், 'நெல்லின் நேரே வெண் கல் உப்பு' என்று (நெல்லுக்குச் சமமான விலையில் உப்புளது, வேண்டுமா?) விலை கூறிச் செல்கின்றாள்.

பெருங் கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி
என்றூழ் விடர குன்றம் போகும்

பெரிய கடலில் மீன்பிடி வேட்டைக்குச் சென்று, சிறுகுடியில் வாழும் பரதவர்கள் பெரிய உப்பங்கழிகளில், உழாமல் விளைவித்த உப்பை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு, வெப்பம் மிக்க குன்றுகளின் வழியே சென்று பற்பல ஊர்களில் விற்கின்றனர். (என்றூழ் -சூரிய வெப்பம். செறு – வயல். கொள்ளை – விலை)

கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்
சேரிவிலை மாறு கூறலின்...

உமணர் மகளிர், திரண்ட சில ஒளிவீசும் வளைகள் ஒலிக்கக் கையை வீசி நடந்து, நெல்லுக்கு ஒத்த அளவில் கல் உப்பு தரப்படும் என்று சேரிகளில் பண்டமாற்றுவிலை கூறி விற்கின்றனர்.

மனைய
விளிஅறி ஞமலி குரைப்ப வெரீஇய
மதர்கயல் மலைப்பின் அன்னகண்

வீட்டுநாய்கள், புதிதாக ஒலிக்கும் குரல் கேட்டுக் குரைக்கவே, அஞ்சி, மதர்த்த கயல் மீன்கள் இரண்டு ஒன்றையொன்று எதிர்ப்பது போல அச்சிறுமியின் கண்கள் சுழன்றன.

அக்கண்கள் தனக்குத் துன்பம் தந்தன என்று தலைவன். தன் பாங்கனிடம் கூறுகின்றான்.

எமக்கு

இதைமுயல் புனவன் புகைநிழல் கடுக்கும்
மாமூது அள்ளல் அழுந்திய சாகாட்டு
எவ்வம் தீர வாங்கும் தந்தை
கைபூண் பகட்டின் வருந்தி
வெய்ய உயிர்க்கும் நோயாகின்றே

பயிர் விளைவிக்கும் புதிய கொல்லையை ஆக்க முயலும் குறவன் மரங்களை வெட்டிச் சுட்டெரிக்கும் புகை போலும் பழைய பெரிய சேற்றிலே, வண்டிச் சக்கரம் அமிழ்ந்துவிட, அதனைக் கடக்க முயலும் அவளது தந்தை, கையிலே வைத்திருக்கும் தாற்றுக் கோலால் எருதுகளை அடித்து விரட்டுகிற போது, அவை வருந்துவது போல எமக்கு அவள் அஞ்சி மருண்டு பார்த்த கண்கள் துன்பம் செய்தன.

பெருங் கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங் கழிச் செறுவின் உழாஅது செய்த
வெண் கல் உப்பின் கொள்ளை சாற்றி
என்றூழ் விடர குன்றம் போகும்
கதழ் கோல் உமணர் காதல் மடமகள்
சில் கோல் எல் வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண் கல் உப்பு எனச்
சேரி விலைமாறு கூறலின், மனைய
விளி அறி ஞமலி குரைப்ப, வெரீஇய
மதர் கயல் மலைப்பின் அன்ன கண் எமக்கு
இதை முயல் புனவன் புகைநிழல் கடுக்கும்
மா மூதள்ளல் அழுந்திய சாகாட்டு
எவ்வம் தீர வாங்கும் தந்தை
கை பூண் பகட்டின் வருந்தி
வெய்ய உயிர்க்கும் நோய் ஆகின்றே.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் பாங்கற்கு உரைத்தது

(அம்மூவனார், அகம். 140)

இதன் அடிக்குறிப்பு எந்த அளவு பொருந்தும் என்று தெரியவில்லை.அமெரிக்கத் தமிழறிஞர் ஜார்ஜ் எல். ஹார்ட், உலகத் தமிழ்ச் செம்மொழி மநாட்டில் இப்பாடலை விளக்கிப் பேசியது மிகச் சுவையாக இருந்தது. புதியவர் வரின், பழகாத வீட்டுநாய்கள் அவரைப் பார்த்துக் குரைப்பது – முன்பு கேட்காத ஒலி கேட்டுக் குரைப்பது இன்றைக்கும் நாம் காணும் காட்சி. அம்மூலனார் மிக இயல்பாக இதைப் பாடியுள்ளார். இவ்வாறு ஓர் அயலகப் பெரியவர் சங்க இலக்கியத்தில் ஈடுபட்டுப் பேசியது சிறப்பாக இருந்தது.

(வேட்டம் – மீன் பிடித்தல். கொள்ளை – விலை. நெல்லுக்கு உப்பு என்பது பண்டமாற்று முறை. ஞமலி – நாய். அள்ளல் – சேறு.)

## 21

## காமுகனுக்குக் கடுந்தண்டனை

ஆணாதிக்கம் என்பதில் காதலித்துக் கை விடுவதே மிகக் கொடிய செயலாகும். சங்கப் பாடல்கள் பல இதனை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பாடுகின்றன. சில பாடல்களின் கீழே அடிக் குறிப்பாளர்கள், நாகரிகம் கருதிப் போலும், இவற்றை மடைமாற்றம் செய்து எழுதியுள்ளனர். ஆயினும் அனைத்துப் பாடல்களிலும் காணாத வகையில் வெளிப்படையாக, அன்று காதலித்து ஏமாற்றியவனுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையை, மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார் பாடியுள்ளார்.

பரத்தையர் சேரி போய்வந்த தலைவன் தான் அவ்வாறு எங்கும் போகவில்லை என்று பொய்கூறிய பொழுது, தோழி இவ்வாறு இடித்துரைக்கிறாள்.

பிணங்கரில் வள்ளை நீடிலைப் பொதும்பின்
மடிதுயில் முனைஇய வள்ளுகிர் யாமை
நொடிவிடு கல்லிற் போகி, அகன்துறைப்

பகுவாய் நிறைய நுங்கிற் கள்ளின்
உகுவார் அருந்து மகிழ்பு இயங்கு நடையொடு
தீம்பெரும் பழனம் உழக்கி அயலது
ஆம்பல் மெல்லடை ஒடுங்கும் ஊர!

பின்னிய தூறுகளையுடைய வள்ளைக் கொடியின், நீண்டு கிடக்கும் இலைகளின் ஊடே, ஒருயாமை உறங்கிக் கிடந்தது. கூரிய நகத்தையுடைய அவ் யாமை, தன் உறக்கத்தை விட்டு, நீரோடலால் ஒலிக்கும் பரல்கற்களின் மேலே சென்று, அகன்ற அந் நீர்த்துறையில், பலரும் பனங்கள் அருந்துங்கால் சிந்தியதை, தன் பிளந்தவாய் நிறையும்படி குடித்து, ஆட்டம்போட்டு பின்னே கிடந்த ஆம்பலின் மென்மையான இதழ்களில் போய் ஒடுங்கி ஓய்வெடுத்துக் கிடக்கும் ஊரனே!

பொய்யால்! அறிவென்நின் மாய மதுவே!
கையகப் பட்டமை அறியாய் நெருநை
மைஎழில் உண்கண் மடந்தையொடு வையை
ஏர்தரு புதுப்புனல் உரிதினின் நுகர்ந்து
பரத்தை ஆயம் கரப்பவும் ஒல்லாது
கவ்வை ஆகின்றால் பெரிதே!

பொய்கூறாதே! நின் வஞ்சத்தை நான் அறிவேன். அது கையகப்பட்டதை – கைக்கு மெய்யாய் வெளிப்பட்டதை – நீ அறிந்திலை! நேற்று மைதீட்டிய கண்களையுடைய இளம் பரத்தையுடன், வையையின் புதிய நல்ல வெள்ளத்தில், மிகுந்த சுதந்திரத்தோடு நீ இன்புற்று ஆடியதை, பரத்தையர் கூட்டம் மறைக்க முயன்றும் முடியாமல் ஊரெலாம் பழிச்சொல் பரவிவிட்டது.

(எது போல என்றால் காதலித்து ஏமாற்றியவனை அறங்கூறு அவையத்தார் தண்டித்தபோது எழுந்த ஆரவாரத்தைவிடப் பெரிதாகப் பரவியது என்பதே இனிவரும் முத்தாய்ப்பான செய்தி.)

காண்தகத்
தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்
கரும்புஅமல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்த்
திருநுதற் குறுமகள் அணிநலம் வவ்விய
அறினிலாளன் அறியேன் என்ற
திறனில் வெஞ்சூள் அறிகரி கடாஅய்
முறிஆர் பெருங்கிளை செறியப் பற்றி
நீறுதலைப் பெய்த ஞான்றை
வீறுசால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே

அழகிய பழம் புகழ்மிக்க கழனிகளையும் கரும்புத்தோட்டங் களையுமுடைய, பெயர்பெற்ற கள்ளூரிலே அழகிய நெற்றியினையுடைய இளைய பெண் ஒருத்தியை வலிந்து கெடுத்த அறநெறி தவறியவன் 'யான் இவளை அறியேன்' என்று பொய் கூறினான். அவனது பொய்யான அக் கூற்றிணை, இந் நிகழ்வை நேரில் கண்ட சான்றாக இருந்தவர்களை அழைத்து, தீர விசாரித்து, உண்மைக் குற்றவாளி அவனென அவையோர் அறிந்தனர். அவனை தழைத்த பெரிய மரம் ஒன்றிலே, நன்கு இறுகக் கட்டி வைத்து, நன்கு ஈயத்தைக் காய்ச்சிய நீற்றை அவன் தலையிலே கொட்டித்தண்டித்தனர். அப்போது அப் அறங்கூறு அவையத்தே எழுந்த ஆரவாரத்தைவிட, நீ இப்போது பொய் கூறிய உன் பரத்தைமை ஒழுக்கம் பற்றிய பழி மிகக் கூடுதலானது.

இவ்வாறு தலைவனிடம் தோழி கூறிய செய்தி அவனுக்கும் ஓர் எச்சரிக்கை போலுளது.

பிணங்கரில் வள்ளை, நீடிலைப் பொதும்பின்
மடிதுயில் முனைஇய வள்உகிர் யாமை
நொடிவிடு கள்ளிற் போகி, அகன்துறைப்

பகுவாய் நிறைய நுங்கிற் கள்ளின்
உகுவார் அருந்து மகிழ்புஇயங்கு நடையொடு
தீம்பெரும் பழனம் உழக்கி அயலது
ஆம்பல் மெல்லடை ஒடுங்கும் ஊர!
பொய்யால்! அறிவென் நின் மாய மதுவே!
கையகப் பட்டமை அறியாய்! நெருநை
மைஎழில் உண்கண் மடந்தையொடு வையை
ஏர்தரு புதுப்புனல் உரிதினின் நுகர்ந்து
பரத்தை ஆயம் கரப்பவும் ஒல்லாது
கவ்வை யாகின்றால் பெரிதே! காண்தகத்
தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனி
கரும்புஅமல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்த்
திருநுதற் குறுமகள் அணிநலம் வவ்விய
அறினிலாளன் அறியேன் என்ற
திறனில் வெஞ்சூள் அறிகரி கடாஅய்
முறியார் பெருங்கிளை செறியப் பற்றி
நீறுதலைப் பெய்த ஞான்றை
வீறுசால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே.

(மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார், அகம். 256)

வீறுசால் அவையம் - என்று அறங்கூறு அவையம் (நீதி மன்றம்), குறிக்கப்படுகிறது. 'யாரும் இல்லைத் தானே கள்வன், தானது பொய்ப்பின் யான் எவன் செய்கோ' (குறு. 25) என வருந்திய மகளிர் வாழ்ந்த காலத்தில், தக்க சான்றுகளைக் கொண்டு (சாட்சி) தீர ஆராய்ந்து, கடுந்தண்டனைகள் தரப்பட்டுள்ளன. இப் பாடலில் இது பதிவு செய்யப்படாதிருந்தால், அக்கால வழக்கம் ஒன்று அறியப் படாமலே போயிருக்கும்.

## 22

## தந்தையின் போக்கைத் தடுத்த தனயன்

தோழிக்குத் தலைவி சொன்னது இது. நேற்றைக்கு நம் தலைவன், தாரணிந்த மாலையனாய்ப் புதிதாய்த் தன்னை நன்கு அலங்கரித்துக் கொண்டு, ஒரு பரத்தையை மணம் செய்து கொள்ள விரும்பி, நமது இத் தெரு வழியில் புறப்பட்டுத் தேரில் சென்று கொண்டிருந்தான்.

நிரைதார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டிப் புதுவதின்
இயன்ற அணியன் இத்தெரு இறப்போன்

(வதுவை – திருமணம். இறத்தல் – கடந்துபோதல்)

அப்போது தேரில் பூட்டிய குதிரைகளின் ஒலி கேட்டது. இதனால் அதைப் பார்க்கும் ஆவலுடன், என் மகன் வாயில்காவலைக் கடந்து, தள்ளாடித் தத்தி நடந்து தெருவிற்கு ஓடினான். தன் அழகிய கண்களையுடைய புதல்வனைப் பார்த்த தலைவன் தன் தேரை நிறுத்தும்படி பாகனிடம் கூறி, தேரை விட்டுக் கீழே இறங்கினான்.

மாண்தொழில் மாமணி கறங்கக் கடைகழிந்து
காண்டல் விருப்பொடு தளர்பு தளர்பு ஓடும்
பூங்கட் புதல்வனை நோக்கி நெடுந்தேர்
தாங்குமதி வலவஎன்று இழிந்தனன்.

(கடை கழிந்து – வாயிலை நீங்கி. இழிந்தனன் – இறங்கினான்.)

ஆவலைத் தடுக்கமாட்டாது, பவள வாய் மைந்தனின் செவ்வாய் தன் மார்பகத்தில் பட்டுப் பொருந்தத் தழுவிக் கொண்டான். பிறகு, மகனே! வீட்டிற்குள் செல் என்று சொல்லி, விடுக்கவும் அதற்கவன் உடம்படாது அழுதனன். தன்னைத் தடுத்த பெருஞ்செல்வனனைய மகனுடன் தலைவன் வேறுவழியின்றி வீட்டிற்குள் வந்தான்.

தாங்காது

மணிபுரை செவ்வாய் மார்பகம் சிவணப்
புல்லிப் பெரும! செல்இனி அகத்து எனக்
கொடுப்போற்கு ஒல்லான் கலுழ்தலின் தடுத்த
மாநிதிக் கிழவனும் போன்மென மகனொடு
தானே புகுதந் தோனே...

(அகம் - வீட்டிற்குள். ஒல்லான் - இசையாதவனாக. மாநிதிக் கிழவன் - குபேரன் போன்ற பெருஞ் செல்வன்)

நான் அவ்வாறு மகனை விடுத்ததாகத் தலைவன் எண்ணக் கூடும் என்பதற்காக, வெட்கப்பட்டு, மகனைத் திட்டி, இக் கொடிய பையன். கலக்கிவிட்டான் போலும் என்று கூறி, ஒரு கோலை எடுத்து அவனை அடிக்க நெருங்கினேன்.

யான்அது

படுத்தனென் ஆகுதல் நாணி, இடித்து இவன்
கலக்கினன் போலும் இக் கொடியோன் எனச் சென்று
அலைக்கும் கோலொடு குறுக

மகனைத் தழுவிக் கொண்டு, பரத்தையர் வீட்டிலிருந்து அழைப்பது போல முழவு ஒலிக்கவும் அதைத் தவிர்த்து, நம்மீது அன்பு குறையாது, முன்பு நாம் தோழியருடன் கழங்காடியபோது வந்து நம்மீது காதல் கொண்ட, அந்த அருள் கனிந்த அன்பும் வருத்த, புறப்பட்ட அந்த மணத்தினைக் கைவிட்டு, வீட்டிலே தங்கினான்.

தலைக்கொண்டு

இமிழ்கண் முழவின் இன்சீர் அவர்மனைப்
பயிர்வன போல வந்து இசைப்பவும், தவிரான்
கழங்காடு ஆயத்து அன்றுநம் அருளிய
பழங்கண் ணோட்டமும் நலிய
அழுங்கினன் அல்லனோ அயர்ந்ததன் மணனே.

தோழி! இம்மையிற் புகழுடன் விளங்கி, மறுமையும் சிறப்புற எய்துவர் பகைவரும் விழையும் படியான குற்றமற்ற நல்ல சிறுவரைப் பெற்ற உயர்ந்தவர்கள் என்று, பலரும் கூறும் பழமொழியெல்லாம் நம் வாழ்வில் உண்மையாயிற்று.

இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்று எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பாந்த செம்மலோர் எனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே ஆகுதல் வாய்த்தனம் தோழி!

இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்று எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பாந்த செம்மலோர் எனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே ஆகுதல் வாய்த்தனம் தோழி!
நிரை தார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டி, புதுவதின்
இயன்ற அணியன், இத் தெரு இறப்போன்
மாண் தொழில் மா மணி கறங்க, கடை கழிந்து
காண்டல் விருப்பொடு தளர்பு தளர்பு ஓடும்
பூங் கண் புதல்வனை நோக்கி, 'நெடுந் தேர்
தாங்குமதி, வலவ!' என்று இழிந்தனன். தாங்காது
மணி புரை செவ் வாய் மார்பகம் சிவணப்
புல்லி, 'பெரும! செல் இனி, அகத்து' எனக்

கொடுப்போற்கு ஒல்லான் கலுழ்தலின், 'தடுத்த
மாநிதிக் கிழவனும் போன்ம்' என, மகனொடு
தானே புகுதந்தோனே; யான் அது
படுத்தனென் ஆகுதல் நாணி இடித்து, 'இவற்
கலக்கினன் போலும், இக் கொடியோன்' எனச் சென்று
அலைக்கும் கோலொடு குறுக, தலைக்கொண்டு
இமிழ் கண் முழவின் இன் சீர் அவர் மனைப்
பயிர்வன போல வந்து இசைப்பவும், தவிரான்
கழங்கு ஆடு ஆயத்து அன்று நம் அருளிய
பழங் கணோட்டமும் நலிய
அழுங்கினன் அல்லனோ, அயர்ந்த தன் மணனே.

பரத்தையிற் பிரிந்த தலைமகற்கு வயிலாய்ப் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

(செல்லூர்க் கோசிகன் கண்ணனார், அகம் . 66)

## 23

## முருகாற்றுப்படுத்தல்

தலைவி காதல் வயப்பட்டு காமநோயில் துன்புறுவதை அறியாத பெற்றோர், அவள் வருத்தத்திற்குரிய காரணத்தைப் பலவாறு ஆராய்வர். கட்டுவிச்சி, வெறியாடும் வேலன் போல்வார் இவளுக்கு வந்த இந்த இளம்பருவ நோய் முருகனால் வந்ததென்றும் முருகனுக்கு வெறியாட்டெடுத்துப் பூசையிட்டால் நோய்தீருமென்றும் கூறுவர். அதை நம்பி எடுக்கப்படும் இதற்கு 'முருகாற்றுப்படை' என்று பெயர். முருகனை நோயுற்ற பெண்ணிடம் வந்து நோய் தீர்க்குமாறு வரவழைத்தல் இது.

வள்ளல்களிடம் இரவலர்களை ஆற்றுப்படுத்தல் என்பது இதிலிருந்து தோன்றி, வளர்ந்ததாதல் கூடும். முருகனை வரவழைத்தல் என்பதற்கு வேறாக, முருகனிடம் இரவலனை – ஆர்வலனை – பக்தனை ஆற்றுப்படுத்தல் எனத் திருமுருகாற்றுப்படை அமைந்துளது.

வெறியாட்டு நிகழ்த்தப்பட்ட விதம் குறித்துப்பாடியதால் இப்பாடலைப் புனைந்தவர், வெறிபாடிய காமக்கண்ணியார் எனப்பட்டார்.

**அணங்குடை நெடுவரை உச்சியின் இழிதரும்**
**கணங்கொள் அருவிக் கான்கெழு நாடன்**
**மணங்கமழ வியன்மார்பு அணங்கிய செல்லல்**
**இதுவென அறியா மறுவரற் பொழுதில்**

மலையுச்சியிலிருந்து அருவிகள் விழும் காடுசூழ் மலைநாடனது மணம் கமழும் மார்பு காரணமாக வந்த நோயை, எதனால் வந்ததென அறியாது மயங்கிய போது

**படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை**
**நெடுவேள் பேணத் தணிகுவள் இவள்என**
**முதுவாய்ப் பெண்டிர், அதுவாய் கூற**

பகைவரை அழித்த, தடக்கையையுடைய முருகனை வழிபட, இவள் நோய் தணியுமென்று, முன்னறிந்து 'அறிகுறி' கூறும் கட்டுவிச்சியர் கூறினர்.

**களம் நன்கு இழைத்து, கண்ணி சூட்டி**
**வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்து**
**உருவச் செந்தினை குருதியொடு தூஉய்**
**முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்**

வெறியாடுகளம் நன்கு அமைத்து, வேலுக்குக் கண்ணி சூட்டி, கோயிலில் ஒலியுண்டாக முருகனைப் பாடிப் பலி கொடுத்து, அக்கடவுளை வரவழைத்த நள்ளிரவில்.

ஆரம் நாற அருவிடர்த் ததைந்த
சாரல் பல்பூ வண்டுபடச் சூடி

சந்தனம் கமழ, மலைக்குகைகளிற் பூத்த மலர்களைச் சூடித்தலைவன் வந்தான்.

களிற்றிரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்
ஒளித்தியங்கும் மரபின் வயப்புலி போல
நன்மனை நெடுநகர்க் காவலர் அறியாமைத்
தன்நசை உள்ளத்து நம்நசை வாய்ப்ப
இன்னுயிர் குழைய முயங்குதொறும் மெய்ம்மலிந்து
நக்கனென் அல்லெனோ? யானே, எய்த்த
நோய்தணி காதலர்வர ஈண்டு
ஏதில் வேலற்கு உலந்தமை கண்டே

களிறாகிய உணவைத் தேடி, மறைவாக ஒளிந்து தேடும் வலிய புலி போல, நம் காதலர், காவலர் அறியாமல் வர, நம் ஆசை தீர முயங்குந்தோறும், நம் நோய் தணியும் இதை நிறைவேற்றாது, இந்நோய்க்குத் தொடர்பில்லாத வேலனுக்கு வெறியெடுத்தமை கண்டு, என் உடல் பூரித்து, என்னுள் சிரித்துக் கொண்டேன்.

அணங்குடை நெடு வரை உச்சியின் இழிதரும்
கணம் கொள் அருவிக் கான் கெழு நாடன்
மணம் கமழ் வியல் மார்பு அணங்கிய செல்லல்
இது என அறியா மறுவரற் பொழுதில்,
படியோர்த் தேய்த்த பல் புகழ்த் தடக் கை
நெடு வேட் பேணத் தணிகுவள் இவள் என,
முதுவாய்ப் பெண்டிர் அது வாய் கூற,
களம் நன்கு இழைத்து, கண்ணி சூட்டி,

வள நகர் சிலம்பப் பாடி, பலி கொடுத்து,
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்,
முருகு ஆற்றுப்படுத்த உரு கெழு நடு நாள்,
ஆரம் நாற, அருவிடர்த் ததைந்த
சாரற் பல் பூ வண்டு படச் சூடி,
களிற்று - இரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்
ஒளித்து இயங்கும் மரபின் வயப்புலி போல,
நல் மனை நெடு நகர்க் காவலர் அறியாமை
தன் நசை உள்ளத்து நம் நசை வாய்ப்ப,
இன் உயிர் குழைய முயங்குதொறும் மெய்ம் மலிந்து,
நக்கனென் அல்லெனோ யானே - எய்த்த
நோய் தணி காதலர் வர, ஈண்டு
ஏதில் வேலற்கு உலந்தமை கண்டே ?

வரைவிடை வைத்துப் பிரிந்த காலத்து, தலைமகள் ஆற்றாளாக, தோழி தலைமகனை இயற்பழிப்ப, தலைமகள் இயற்பட மொழிந்தது; தலைமகன் இரவுக்குறி வந்து சிறைப்புறத்தானாக, தோழியாற் சொல்லெடுக்கப்பட்டுத் தலைமகள் சொல்லியதூஉம் ஆம்.

(வெறி பாடிய காமக்கண்ணியார், அகம். 22).

(செல்லல் - துன்பம். மறுவரல் - மறுகுதல், உண்மை தெரியாது மயங்குதல். நெடு வேள் - முருகன். முதுவாய் - முன்னறிந்து கூறும் வாய். வளநகர் - வெறியாடுமிடம், கோயிலுமாம். உருவ - அச்சம் தரும், புலி யானையைத் தேடி, மறைவாகப் பதுங்கி ஒளிந்திருந்துதான் பாயும். நேரே சென்றால் யானை வென்று விடும். உலந்தமை - வேண்டாத வெறியெடுத்து வருந்தியமை.)

# 24

## களவொழுக்கத்தில் தடைகள்

களவொழுக்கம் என்பது தலைவன் தன் காதலியைப் பிறர் அறியாமல் சந்திப்பது. அதில் ஏற்படும் தடைகளில் ஏதேனும் ஒன்றிரண்டை ஏனைய பாடல்கள் கூறும். இதில் பரணர் ஏழு தடைகளை அடுக்கிக் கூறி, முடிவில் தடையற்ற நாளிலும் சந்திக்கப் பெறாமையைக் கூறி முடிப்பது, இன்றைய சிறுகதைகள் சில எதிர்பாராத முடிவுடன் அமைவதுபோல உளது. தோழியிடம் தலைவி இதை அடுக்கிக் கூறுவது, தலைவன் காதிலும் விழுவதால், விரைவில் மணம் செய்து கொள்வான் என்பது கருத்து.

இரும்பிழி மகாஅர் அழுங்கல் மூதூர்
விழவின் றாயினும் துஞ்சா தாகும்.

கள் பருகும் இளையோர் திரியும் பழைய ஊரில் விழாக் கால மன்றாயினும் ஊர் உறங்காது.

மல்லல் ஆவணம் மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்

வளமான கடைத்தெருவும் பிற தெருக்களும் உறங்கினும் கடுஞ் சொற் பேசும் தாய் உறங்கமாட்டாள்.

பிணிகோள் அருஞ்சிறை அன்னை துஞ்சின்
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்

கட்டுப்படுத்தி, வீட்டினுள் அடைத்துக் காக்கும் தாய் உறங்கினும் உறங்காத கண்களையுடைய ஊர்க் காவலர் விரைந்து திரிவர்.

இலங்குவேல் இளையர் துஞ்சின் வைஎயிற்று
வலஞ் சுரித் தோகை ஞாளி மகிழும்

விளங்கும் வேலையுடைய இளையர் உறங்கினும் கூரிய பற்களையும் வலமாக வளைந்த வாலினையும் உடைய நாய்கள் குரைக்கும்.

அரவவாய் ஞமலி மகிழாது மடியின்
பகலுரு உறழ நிலவுக் கான்று விசும்பின்
அகல்வாய் மண்டிலம் நின்று விரியும்மே

ஒலிமிக்க வாயையுடைய நாய்கள் குரைக்காமல் உறங்கினும் வானிலுள்ள திங்கள் மண்டிலம் பகல் போல, நிலவைப் பொழிந்து, பரப்பும்.

திங்கள் கல்சேர்பு கனைஇருள் மடியின்
இல்வலி வல்சி வல்வாய்க் கூகை
கழுது வழங்கு யாமத்து அழிதகக் குழறும்

திங்களும் மேற்கே மலையில் மறையினும், வீட்டெலியைப் பிடிக்கத் திரியும் கூகை – கோட்டான், நள்ளிரவில் அஞ்சும்படி ஒலி செய்யும்.

வளைக்கட் சேவல் வாளாது மடியின்
மனைச் செறி கோழி மாண்குரல் இயம்பும்

அக் கூகைச் சேவல் கூவாது மடியினும், வீட்டிலுள்ள சேவல் கோழி, குரலெழுப்பும்.

எல்லாம் மடிந்த காலை, ஒருநாள்
நில்லா நெஞ்சத்து அவர் வாரலரே
அதனால்,
அரிபெய் புட்டில் ஆர்ப்பப் பரிசிறந்து
ஆதி போகிய பாய்பரி நன்மான்
நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல்முதிர் புறங்காட் டன்ன
பல்முட் டின்றால் தோழிநம் களவே

இவை எல்லாம் இல்லாத ஒருநாளன்று, என்னைப் பிரிந்து நில்லாத நெஞ்சுடைய அவர், ஏதோ காரணத்தால் வாராது போவார்.

இவ்வாறு மதில்சூள் உறையூர் வேந்தன் தித்தனது காவற் காடு, பல கற்பாறைகளுடன் தடையாய் இருப்பதுபோல நம் களவு வாழ்க்கையும் பல தடைகளை உடையதாயுளது.

இரவு தொடங்கி, நள்ளிரவிலும் நீண்டு, சேவல் கூவும் புலர் காலை வரை, தடை நீடிப்பதுபோல், பாடல் கருத்துளது.

இரும் பிழி மகாஅர் இவ் அழுங்கல் மூதூர்
விழவு இன்று ஆயினும் துஞ்சாது ஆகும்;
மல்லல் ஆவண மறுகு உடன் மடியின்,
வல் உரைக் கடுஞ் சொல் அன்னை துஞ்சாள்;
பிணி கோள் அருஞ் சிறை அன்னை துஞ்சின்,
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்;
இலங்குவேல் இளையர் துஞ்சின், வை எயிற்று
வலம் சுரித் தோகை ஞாளி மகிழும்;
அர வாய் ஞமலி மகிழாது மடியின்,
பகல் உரு உறழ நிலவுக் கான்று விசும்பின்
அகல்வாய் மண்டிலம் நின்று விரியும்மே;
திங்கள் கல் சேர்பு கனை இருள் மடியின்,
இல் எலி வல்சி வல் வாய்க் கூகை
கழுது வழங்கு யாமத்து அழிதகக் குழறும்;
வளைக்கண் சேவல் வாளாது மடியின்,
மனைச் செறி கோழி மாண் குரல் இயம்பும்;
எல்லாம் மடிந்தகாலை, ஒரு நாள்
நில்லா நெஞ்சத்து அவர் வாரலரே; அதனால்
அரி பெய் புட்டில் ஆர்ப்பப் பரி சிறந்து

ஆதி போகிய பாய்பரி நன் மா
நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல் முதிர் புறங்காட்டு அன்ன
பல் முட்டின்றால் - தோழி! - நம் களவே.

தலைமகன் சிறைப்புறத்தானாக. தோழிக்குச் சொல்லுவாளாய், தலைமகள் சொற்றது; தோழி சொல் எடுப்ப, தலைமகள் சொல்லியதூஉம் ஆம்.

- (பரணர், அகம். 122)

## 25

## வீடு நோக்கி விரையும் மனம்

இதனை இன்றைய மாந்தர் மனநிலைக்கு ஒப்பிடலாம். காலையில் வேலைக்குப் போனவன், அந்த வேலை முடிந்த வேளையில் தன் வீட்டிற்கு விரைவது இயற்கை.

இந்த மனநிலையை இப்பாடல் அழகுறச் சித்திரிக்கிறது. தன் தேர்ப்பாகனிடம் தலைவன் விரைந்து தேரைச் செலுத்தக் கூறுவது இது.

விருந்தின் மன்னர் அருங்கலம் தெறுப்ப
வேந்தனும் வெம்பகை தணிந்தனன்

புதிய பகை மன்னர்கள் பணிந்து அரிய அணிகலன்களைத் திறையாகச் செலுத்தவே வேந்தன் பகை தணிந்தான். போரும் முடிந்தது.

தீம்பெயல்
காரும் ஆர்கலி தலையின்று, தேரும்
ஓவத் தன்ன கோபச் செந்நிலம்
வள்வாய் ஆழி உள்ளுறுபு உருளக்
கடவுக!

இனிய மழையும் ஒலியுடன் பெய்கிறது. ஓவியம் போன்ற பட்டுப் பூச்சிகள் திரியும் செம்மண் நிலத்தில், தேரின் கூரிய வாயையுடைய சக்கரங்கள், நிலத்தினுள் உருளத் தேரை விரைந்து செலுத்துக!

மதவுநடைத்

தாம்பு அசை குழவி வீங்குசுரை மடியக்
கனையலங் குரல காற்பரி பயிற்றி
படுமணி மிடற்ற பயம்நிரை ஆயம்
கொடுமடி உடையர் கோற்கைக் கோவலர்
கொன்றையங் குழலர் பின்றைத் தூங்க
மனைமனைப் படரும் நனை நகுமாலை

மெத்தென்ற, கயிற்றில் கட்டி வீட்டில் நிற்கும் கன்றுகளுக்கு மடி நிறைந்த பாலை ஊட்டி அதைக் குறைப்பதற்காக, கனைத்துக் கொண்டு விரைந்து நடந்து, பால்தரும் பசுங்கூட்டம் கழுத்தில் கட்டியமணிகள் ஒலிக்க நடக்கும். மடித்துக்கட்டிய உடையினராம், கோலைக் கையிலுடைய கோவலர், கொன்றைக்குழலை ஊதிக்கொண்டு. பின்னே மெதுவாகவர தத்தம் வீடுகளுக்குப் போகின்ற, மலர்கள் அரும்பும் மாலைப்பொழுது.

தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப்
புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையில் தீவியம் மிழற்றி

தனக்கென வாழாத பண்ணனது தோட்டத்திலுள்ள நெல்லிக் கனியைத் தின்று, நீரைக் குடித்ததுபோல இனிய சுவை திகழப்பேசி.

முகழ்நிலாத் திகழ் தரும் மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி என்மகன் ஒற்றி
வருகுவை யாயின் தருகுவென் பால்என

விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றித்
திதலை அல்குல்எங் காதலி
புதல்வர்ப் பொய்க்கும் பூங்கொடி நிலையே,
......... காண்குவம் பாக!

அரும்பும் நிலவொளியால் விளங்கும் திங்களே! பொற் சங்கிலியணிந்த என் மகனை நினைத்து, அவனுடன் விளையாட நீவரின் உனக்கும் பால் தருவேன் என்று அழகிய கண்ணினையுடைய என் காதலி, விரலால் சுட்டி நிலவை அழைத்து, தன் புதல்வனது அழுகையை இப் பொய்புனை செயலால் மாற்றும் என் பூங்கொடி அனையாளைக் காண்போம்! பாக! விரைவில் தேரைச் செலுத்துக!

இன்றும் 'நிலாநிலா ஓடிவா, நில்லாமல் ஓடிவா!' என்ற மகளிர்பாடலை இது நினைவூட்டுகிறது.

விருந்தின் மன்னர் அருங்கலம் தெறுப்ப
வேந்தனும் வெம்பகை தணிந்தனன். தீம் பெயற்
காரும் ஆர்கலி தலையின்று. தேரும்
ஓவத்தன்ன கோவச் செந் நிலம்
வள் வாய் ஆழி உள் உறுபு உருள
கடவுக. காண்குவம் - பாக! மதவு நடைத்
தாம்பு அசை குழவி வீங்குசுரை மடிய
கனை அல்அம் குரல காற் பரி பயிற்றி
படு மணி மிடற்ற பய நிரை ஆயம்
கொடு மடி உடையர் கோற் கைக் கோவலர்
கொன்றைஅம் குழலர் பின்றைத் தூங்க
மனைமனைப் படரும் நனை நகு மாலை
தனக்கென வாழாப் பிறர்க் குரியாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண் இலைப்

புன் காழ் நெல்லிப் பைங் காய் தின்றவர்
நீர் குடி சுவையின் தீவிய மிழற்றி
முகிழ் நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்!
பொன்னுடைத் தாலி என் மகன் ஒற்றி
வருகுவை ஆயின், தருகுவென் பால் என
விலங்குஅமர்க் கண்ணள் விரல் விளி பயிற்றி
திதலை அல்குல் எம் காதலி
புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே.

வினைமுடித்து மீளும் தலைமகன் சொல்லியது.

– (மாற்றூர் கிழார் மகனார் கொற்றங்கொற்றனார், அகம். 54)

## 26

## மோரியரும் நந்தரும்

சங்கப் பாடல்களில் மோரியர் பற்றியும் நந்தர் பற்றியும் வரும் வரலாற்றுக் குறிப்புக்களைக் கற்பனைகள் என்று தள்ளி விட முடியாது.

மோரியர் தென்திசை நோக்கிப் படையெடுத்துத் தோற்றுத் திரும்பியது, நந்தர்க்கு முந்தைய அஜாத சத்துருவின் காலமா அல்லது அத் நந்தர்க்குப் பிற்பட்ட சந்திர குப்த மௌரியன் காலமா என்பது ஆராயத் தக்கதாக உளது.

இதற்கு வடநாட்டு அரச பரம்பரை வரலாறு முழுமையாக அறியப்பட்டால்தான் இது தெளிவுறும். எனினும் நந்தர் பற்றியும் மோரியர் பற்றியும் வரும் குறிப்புக்கள் தெளிவாக உள்ளன. தலைவன் வாணிகத்தின் பொருட்டு வடநாடு நோக்கிச் சென்றவன், நாம் படும் துயர் கேட்பின் – நம் தூது வரும் சென்றுள்ளனர் என்பதால் – அங்கு தங்க மாட்டான் விரைவில் திரும்பி விடுவான் என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள்.

மோரியர்கள் தங்கள் தேர்கள் செல்வதற்காக, மத்திய இந்தியப் பகுதியில், மலையைக் குடைந்து உண்டாக்கிய பெருவழியில் தலைவன்

சென்றான் என்பதும் அங்கு இனி நந்தரது பெருஞ் செல்வமே கிடைத்தாலும் தங்க மாட்டான் என்பதும் வரலாற்றுக் குறிப்புக்களாகும்.

தூதும் சென்றன, தோளும் செற்றும்
ஓதி ஒண்ணுதல் பசலையும் மாயும்
வீங்குஇழை நெகிழச் சாஅய்ச் செல்லலொடு
நாம்படர் கூரும் அருந்துயர் கேட்பின்
நந்தன் வெறுக்கை எய்தினும் மற்று அவண்

நாமனுப்பிய தூதுவரும் சென்றுள்ளனர், கை வளையல்களும் செறியும். அவை நெகிழுமாறு மெலியும் நம் துயரைக் கேட்டால், அங்குள்ள நந்தரது பெருஞ்செல்வமே கிடைத்தாலும் நம் தலைவர் அங்கே தங்க மாட்டார்.

வெல்கொடித்
துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூதா லத்து அரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசம் கடிப்பிகுத்து இரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை, மோகூர்
பணியா மையின், பகைதலைவந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய அறைவாய் உம்பர்

விரையும் தேரையுடைய கோசர் என்பார், தமது பழைய ஆலமரப் பொதியிலில் முரசம் முழங்க பகைவரைப் போரில் வென்றனர். ஆனால் மோகூர் மன்னன் பழையன் பணிய மறுத்தான். இந்நிலையில் அவர்க்குத் துணையாக, பெரிய சேனையையுடைய, மோரியர் என்ற புதிய அரச குடியினர், தம் புனைதேர்ச் சக்கரங்கள் உருண்டுவர, குடைந்த மலைவழியிடையே...

மாசுஇல் வெண்கோட்டு அண்ணல் யானை
வாயுள் தப்பிய அருங்கேழ் வயப்புலி
மாநிலம் நெளியக் குத்திப் புகலொடு
காப்பில வைகும் தேக்கமல் சோலை
நிரம்பா நீளிடைப் போகி
அரம்போழ் அவ்வளை நிலை நெகிழ்த் தோரே

வெண்கோட்டு யானை புலியைக் கொல்ல முயல, அது தப்ப முயன்றதாயினும் அதை மண்தரை நெளியும்படி அவ்யானை மிக்க சீற்றத்துடன் குத்தித் தங்கியிருக்கும்படியான, தேக்குமரங்கள் அடர்ந்த நீண்ட காட்டுவழியிலே சென்றவர் உறுதியாகத் திரும்புவார். கவலற்க!

மோகூர்ப் பழையன், கோசர் என்பார் தமிழக வட எல்லைக்கண் இருந்த அரசர்கள். அவர்கள் ஒருவருடன் ஒருவர் பகைத்து, வம்ப மோரியர், தமிழக எல்லைவரை வர வழி செய்தனர் போலும்,

மோகூர் மன்னன் பணிந்து வழிவிட்டிருந்தால், அவன் நாடு வழியாக வந்திருக்கக் கூடுமென்றும், அவன் பணியாமையின் வேறு வழியில் மோரியர் மலையைக் குடைந்து வழியுண்டாக்கினர் என்றும் கருதும்படியும் பாடல் நடைப்போக்கு உளது.

## 27

## பரத்தைமைக் கேடு

சங்க கால வாழ்வியலில், பரத்தைமை என்பது ஒரு கூறாக இருந்தது. இன்றும் அதன் கொடுமை வேறு பல வடிவங்களில் நிகழ்கிறது. பிறன்மனை நயத்தலைக்கூட, மேலைநாட்டு நாகரிக மேன்மை எனப் போற்றும் காலம் இது.

உலக நாடுகளில் உரிமம் பெற்ற பரத்தைமை பரத்தையர் தொழில் உளது. அன்றும் குடும்ப மகளிர் நிரம்ப இருந்தனர். வசதி வாய்ப்பு மிக்க

பெருங்குடி மக்களின் பரத்தைமை பற்றியும் பரத்தையரிடமிருந்து வந்த தலைவர்களுடன் ஊடுதல் பற்றியும் அத் தலைவர்கள் தம் குறை உணர்ந்து, இரந்து வேண்டி நாணி நிற்றல் பற்றியும், அத்தகைய தலைவர்களை அப்போதைக்கு ஏற்பது அல்லது தவிர்ப்பது பற்றியும் பல பாடல்கள் உள.

ஓரம் போசியாரின் இப் பாடலில் ஒரு குடும்பப் பெண், தன் கணவன் பரத்தைமை வாழ்வில் மூழ்கிக் கிடப்பதையும் பொறுப்பதே நல்லதென்று தோழி அறிவுரை கூறுவதாக உளது. ஆனால் இப்பாடலின் தனித்தன்மை, அன்றைய சில நடைமுறையை வெளிப்படையாகச் சொல்வதுதான்.

பரத்தைமை வாழ்வில் திளைத்தவனைப் பொறுத்துக் கொள்ளாது வெறுத்த உறுதிமிக்க ஒரு தலைவியை அவள் கணவன் ஒரேயடியாகக் கைவிட்டு விட்டானாம். அவளுக்கு உதவுவார் யாருமில்லையாம். அவள்தன் பிள்ளையுடன் தானே சமைத்துண்டு, வாடி வதங்கிக் கிடக்கின்றாள்; அவள் புதல்வர் பாலற்ற தாய்மார்பைச் சுவைத்து, பசித்து அழுகின்றனர். இவ்வாறு பல மகளிர் வாடுவதை அறிந்தும்; நீ பிடிவாதமாக உன்அறியாமையினால், மேன்மேலும் ஊடி, அவனை ஏற்க மறுக்கிறாய். இது தவறு. உன் வாழ்வு பறி போய்விடும்; அவனை ஏற்றுக் கொள் எனத் தோழி கடிந்து சொல்கிறாள்.

துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை
அரிமலர் ஆம்பல் மேய்ந்த நெறிமருப்பு
ஈர்ந்தண் எருமைச் சுவல்படு முதுபோத்து
தூங்கு சேற்று அள்ளல் துஞ்சி

நீர்த் துறையிலே மீன்கள் திரியும்; அக்குளத்தில் உள்ள பெரிய ஆம்பல் மலரைத் தின்ற, முறுக்கேறிய கொம்புகளையுடைய எருமைக்கடா, இரவெல்லாம், அசையும் சேற்றுக்குழம்பிலே கிடந்து உறங்கும். (சுவல் – முதுகு. அள்ளல் – சேறு).

பொழுதுபட

பைந்நிண வராஅல் குறையப் பெயர்தந்து
குரூஉக் கொடிப் பகன்றை சூடி மூதூர்ப்
போர்ச் செறி மள்ளரின் புகுதரும் ஊரன்

சூரியன் தோன்றியதும் அக் குளத்திலுள்ள வரால் மீன்களை மிதித்துக் கொண்டு, சேற்றை விட்டு வெளிப்பட்டு, வெள்ளிய பூக்களையுடைய பகன்றைக் கொடியைத் தலையிலே சுற்றிக் கொண்டு, பழைய ஊர்க்குள்ளே போரில் வென்ற வீரர்போல வரும் ஊரன் இத்தலைவன்.

தேர்தர வந்த தெரியிழை நெகிழ்தோள்
ஊர்கொள் கல்லா மகளிர் தரத்தரப்
பரத்தைமை தாங்கலோ இலன்என, வறிது நீ
புலத்தல் ஒல்லுமோ, மனைகெழு மடந்தை

தனது தேர் கொண்டுவர வந்த, இழை அணிகன்கள் நெகிழும் தோளையுடைய (காமம் மிக்க பரத்தையர்) புதுப்புது மகளிரைத் தரத்தர, இவன் தன் பரத்தைமையைக் கைவிடுதல் இலன் என்று, இல்லற வாழ்வை மேற்கொண்ட மனைவியாகிய நீ, வீணே பயனின்றி அவனுடன் ஊடல் கொண்டு என்ன பயன்?

அது புலந்து உறைதல் வல்லி யோரே
செய்யோள் நீங்கச் சில்பதம் கொழித்து
தாம்அட்டு உண்டு தமியராகி
தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப
வைகுந ராகுதல் அறிந்தும்
அறியார் அம்ம அஃது உடலுமோரே

இவ்வாறு ஒரேயடியாகக் கணவனை வெறுத்ததால் – அவனுடைய பொது மகளிருடனான், கரைகடந்த ஆட்டத்தை மன உறுதி கொண்டு மறுத்ததால்

- அப்பெண்கள் தங்களை விட்டுத் திருமகள் நீங்கப் பெற்றனர். செல்வத்தை இழந்து, மிகக் குறைவான அரிசியைப் புடைத்து, தாமே சமைத்துண்டு, உதவுவார் இல்லாது தனியர் ஆயினர். தங்கள் மக்கள் பாலற்ற மார்பைச் சுவைத்து அழ, வறுமையில் வாடுதலை அறிந்தும், உணர்ப்புவயின் வாரா ஊடலை மேற்கொண்டு, இத்தகைய கேடு வருமென்பதை அறியாராயினர். இதை அறிந்து பொறுத்துப் போவதே உளக்குநல்லது என்றாள் தோழி.

துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை
அரிமலர் ஆம்பல் மேய்ந்த நெறி மருப்பு
ஈர்ந்தண் எருமைச் சுவல்படு முதுபோத்து
தூங்குசேற்று அள்ளல் துஞ்சிப் பொழுதுபட
பைந்நிண வராஅல் குறையப் பெயர்தந்து
குரூஉக் கொடிப் பகன்றை சூடி மூதூர்ப்
போர்ச் செறி மள்ளிரில் புகுதரும் ஊரன்
தேர்தர வந்த தெரியிழை நெகிழ்தோள்
ஊர்கொள் கல்லா மகளிர் தரத்தர
பரத்தைமை தாங்கலோ இலன்என வறிதுநீ
புலத்தல் ஒல்லுமோ? மனைகெழு மடந்தை!
அதுபுலந்து உறைதல் வல்லி போரே
செய்யோள் நீங்க, சில்பதம் கொழித்து
தாம்அட்டுண்டு தமிய ராகித்
தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப
வைகுந ராகுதல் அறிந்தும்
அறியார் அம்ம அஃது, உடலு மோரே

(ஓரம் போகியார், அகம். 316)

(நெறி மருப்பு எருமை - முறுக்கேறிய கொம்புகளையுடைய எருமை. அள்ளல் - சேறு. சேற்றிலே கிடந்து இன்புற்று, வெண்ணிறமுடைய

பகன்றைக்கொடி, கொம்பிலே மாட்டிக்கொள்ள, போர்வீரனைப் போல வரும் எருமை தலைவனைச் சுட்டும் உள்ளுறையாகும். இரவெல்லாம் காற்றிலசையும் நீர்நிலையிலுள்ள சேற்றிலே கிடந்த தென்பது, தலைவன் காம இன்ப நுகர்ச்சியிலே அழுந்திக் கிடந்ததைச் சுட்டுகிறது. பாணர்கள் போல்வார் தேரிலே புதுப்புதுப் பரத்தையரைக் கொணர்வராம். 'ஊர் கொள் கல்லா' – என்பது மரபுத் தொடர். மனை கெழு மடந்தை – இல்லற வாழ்வு மேற்கொண்ட, கற்புடைய மனைக் கிழத்தி. செய்யோள் – இலக்குமி, செல்வத்திற்குப் படிமம். சில் பதம் – குறைவான அரிசியுணவு. அஃது உடலு மோர் என்று, படர்க்கையில் வைத்துச் சொன்னது தலைவியை.

## 28

## ஒரு நாட்டிய அரங்கேற்றம்

தலைவி தன் உயிர்த் தோழியிடம் தான் ஒருவனைக் காதலிக்க நேர்ந்த நிகழ்ச்சியை வெளிப்படுத்துவது.

இது அறத்தொடுநிலை எனப்படும். காதலித்தவனையே கைப்பிடிப்பது தானே அறம். எனவே வேறு ஒருவனை மணக்க ஏதேனும் முயற்சி நடப்பின் தலைவியோ, அல்லது அவள் கூறிய படி தோழியோ தான் ஒருவனைக் காதலிக்க நேர்ந்ததை வெளிப்படுத்துவதே கற்புடைமை, அறவழி நிற்றல் என்னும் பொருள்பட அதை 'அறத்தொடு நிலை' என்றனர். கபிலர் இக்கூற்றைப் புனைவதில் வல்லவர். அவரது குறிஞ்சிப் பாட்டு இதற்குச் சான்று.

இப்பாடலில் கபிலர் ஒரு நாட்டிய அரங்கேற்றம் எவ்வாறு நடந்திருக்கும் என்பதை, நம்மை உணர வைக்கிறார்.

**ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்**
**கோடை அவ்வளி குழலிசை யாக**

காற்றில் அசையும் மூங்கிலில் வண்டுகளால் துளைக்கப்பட்ட, விளங்கும் துளையூடே, மேற்காற்று வீச எழும் ஒலியே குழலிசையாக. (புல்லாங் குழல் புல் – மூங்கில்).

பாடுஇன் அருவிப் பனிநீர் இன்னிசை
தோடுஅமை முழவின் துதைகுரலாக

இனிதாக ஒலிக்கும் அருவியின் குளிர்ந்த நீர் பாய்ந்து விழும் இன்னிசை தோலால் அமைந்த முழவின் செறிவுடைய ஓசையாக

கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு

கலைமான் கூட்டத்தின் ஒலி, மிக்கஒலியுடைய பெருவங்கிய இசையாக

மலைப்பூஞ் சாரல் வண்டுயா ழாக

மலைமீதுள்ள பூஞ்சோலையில் ரீங்காரமிடும் வண்டு யாழிசையாக

இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்க

இந்த இனிய பல்லியத்தின் இனிய ஓசையைக் கேட்டு மகிழ்சிறந்து, நல்ல மந்திகள் – பெண்குரங்குகள் வியப்புடன் பார்க்க.

கழைவளர் அடுக்கத்து இயலி ஆடும்மயில்
நனவுப்புகும் விறலியில் தோன்றும் நாடன்

மூங்கில்கள் வளரும் மலை அடுக்கத்தில் நின்று, அசைந்தசைந்து ஆடும் மயில், ஆடுகளத்தே தோன்றும் விறலிபோல் காட்சியளிக்கும் நாடன். (நனவு – ஆடுகளம்) (இதுவரை தலைவனது நாட்டினைப் பற்றிய புனைவு.)

உருவ வல்வில் பற்றி அம்பு தெரிந்து
செருச்செய் யானை செல்நெறி வினாஅய்

புலர்குரல் ஏனல் புழையுடை ஒருசிறை
மலர்தார் மார்பன் நின்றோற் கண்டோர்
பலர்தில்.

அந்நாடன் அகன்ற தாரணிந்த மார்பினனாய், அழகிய வில்லைக் கையிலேந்தி, அம்புகளை ஆராய்ந்து கொண்டு, தன்னுடன் போர்செய்த யானை சென்ற வழியினைக் கேட்டு, முதிர்ந்த தினைவயலின், வாயிலின் ஒருபக்கத்தே வந்து நின்றான். அவ் இளையோனைக் கண்டவர்கள் என்னுடன் பலராவர்.

வாழி தோழி! அவருள்
ஆரிருள் கங்குல் அணையொடு பொருந்தி
ஓர்யான் ஆகுவது எவன்கொல்
நீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே.

அவர்களுள் இருள் செறிந்த நள்ளிருளிலும் படுக்கையிற் கிடந்து நீர் ஒழுகும் கண்ணுடன் உடலும் தோளும் மெலிந்து யான் ஒருத்தியே ஆனது எதனாலோ? அறியேன் தோழி! வாழி!

ஆடு அமைக் குயின்ற அவிர் துளை மருங்கின்
கோடை அவ் வளி குழலிசை ஆக,
பாடு இன் அருவிப் பனி நீர் இன் இசை
தோடு அமை முழவின் துதை குரல் ஆக,
கணக் கலை இகுக்கும் கடுங் குரற் தூம்பொடு,
மலைப் பூஞ்சாரல் வண்டு யாழ் ஆக,
இன் பல் இமிழ் இசை கேட்டு, கலி சிறந்து,
மந்தி நல் அவை மருள்வன நோக்க,
கழை வளர் அடுக்கத்து, இயலி ஆடுமயில்
நனவுப் புகு விறலியின் தோன்றும் நாடன்

உருவ வல் வில் பற்றி, அம்பு தெரிந்து,
செருச் செய் யானை செல் நெறி வினாஅய்,
புலர் குரல் ஏனல் புழையுடை ஒரு சிறை,
மலர் தார் மார்பன், நின்றோற் கண்டோர்
பலர்தில், வாழி - தோழி! - அவருள்
ஆர் இருட் கங்குல் அணையொடு பொருந்தி,
ஓர் யான் ஆகுவது எவன்கொல்,
நீர் வார் கண்ணொடு, நெகிழ்தோளேனே?

தோழிக்குத் தலைவி அறத்தொடு நின்றது.

(கபிலர், அகம். 82).

இவ்வாறு மிக நாகரிகமாகத் தலைவி தன் காதலை வெளிப்படுத்துகிறாள்.

மலைமேல் மூங்கிலில் வண்டுகள் துளையிட, அதில் மேல் காற்று வீசும் போதெல்லாம் எழுந்த ஒலி கேட்டுத் தமிழன் குழலிசைக் கருவிகளைக் கண்டான்.

மான் ஆடு மாடு போல்வனவற்றின் இறைச்சிகளை உண்டபிறகு, தோல்களை, உயர்ந்த மரங்களின் கிளைகளில், காய்வதற்காகத் தொங்கவிட்டபோது, அதில் காற்றடிக்கும் போதெல்லாம் பக்கத்துக் கிளை முதலியன உராய்ந்து ஒலி எழுப்பின. இதைக் கேட்ட தமிழன் பலவகைத் தோற்கருவிகளைக் கண்டான்.

எந்த நேரமும் கையில் வில் அம்புடன் வேட்டையாடித் திரிந்த தமிழன், அவ்வாறு வேட்டையாடிக் களைத்த போது ஓய்வெடுத்தான். அப்போதும் அவன் கை சும்மா இராமல், வில்லின் நாணைத் தெறித்த வண்ணம் இருந்தது. அதிலிருந்து இனிய ஓசை வரக் கேட்ட தமிழன் முதலில் வில் யாழையும் பிறகு பல வகை யாழ்களையும் பிற பல நரம்புக் கருவிகளையும் கண்டான்.

தமிழனின் இசையும் இசைக் கருவிகளும் இவ்வாறு இயற்கையிலிருந்து தோன்றி வளர்ந்தமையைச் சங்கப் பாடல்கள் பல நமக்கு உணர்த்துகின்றன.

## 29

## கூத்தர் வாழ்வு

அன்று நாடோடிகளாக வாழ்ந்த கூத்தர், பாணர், பொருநர், விறலியர், கோடியர், பாடினியர் என அனைவர்க்கும் நிலையான வாழ்வு தரத் தமிழக வேந்தர்களும் மக்களும் மறந்தனர்.

முத்தமிழில் மிகச் சிறந்தனவாகிய இசையும் கூத்தும் அவர்களிடமே இருந்தன. சுவரை வைத்துத்தானே சித்திரம் என்பர். இவை பற்றிய நூல்களும் பாடல்களும் இருந்தனவெனினும், இவற்றை நடைமுறையில் கொண்டு இயங்கியவர் இவர்களே.

இவர்களும் வீரநிலைக் காலம் முதல் – வாய்மொழியாகப் பாடித் திரிந்த அதே பழக்கத்தில், ஓரிடத்தில் நிலையாக வாழ்வதை விரும்பிலர்; வெறுத்தனர். 'சாறு (விழா) கழி வழிநாள், சோறு நசையுறாது. வேறுபுலம் முன்னிப்' புறப்பட்டுவிடுவர்.

பரதநாட்டிய மகளிரை, சதிர் ஆடுபவர் எனத் தனிக்குலமாக்கிக் கீழ்மைப்படுத்தினர். இசை வல்லுநராம் மேள காரரையும் தாழ்மைப் படுத்தினோம். தமிழ்ப்பண் ஓதுவாரைப் புறந்தள்ளி, ஒதுக்கினோம்.

நாடு விடுதலை பெறுவதற்கு முன்னர் வரை – அதாவது இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இந்நிலையே நீடித்தது.

இவை அனைத்தையும் மேட்டுக்குல மக்கள் என எண்ணிய, பிராமண குலத்தவரிடம் விட்டு விட்டோம். சில நூற்றாண்டுகளாகவே அவர்கள் இக் கலைகளைத் தமதாக்கிக் கொள்ள, 'நாமே உதவிப்

புரவலர்களாய் அள்ளி அள்ளிக் கொடுத்து, மேலே சுட்டிய மூவரையும் இழி குலத்தவராக ஆக்கி, அழிக்கவே முயன்றோம்.

இன்று அவர்களைப் புறக்கணித்து விட்டு, மேளகாரர், ஓதுவார்களை எல்லாம் ஓரங்கட்டிவிட்டு, தமிழிசையை நடைமுறை இசையாக ஒலிக்க வழிவகை காணாமல் 'ஆராய்ச்சி' செய்கிறோம்.

தமிழிசை எங்களது, கருநாடக இசை எங்களது, நாட்டிய நன்னூல் எங்களது என மேடைகளில், தொண்டை வறள முழங்குகிறோம். இங்கே தமிழர் யாருக்கும் வெட்கம் இல்லை.

இன்று தமிழ் செம்மொழி ஆகிவிட்டதாம். நமது பொதுமக்களில், அமைச்சர்களில், பாராளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களில் எத்தனை பேருக்குச் செவ்வியல் தமிழ் இலக்கியம் பற்றி என்ன தெரியும்? பட்டிமன்றப் பேச்சாளர்கள், கவியரங்கக் கவிஞர்களில் எத்தனை பேருக்கு, இதில் நுண்மாண் நுழைபுலம் உளது?

இவற்றில் வல்லுநராவாரை எல்லாம் ஒரேயடியாகப் புறக்கணித்துவிட்டு, செம்மொழியை வளர்ப்பது எப்படி? சுவரை இடித்து விட்டு, சித்திரம் வரைவது எவ்வாறு?

முற்றிலும் 'தொலைநோக்கு' அற்ற தலைவர்களிடையே வாழும் நாம், முன்பும் இது போலவே துறை வல்லாரைப் புறக்கணித்ததால் விளைந்த கேடுகளை எண்ணிப் பார்க்கக் கடமைப் பட்டுள்ளோம்.

அதியன் விண்ணத்தனார் என்ற புலவர், அகநானூற்றில் அக்காலத்தில் 'கூத்தாடி' வாழ்ந்த 'கோடியர்' வாழ்வு பற்றி ஒரு பாடலில் கூறுகிறார். இது போல் நூறு சான்றுகள் உளவெனினும், இஃது ஒன்று போதும் உணர்வதற்கு.

பிரிவிடை வருந்தும் தலைவிக்குத் தோழி ஆறுதல் கூற முயன்றாள். அதற்குத் தலைவி கூறிய மறுமொழியே இப்பாடல். என்னதான்

இருந்தாலும் தலைவன் செய்த காதலை மறக்க முடியாதென்பது தலைவி கருத்து.

வறன்உறு செய்யின் வாடுபு வருந்தி
படர்மிகப் பிரிந்தோர் உள்ளுபு நினைதல்
சிறுநனி ஆன்றிகம் என்றி, தோழி!

நீரற்ற வயல்போல வாடி வருந்திடப் பிரிந்தவரை, இன விடாது நினைந்து வருந்தாமல், சிறிது பொழுதேனும் பொறுத்து, அமைதியாக இருப்போம் என்று, தோழி! நீ கூறுகின்றாய்! அது எப்படி முடியும்?

நல்குநர் ஒழித்த கூலிச் சில்பதம்
ஒடிவை இன்றி ஓம்பாது உண்டு
நீர்வாழ் முதலை ஆவித் தன்ன
ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடத்து
ஊர்இஃது என்னா ஊறுஇல் வாழ்க்கை

கூத்துப் பார்ப்பவர் நல்கிய சிறிதளவு உணவை, இடையீடின்றிப் பாதுகாவாது உண்டனர். நீரில் வாழும் முதலை, வாயை அகலத்திறந்தது போன்ற ஆரைப்பாய் வேய்ந்த, பூணுள்ள சக்கரத்தையுடைய வண்டியில் செல்கின்ற வாழ்வினர். தமக்கென்று ஓர் ஊர் இன்றி, நாடோடிகளாய்ச் செல்பவர். ஊறு – துன்பமில்லா வாழ்வினர்.

சுரமுதல் வருத்தம் மரமுதல் வீட்டி
பாடுஇன் தெண்கிளை கறங்கக் காண்வர
குவிஇணர் எருக்கின் ததர்பூங் கண்ணி
ஆடூஉச் சென்னி தகைப்ப, மகடூஉ
முளரித் தீயின் முழங்கழல் விளக்கத்துக்
களரி ஆவிரை கிளர்பூங் கோதை
வண்ண மார்பின் வனமுலை துயல்வர
செறிநடைப் பிடியொடு களிறுபுணர்ந் தென்ன

பாலை வழி வந்த சோர்வு தீர, ஒரு மரத்தடியில் தங்கினர். கிணைப்பறை இனிதாக ஒலிக்க, குவிந்த கொத்தாக மலர்ந்த எருக்கம்பூ மலர் மாலையை ஆடவரணிய, காட்டுத் தீயின், ஒளிபோல் சிவந்த ஆவிரம்பூ மாலைகள் மகளிரின் மார்பை அலங்கரித்து அசைகின்றன. இங்ஙனம் பெண்யானையும் களிற்று யானையும் போல் சேர்ந்துள்ளனர்.

குறுநெடுந் தூம்பொடு முழவுப்புணர்ந்து இசைப்ப
கார்வான் முழக்கின் நீர்மிசைத் தெவிட்டும்
தேரை ஒலியின் மானச் சீர்அமைத்து
சில்லரி கறங்கும் சிறுபல் வியத்தொடு
பல்லூர் பெயர்வனர் ஆடி

சிறிய பெரிய வங்கியங்கள் ஒலிக்க, தண்ணுமை (மத்தளம்) ஒத்திசைக்க, கரிய முகில் இடியோசையுடன் மழை பெய்யும் போது, நீரின்கண் தேரைகள் ஒலிப்பது போலத் தாளம் அமைத்து, சில்லரியுடன் பல வாத்தியங்கள் ஒலிக்கும். இவ்வாறு பல்லியம் முழங்கக் கூத்தாடி, பல ஊர்களுக்கும் மாறிமாறிச் சென்று மக்களை மகிழ்விப்பர்.

ஒல்லென
தலைப்புணர்த்து அசைத்த பஃறொடைக் கலப்பையர்
இரும்பேர் ஒக்கல் கோடியர், இறந்த
புன்தலை மன்றம் காணின், வழிநாள்
அழுங்கல் மூதூர்க்கு இன்னாதாகும்
அதுவே மருவினம் மாலை அதனால்
காதலர் செய்த காதல்
நீடின்று மறத்தல் கூடுமோ மற்றே

ஓர் ஊரில் கூத்து முடிந்ததும், மிக விரைவாக, பலவகை வாத்தியங்களை ஒன்றாக மூட்டையாகக் கட்டிக் கொண்டு, அங்கிருந்து போய்விடுவர்.

அவ்வாறு அவர்கள் போனபின் அந்த இடத்தைப் பார்த்தால் அவ்வூரார்க்கு வெறிச்சோடி மிக வருத்தமாக இருக்கும். அது போன்ற வருத்தத்தையே இம் மாலைப் பொழுதில் நாம் அடைந்தோம். நம் காதலர் நம்மிடம் செய்த காதலை நம்மால் மறக்க முடியுமோ? முடியாதல்லவா?

வறன்உறு செய்யின் வாடுபு வருந்திப்
படர்மிகப் பிரிந்தோர் உள்ளுபு நினைதல்
சிறுநனி ஆன்றிகம் என்றி தோழி!
நல்குநர் ஒழித்த கூலிச் சில்பதம்
ஒடிவை இன்றி ஓம்பாது உண்டு
நீர்வாழ் முதலை ஆவித்து அன்ன
ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடத்து
ஊர்இஃது என்னா, ஊறுஇல் வாழ்க்கை
சுரமுதல் வருத்தம் மரமுதல் வீட்டி
பாடுஇன் தெண்கிளை கறங்கக் காண்வர
குவிஇணர் எருக்கின் ததர்பூங் கண்ணி
ஆடுஉச் சென்னி தகைப்ப, மகடூஉ
முளரித் தீயின் முழங்கழல் விளக்கத்து
களரி ஆவிரைக் கிளர்பூங் கோதை
வண்ண மார்பின் வனமுலைத் துயல்வர
செறிநடைப் பிடியொடு களிறுபுணர்ந் தென்னக்
குறுநெடுந் தூம்பொடு முழவுப்புணர்ந் திசைப்ப
கார்வான் முழக்கின் நீர்மிசைத் தெவிட்டும்
தேரை ஒலியின் மானச் சீர்அமைத்து
சில்லரி கறங்கும் சிறுபல் லியத்தொடு
பல்லூர் பெயர்வனர் ஆடி, ஒல்லென
தலைப்புணர்த்து அசைத்த பல்தொகைக் கலப்பையர்

இரும்பேர் ஒக்கல் கோடியர் இறந்த
புன்தலை மன்றம் காணின் வழிநாள்
அழுங்கன் மூதூர்க்கு இன்னா தாகும்
அதுவே மருவினம் மாலை அதனால்
காதலர் செய்த காதல்
நீடின்று மறத்தல் கூடுமோ மற்றே

(அதியன் விண்ணத்தனார், அகம். 301)

(செய் - வயல். ஆன்றிகம் - பொறுப்போம். நல்குநர் ஒழித்த கூலிச் சில்பதம் - கூத்தைப் பார்த்தவர்கள், ஏதோ போகட்டுமென்று இருந்ததைத் தூக்கிப் போட்டதால் - தாங்கள் ஆடிய கூத்திற்குக் கூலி போல் கிடைத்த சிறிதளவு உணவு. இன்றும் அதே நிலைதான் உளது. ஒடிவை இன்றி - பசியால் சிறிதும் விடாமல் உண்டனர். தேரை - தவளை. கலப்பையர் - இசைக் கருவிகளுள்ள பை. இறந்த - போய்விட்ட.)

## 30

## வேள்வியும் வேந்தரும்

தமிழகம் அன்று வீரநிலைக் காலத்தைக் கடந்து கொண்டிருந்தது. மனிதன் வேட்டையாடி மட்டுமே உண்டு, உறங்கி வாழ்ந்ததும், தேன், தினை, காய், கனி, கிழங்குண்டு வாழ்ந்ததும் வேளாண்மை மேற்கொண்டு புன்செய், நன்செய்ப் பயிர்களை விளைவித்து பயறுவகை, உழுந்து, நெல், முதலான உணவு வகைகளை உண்டும் வாழ்ந்த இப் பல்வேறு நிலைகளையும் சங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன.

இறைச்சி, கள்மதுவகை, காமஇன்ப வாழ்வு - இவை அன்றைய நிலையில், நடைமுறையிலிருந்தமையால், இவற்றில் குற்றங்குறை காணுதல் அரிதாக இருந்தது.

பெரும்பான்மையான இவர்களிடையே, மேற்கூறிய தீய பழக்கங்களை வெறுத்த, மக்களுக்கு நல்வழி காட்டிய சான்றோர்களும் இருந்தனர்.

எனினும் அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி என்பர். செல்வச் செருக்குமிக்க வேந்தர், மன்னர், மறவர் அனைய பலர் உயிரினங்களை வேட்டையாடி, இறைச்சி உணவை உண்டு மகிழ்ந்திருந்தனர். உலக நிலையாமையைக் கூறும் மதுரைக் காஞ்சி, பாண்டியனுக்குக் கூறும் அறிவுரை, 'மதுவினை மகளிர் வாக்குபு தரத்தர, அதனை உண்டு,நின் வாழ்நாளை இனிதே கழிப்பாயாக' (779 - 782) என்பதுதான்.

இந்த இறைச்சியும் மதுவும் வடநாட்டில் அந்தணர்களால், வேள்வி என்ற பெயரால், அதுவே - அது ஒன்றே வாழ்வாக, வழிபாடாகக் கைக் கொள்ளப்பட்டிருந்தது. அவர்களும் அனைத்து உயிரினங்களையும் நெருப்பில் போட்டு, அக்கினிதேவன் மூலமாகத் தேவர்களுக்கு அனுப்புவதாகக் கூறினர். சோம பானம் பருகி இன்புற்றதோடு அதனையே வழிபடவும் செய்தனர். இந் நிலையில் அவர்கள் தென்னாட்டில் புகுந்த போது, தமிழக வேந்தர்களுக்கு வேள்வி மூலம் இறைச்சியும் சோமபானமும் கிடைத்ததால் இருவரும் ஒற்றுமைப் பட்டுப் போயினர்.

போதாக் குறைக்கு இவ்இறைச்சியையும் சோம பானத்தையும் தந்தவர்கள், குளிர்ப்பகுதியிலிருந்து வந்தவர்களாதலின் சிவப்பாகவும் அழகாகவும் இருந்தனர். ஆண்களும் பெண்களும் அழகாக இருந்ததுடன், இவ் வேள்வி முறையாலும் ஒன்றுபட்டதால், ஏனைய அனைவரையும் புறந்தள்ளி – பாணர், பொருநர், விறலியரை எல்லாம் கைவிட்டு – இவ்வாறு புதிதாக வந்தவர்களுடன் ஐக்கியமாயினர்; பிறகு அடிமையாயினர்.

ஆரியர்கள் வடமேற்கே கைபர், போலன் கணவாய் வழி வந்த போது, பாதையும் குறுகலாய், குளிர்ச்சி மிகுதியாய், கரடுமுரடாய் இருந்ததால் வரும் வழியிலேயே பெண்கள் பலர் இறந்துபோயினர் என இந்திய வரலாற்றாசிரியர்கள் குறித்துள்ளனர். பெண்கள் தொகை குறைவாயும் ஆண்கள் தொகை மிகுதியாயும் இருந்ததால், வடநாட்டிலேயே அவர்கள் அங்கிருந்த பெண்களை மணக்க நேர்ந்தது. இவ்வாறு ஆரியர்களில் தூய ஆரியர், பலவகைக் கலப்புற்ற ஆரியர் என இவர்கள் பிரிந்தனர் என்பர்.

இவர்களிலும் தென்னாடு போந்தவர்கள் தென்னாட்டுப் பெண்களையே மணந்தனர். ஆயினும் வேதம் ஓதுதல், பிறசில 'அனுஷ்டான ஆசாரங்கள்' ஆகியவற்றைக் கைவிட்டிலராயினும், அவர்களின் வட்டாரப் பேச்சு வழக்கில் தூய தனித்தமிழ் உறவுப் பெயர்கள் முதலாயின வழங்கலாயின. இங்ஙனம் தொன்மைமிக்க காலத்தில் தென்னாடு போந்து கலப்புற்றவர்களை, வடநாட்டவர் 'பிரஹ்ம இராட்சதர்கள்' என அழைத்ததாக, பி.டி. சீனிவாச அய்யங்கார் குறிப்பிடுகிறார்.

வடமொழி ஓதி, வேள்வி செய்தாலும் இப்பழங்காலத் தமிழக அந்தணர்கள் பிற யாவற்றிலும் தூய தமிழ் அந்தணர்களாகவே வாழ்ந்தனர். இதைச் சங்கப் பாடல்களால் அறியலாம்.

இடைக் காலத்தும் பிற்காலத்தும் – அதாவது பல்லவ, நாயக்கர் காலங்களில் புதிதாகக் குடியேற்றப்பட்ட சமஸ்கிருத, தெலுங்குப் பிராமணர்களாலேதான், தமிழுக்குக் கேடு சூழப்பட்டது. இதனால் இங்கிருந்த பழையவர்களும் கெட்டொழிந்தனர். இன்று பிராமணர்களில் தமிழை ஆதரிப்பாரும் தம்மைத் தமிழர் என்றே முழுமையாய் – 'உள்ளந்தரத்தில்' – நம்புவாரும், தம்மைத் தமிழரல்லர் என உள்ளூற

எண்ணி, தமிழுக்கு உடன்பிறந்தே கொல்லும் நோய்போல் வாழ்வாரும் எனப் பல வகையினர் இருப்பதற்கு இவ்வரலாறே அடிப்படையாகும்.

இது இன்னமும் நன்கு விரிவாக ஆராய்ந்து எழுதப்பட வேண்டியதாகும். இவ்வாறே எண்ணிப் பார்த்தால்

| | | |
|---|---|---|
| சங்க காலம் | – | தமிழர் எழுச்சியும் வீழ்ச்சியும் |
| தமிழகப் பிராமணரால் | – | தமிழின் எழுச்சியும் வீழ்ச்சியும் |
| பிராமணியம் | – | உடன்பிறந்தே தமிழையும் தமிழரையும் கொல்லும் பிறவித் தொற்று நோய் |

என மூவகையாக ஆராய்ந்து எழுதக் கூடுதலான தரவுகளும் குறிப்புகளும் உள.

பொருள் தேடப் பிரிந்து போய்க் கொண்டிருந்த ஒரு தலைவன், தன் காதலியை நினைந்து வருந்துவதாக வரும் ஓர் அகநானூற்றுப் பாடலில், இவ்வேள்வி பற்றிய சிறு குறிப்பு உளது. புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் பிற தொகை நூல்களிலும் இரட்டைக் காப்பியங்களிலும் இவற்றுக்கான சான்றாதாரங்கள் நிரம்பக் கிடைக்கின்றன. இனி இப் பாடலைக் காண்போம்.

**தூமலர்த் தாமரைப் பூவின் அம்கண்**
**மாஇதழ்க் குவளை மலர்பிணைத் தன்ன**
**திருமுகத்து அலமரும் பெருமதர் மழைக்கண்**
**அணிவளை முன்கை ஆய்இதழ் மடந்தை**

தூய தாமரை மலரில் இரண்டு குவளை மலர்களைப் பிணைத்து வைத்தாற் போன்ற, அழகிய முகத்தில் சுழலும் குளிர்ந்த இரு கண்களை உடையவள். அழகிய வளையல்களை முன்கையில் அணிந்த இளையவள்.

வார்முலை முற்றத்து நூலிடை விலங்கினும்
கவ்வுப் புலந்து உறையும் கழிபெருங் காமத்து
இன்புறு நுகர்ச்சியில் சிறந்ததொன்று இல்லென
அன்பால் மொழிந்த என்மொழி கேளாய்
பொருள்புரி வுண்ட மருளி நெஞ்சே!

கச்சணிந்த தலைவியின் மார்பைத் தழுவும்போது, நூலளவு இடையே விலகினும், அதனை வெறுக்கும் படியான மிக்க பெருங்காமமாகிய இன்ப நுகர்ச்சியைவிடச் சிறந்த தொன்று இல்லையென்று, நான் அன்புடன் சொன்னதைக் கேளாமல், பொருளில் விருப்பங்கொண்டு இச் சுரவழியிலே வந்த, மயக்கமுற்ற என் நெஞ்சே!

கரியாப் பூவில் பெரியோர் ஆர
அழல்எழு தித்தியம் மடுத்த யாமை
நிழலுடை நெடுங்கயம் புகல்வேட் டாஅங்கு
உள்ளுதல் ஓம்புமதி! இனிநீ!

வாடாத மலர்களைச் சூடிய தேவர்கள் உண்பதற்காக என்று, செந்தீ ஓங்கிய வேள்விக் குண்டத்தில் போட்ட யாமை, தான் முன்பு கிடந்த நிழலுடைய பெரிய குளத்தின்கண் போக விரும்புகின்றாற் போல நீ விரும்புகின்றாய்! இவ்வளவு தூரம் வந்துவிட்ட நீ இனி அதை நினையாதே!

முள்எயிற்று
சின்மொழி அரிவைதோளே, பன்மலை
வெவ்வறை மருங்கின் வியன்சுரம்
எவ்வம் கூர இறந்தனம் யாமே

ஏனெனில் பலமலைகளையும் வெம்மையான பாறைகளையுமுடைய நீண்ட பாலை வழியில், துன்பம் மிக நாம் கடந்து வந்து விட்டோம். இனி முள் போலும் பல் வரிசையையும் சில சொற்களையும் உடைய காதலியின்

தோளை நினைப்பதை (காரியம் முடியும் வரை) நினைப்பதைக் கைவிடுவாயாக!

தூமலர்த் தாமரைப் பூவின் அம்கண்
மாஇதழ்க் குவளை மலர்பிணைத் தன்ன
திருமுகத்து அலமரும் பெருமதர் மழைக்கண்
அணிவளை முன்கை, ஆயிதழ் மடந்தை
வார்முலை முற்றத்து நூலிடை விலங்கினும்
கவவுப் புலந்து உறையும் கழிபெருங் காமத்து
இன்புறு நுகர்ச்சியில் சிறந்ததொன்று இல்லென
அன்பால் மொழிந்த என்மொழி கொள்ளாய்,
பொருள்புரிவுண்ட மருளி நெஞ்சே!
கரியாப் பூவில் பெரியோர் ஆர
அழல்எழு தித்தியம் மடுத்த யாமை
நிழலுடை நெடுங்கயம் புகல்வேட் டாஅங்கு
உள்ளுதல் ஓம்புமதிஇனி நீ. முள்எயிற்று
சின்மொழி அரிவை தோளே! பன்மலை
வெவ்அறை மருங்கின் வியன்சுரம்
எவ்வம் கூர இறந்தனம் யாமே
(எயினந்தை மகனார் இளங்கீரனார், அகம். 361).

'எல்லா உயிர்க்கும் – இன்பம்' (தொல்.) என்றும் ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' (குறள்) என்றும் சிந்தித்த தமிழரிடையேதான், ஆமை முதல் அனைத்தையும் போட்டு, வேள்வி செய்யும் பழக்கம் வேரூன்றியது. இன்றுவரை ஹோமம், வேள்வி, அபிசேகம் என்று மக்களுக்குப் பயன்படும் அனைத்தையும் மக்கள் நுகர விடாமல், அடித்து, கடவுளுக்கு கடவுளுக்கு என்று கூறி, தமிழரின் இயல்பான பத்திமை உணர்வையே அவர்க்கு எதிராக மாற்றி, தமிழரை நிலையான மூடர்களாக்கியமை இவ்வரலாற்றால் அறியப் படுகிறது.

## அகநானூற்றில் இடம்பெறும் சில அரிய குறிப்புக்கள்

### சமணத்துறவிகள்

உண்ணா மையின் உயங்கிய மருங்கின்
ஆடாப் படிவத்து ஆன்றோர் போல
வரைசெறி சிறுநெறி நிரைபுடன் செல்லும்
கான யானை கவின்அழி குன்றம்

– (காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், அகம். 123)

உணவுண்ணாமையால் வாடிய இடுப்புடன், உடல் மெலிந்து, நீராடாமையால் அழுக்கடைந்த தோற்றமுள்ள மேலோர் – துறவிகள் போல, மலைகள் நெருங்கிய சிறிய வழிகளில் ஒன்றன்பின் ஒன்றாய் வரிசையாகச் செல்லும் யானைகளின் அழகு கெடும்படி, வெப்பம் மிக்க குன்றங்கள். (தலைவன் போன பாலை வழி இது)

காவிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடிய இப் பாடலில், சமணத் துறவிகள் வெற்றுடலுடன் தமிழக மலைப் பகுதிகளில் வாழ்ந்தமை புலனாகிறது.

### நெடுமதில் சூழ் ஊர்

அந்திக் கோவலர் அம்பணை இமிழிசை
அரமிய வியலகத்து இயம்பும்
நிரைநிலை ஞாயில் நெடுமதில் ஊரே

(மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்,அகம். 124)

கோவலர்கள் அந்தி மாலை நேரத்தில் புல்லாங் குழலூதிக் கொண்டு, ஊர் நோக்கித் திரும்புகின்றனர். அழகிய மூங்கிலில் செய்த குழலின் அவ் இனிய இசை, ஊரகத்தேயுள்ள வளமனையில் கேட்கிறது. நிலாமுற்றமாகிய அகன்ற இடத்தையுடைய, மேல்மாடத்தில் நிற்கும் தலைவி இவ் இசையைக் கேட்டுத் துன்புறுவாள் என்று திரும்பிவரும் தலைவன் நினைக்கின்றான். வரிசையான அம்பு நுழையும் புழைஞாயில்களையுடைய நீண்ட மதில் சூழ்ந்த தனது ஊரைத் தலைவன் தன் தேர்ப்பாகனுக்கு நினைப்பூட்டுவது,

விரைந்து தேரைச் செலுத்துவதற்காக. வேந்தனுக்கு போரிடுவதற்கு உறுதுணையாகச் சென்ற தலைவன் இவன். இதனை 'உற்றுழி உதவிப் பிரிதல்' என்பர்.

**பண்டமாற்று**

கடற்கரை மெலிக்கும் காவிரிப் பேரியாற்று
அறல்வார் நெடுங்கயத்து அருநிலை கலங்க
மால்இருள் நடுநாள் போகி, தன் ஐயர்
காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்கு
அவ்வாங்கு உந்தி, அஞ்சொல் பாண்மகள்
நெடுங்கொடி நுடங்கும் நறவுமலி மறுகில்
பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளான்
கழங்குஉறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்
பயம்கெழு வைப்பின் பல்வேல் எவ்வி

(நக்கீரர், அகம். 126)

கடற்கரையில் காவிரியாறு கலக்கும் சங்கமுகத்துறை. அதன் பக்கத்தே மணல் நிறைந்த நீண்ட பெரிய குளங்கள். அவற்றின் நிலை கலங்கப் பாய்ந்து, இருள் சூழ்ந்த நள்ளிரவில் சென்ற, அவள் தமையன்மார், பருத்த கொம்புகளையுடைய வாளை மீன்களைப் பிடித்துக்கொண்டு காலையில் வந்தனர்.

அழகிய உந்தியினையும், நல்ல பேச்சினையுமுடைய பாண்மகள் தன் தமையன்மார் தந்த வாளைமீன்களுடன் நீண்டகொடிகள் அசையும் கடைத்தெருவிற்குப் போனாள். (அன்று கடைகளில் இன்ன பொருள் விலைக்கு விற்கப்படுமென்பதைக் கொடிகள் கட்டி வைத்து அறிவிப்பர்.) கள் நிரம்ப விற்கப்படும் இடம் அது. அங்கு தன் வாளைமீனுக்கு, பழைய செந்நெல்லை முகந்து அளந்து விற்பதை வாங்காமல், கழங்கு போல் உருண்டு திரண்ட முத்துக்களையும் நல்ல அணிகலன்களையும் மாற்றாகப் பெற்றுக் கொண்டாள். அத்தகைய வளம் மிக்கது வேற்படையை உடைய எவ்வியினது ஊர்.

அன்று உணவுப் பொருள்களுக்கு இருந்த மதிப்பும் பொன்னும் மணியும் முத்தும் மிகவும் மலிந்து கிடந்தமையும் இதனால் புலனாகின்றன. நக்கீரர் பாடல் இது.

அன்றைய பண்டமாற்று முறையில் வாளைமீனுக்கு முத்து என்றால், அன்றைய செல்வச் செழிப்பு புலனாகிறது. இவை இயற்கை தந்த செல்வங்கள். வாளைமீன் பசியை ஆற்றும்; முத்து பசிக்கு உதவுமா?

## முக்கட் செல்வன்

**ஞாலம் நாறும் நலம்கெழு நல்இசை**
**நான்மறை முதுநூல் முக்கண் செல்வன்**
**ஆல முற்றம் கவின்பெறத் தைஇய**
**பொய்கை சூழ்ந்த பொழில்மனை மகளிர்**

**(பரணர், அகம். 181)**

உலகெலாம் பரவிய நலம் நிறைந்த நற்புகழையுடைய நான்கு மறைகளாகிய பழைய நூலைத் தந்த முக்கட் செல்வனாகிய சிவனின் ஆலமர முற்றத்தில் அழகு பெற அமைத்த பொய்கை சூழ்ந்த பொழிலையுடைய மனையுறை மகளிர் (அவர்கள் அப் பொய்கையில் நீராடி, வழிபட்டனர்.)

ஆலமர் செல்வன், தென்முகக் கடவுள் எனப் பழந்தமிழ் இலக்கியத்தில் வருவன வடநூல்களிற் காணாத செய்தி. கல்லால மரத்தின்கீழ் சனகாதி முனிவர்க்கு சிவன் வேதங்களை உபதேசித்தான் என இது பின்பு புராண மாயிற்று. வியாழ பகவான் என வணங்குவதும் கருதற்பாலது. பொதியில், அம்பலம், மன்றம் என்பனவற்றில் மரங்களை வளர்த்து வழிபட்ட வரலாறு மிகத் தொன்மை வாய்ந்தது. இம் மரவழிபாடே, ஆலமரத்தடியில் சிவன் உறைவதாகக் கருதப்பட்டதற்கு அடிப்படையாகும். வேதம் அருளினான் என இங்கு வருவது தமிழ் வேதமாகும். வடமொழி வேதங்கள் இருடிகளால் உகைக்கப்பட்டன என்பதே, வடமொழி வரலாறு அனைத்திலும் கூறப்படும் செய்தியாகும். முதுநூல் என ஒரு நூலே குறிக்கப்படுவதும் கருதத்தக்கது.

'நன்றாய்ந்த நீள்நிமிர்சடை, முது முதல்வன் வாய்போகா, தொன்று புரிந்த ஈரிரண்டின், ஆறுணர்ந்த ஒரு முதுநூல்' என்று புறநானூற்றிலும் (166) வருகிறது. இவை தமிழர் வழிபாடு வடமொழிச் சாயல் பெறத் தொடங்கிவிட்டதைக் காட்டுகிறது.

### யவனர்

சேரலர்

**சுள்ளியம் பேரியாற்று வெண்நுரை கலங்க**
**யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்**
**வளங்கெழு முசிறி**

**( எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், அகம். 149)**

சேரரின் சுள்ளியம் பெரியாறு என்னும் பெரிய ஆற்றில் நுரை கலங்குமாறு யவனரது, தொழில் மாட்சிமைப்பட்ட பெரியபாய்மரக் கப்பல், பொன்னுடன் வந்து, அதற்கு ஈடாகிய மிளகுக் குவியலை ஏற்றிக்கொண்டு திரும்பிச் செல்லும்படியான வளம் நிறைந்த, சேரநாட்டு முசிறித் துறைமுகம்.

இப் பாடல் மூலம் அறிவன : யவனர்களாகிய கிரேக்க வணிகர்களுடன் தமிழர்களுக்கு வாணிகத் தொடர்பு இருந்தது; யவனர்களில் மிகச்சிறந்த வேலைப்பாடு அமைந்த பாய்மரக் கலங்கள் இருந்தன; முசிறி போன்ற துறைமுகங்கள் இருந்தன; சேர நாட்டில் மிகுதியாக விளையும் 'கறி' எனப்படும் மிளகுக்கு, கிரேக்க நாட்டில் பெரும் மதிப்பு இருந்தது. இறைச்சி உணவை. இன்றைய மசாலை போலச் சமைத்துண்ணக் கறி பயன்பட்டது. இதனால் இன்றைக்கும் இறைச்சிச் சாப்பாட்டிற்குக் 'கறிச்சாப்பாடு' என்ற பெயருண்டு. இன்றும் கறி (Curry) என்ற சொல் ஆங்கில அகராதிகள் அனைத்திலும் உளது.

யவனர் ஓதிம விளக்கு - யவனர் கொணர்ந்த அன்னம் போன்ற விளக்கு (பெரும்பாண். 316, 317). யவனர், நன்கலம் தந்த தண்கமழ் தேறல், பொன் செய் புனை கலத்து ஏந்தி, நாளும் ஒண்தொடி மகளிர் மடுப்ப, மகிழ்சிறந்து ஆங்கு இனிது ஒழுகுமதி (புறம். 56) மத்திகை வளைஇய

மறிந்து வீங்கு செறிவுடை மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து, வலிபுணர் யாக்கை வன்கண் யவனர் (முல்லைப்பாட்டு. 59 - 61). 'யவனர் இயற்றிய வினைமாண் பாவை, கை ஏந்தும் ஐ அகல்' (நெடுநல். 101, 102). இவை போல யவனர் பற்றிய குறிப்புக்கள் மிகப்பலவுள.

## பிரிந்துரை நாட்களை எண்ணும் தலைவி

செய்குறி ஆழி வைகல்தோறு எண்ணி
எழுது சுவர் நனைந்த அழுதுவார் மழைக்கண்
...........

(பொருந்தில் இளங்கீரனார், அகம். 351)

வினை முடித்து, தலைவன் திரும்பி வரும் பொழுது தலைவியை நினைந்து தன் நெஞ்சிற்குச் சொல்வது இது.

அவள் வீட்டுச் சுவரில் ஒவ்வொரு நாளும், ஓர் அடையாளமாக வட்டம் ஒன்று போட்டுவைப்பாள். நாள் ஆக ஆக அதனை அவள், இத்தனை நாட்கள் கடந்தன என எண்ணி எண்ணி அழுவாள். அதனால் அச் சுவர் நனைந்து போனதாம்.

மேலும் பல்லி சொற் பயன் கேட்டு, அதனைப் போற்றித் தொழுது படுக்கையில் கிடப்பாள்.

அத்தகையவளை விரைவில் போய்க் காண வேண்டும் என்று, அவன் நெஞ்சம் ஆவல் கொள்கிறது.

## திருக் கார்த்திகைத் திருவிழா

உலகுதொழில் உலந்து, நாஞ்சில் துஞ்சி,
மழைகால் நீங்கிய மாக விசும்பின்
குறுமுயல் மறுநிறம் கிளர, மதி நிறைந்து
அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்
மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கி
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயர வருகதில் அம்ம!

- (நக்கீரர், அகம். 141)

தலைவன் வருவதாகச் சொன்ன கார்காலம் போய்விட்டது. உலக மக்கள் உழுதொழிலைக் கைவிட்டு ஓய்வுற்றனர். கலப்பைகள் மூலையில் போடப்பட்டுக் கிடக்கின்றன. இப்பொழுது கூதிர்கால மாகிய கார்த்திகை மாதமும் வந்துவிட்டது.

அதாவது மழை பெய்தல் நின்று விட்டதால், தூயதாகக் காட்சிதரும் வானத்தில், தன்னிடமுள்ள குறுமுயலாகிய களங்கமும் விளங்கித் தோன்றுமாறு, மதி முழுமைபெற்று ஒளிவீசித் திகழ்கிறது. அதனுடன் அறுமீனாகிய கார்த்திகை நாள் மீன்சேரும் - கார்த்திகைத் திங்களின் கார்த்திகை நாள்மீன் அன்று, இருள் சூழ்ந்த நள்ளிரவில் தெருக்களில் வரிசையாக விளக்கேற்றிவைத்து, நறுமண மாலைகளை எங்கும் தொங்கவிட்டு, பழஞ்சிறப்புடைய ஊரில் பலரும் கூடிக் கொண்டாடுவர். இத் திருக் கார்த்திகை விழாவை நம்முடன் கொண்டாடவாவது நம் தலைவர் வருவாராக!

இவ்வாறு தன் ஆசையைத் தோழியிடம் தலைவி சொல்கிறாள். வானத்தில் ஆறு புள்ளிகளாக, 'ட' எனும் எழுத்தைப் போன்று, கார்த்திகை நாள் மீன் விளங்கும். அதனால் அது அறுமீன் எனப்பட்டது. ஆறு புள்ளிகளாய் ஒளிவீசும் அதனைப் போல, தெருக்களில் விளக்கேற்றி வழிபடும் வழக்கம் தோன்றியுளது.

ஔவையாரும்,

'இலையில மலர்ந்த முகையில் இலவம்
கலிகொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த
அஞ் சுடர் நெடுங் கொடி பொற்பத் தோன்றி'

- (அகம். 11)

என்று, இவ் விழாவைப் பற்றிக் கூறுகிறார். பிற்காலத்திலும் களவழி நாற்பது, திருஞானசம்பந்தர் தேவாரம் போன்றவற்றில், இவ் விழா பற்றிய குறிப்பு தொடர்ந்து வருகிறது.

நட்சத்திரம் என்று இன்று கூறும் வானத்து விண்மீனின் அமைப்பைப் பார்த்து, அதற்கேற்ப விளக்கேற்றி வைத்து வழிபட்டமை தமிழரின் வானநூற்புலமைக்குத் தக்க சான்றாகின்றது.

### பூந்தொடை விழா

வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்
புலம்புறும் கொல்லோ தோழி

– (மாமூலனார், அகம். 187)

மாமூலனார் எப்பொழுதுமே அரிய செய்திகளை இடையிற் சேர்த்து, ஒரு வரலாற்று அறிஞர் எனப் புனையும் இயல்பினர்.

இப் பாடல் தலைவி தோழிக்குச் சொல்லியது. தலைவன் திரும்ப வந்து, தங்கள் வீட்டு முன் புதுமணல் பரப்பிய முற்றத்தில் தன்னுடன் விளையாடாமல், அம் முற்றம் பொலிவிழந்து போகுமோ என்று வருந்துகிறாள்.

நீண்ட கழலணிந்த வீரம் மிக்க மழவர்கள், தங்கள் மைந்தர்களுக்கு எடுக்கும் பூந்தொடை விழாவின் முதல் நாள் போலவே, புதிய மணல் கொணர்ந்து பரப்பிய நம் அழகிய வீட்டுமுற்றத்தில் பொழுது போக்காகத் தலைவனுடன் விளையாடும் மகிழ்ச்சி இல்லாமல், அம் முற்றம் பொலிவிழந்து போகுமோ என வருந்துகிறாள், தலைவி.

தொடை – தொடுத்தல். பூந்தொடை – போருக்கன்றிப் பயிற்சிக்காக அம்பு தொடுத்துப் பழகுதல். இவ் விழா பலநாள் நடக்கு மாதலின், அதன் முதல்நாள் போல என்று கூறப்படுகிறது. பூந்தொடை விழவு – படைக்கலம் பயின்ற இளைய வீரரைஅரங்கேற்றுவிக்கும் விழா என்பது ந.மு. வேங்கடசாமி நாட்டாரய்யா விளக்கம். இதனைப் பிற்காலத்தே மகார் நோன்பு என்றனர். காரைக்குடி, தஞ்சாவூர் போன்ற இடங்களில் இன்றும் மகார் நோன்புத் திடல் உண்டு. இது மழவரேயன்றித் தமிழரனைவரும்

கொண்டாடிய விழா. படைவீரர்களுக்கு மட்டுமன்றி, வணிகர்களுக்கும், ஆறலை கள்வர்களிடமிருந்து தப்பிக்க, இப்படைப் பயிற்சி தேவைப்பட்டது. புரட்டாசி மாதம் இதனை மகார் நோன்பு, அம்பு போடுதல் என்று சமய விழாவாக இன்றும் ஆண்டுதோறும் நகரத்தார்கள் கொண்டாடுகின்றனர். ஆடிப் பாடி ஊர்வலமாகச் சென்று, வாழை மரத்தில், கையிலுள்ள அம்பு, (வெள்ளியாலானது உட்பட), கிலுக்கி போலும் ஆயுதங்களைப் பிள்ளைகள் கைகளிற் கொடுத்துக் குத்தச் செய்வர். முன்பு முள் முருங்கை போல், குத்துதற் கேற்ற மரத்தில். வட்டக் கோடிட்டு, அதை நோக்கி அம்பெய்து பழகியுள்ளனர். நகரத்தார்கள் உள்ள ஊர்களில் அந்தந்த ஊர் சாமிகளை எழுந்தருளப் பண்ணி, நாற்சந்திகளில் நான்கு திசைகளிலும் - சாமி அம்பு போடுவதாகச் சொல்லி அம்புபோடும் விழா இன்றும் உண்டு. இடைக் காலத்தில் முதன்முதலாகத் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பும் நாளாக இதைக் கொண்டாடினர். பிற்பாடு நாயக்கர் காலத்தே தான் இது நவராத்திரி விழா ஆனது. ஆனாலும் முன்னதின் தொடர்ச்சியாக ஆயுத பூசை, சரசுவதி பூசை என்பன எஞ்சி நிற்கின்றன.

**ஆடல் எங்கே? ஆடியவர் எங்கே?**

**இசை எங்கே? இசைத்தவர் எங்கே?**

முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடு இமிழ் அருவிப் பாறை மருங்கின்
ஆடுமயில் முன்ன தாகக் கோடியர்
விழவுகொள் மூதூர் விறலி பின்றை
முழவன் போல அகப்படத் தழீஇ
இன்துணைப் பயிரும் குன்ற நாடன்

- (அஞ்சியத்தை மகள் நாகையார், அகம். 352)

திருமணமானதும் தலைவனைப் பாராட்டித் தன் தோழியிடம் தலைவி பேசுகிறாள்.

வளைந்த பலாமரத்துக் குடம்போன்ற பலாப்பழத்தை, பல குட்டிகளுக்குத் தலைவனாகிய, கல்லாக் கடுவன் தன் வயிற்றில் தாங்கிக்கொண்டு, தன் பெண் குரங்கை அழைக்கிறது. ஓசையிட்டுப் பாயும் அருவியையுடைய பாறையின் பக்கத்தில், மயில் ஒன்று ஆடுகிறது. அது விறலி போல உளது.

விறலி முன்னே ஆட பின்னே முழவுடன் நின்று ஒருவன் இசைக்கும்படியான கோடியராம் கூத்தர் விழாவில் நடிப்பதுபோல் உளது, இக்காட்சி. அதாவது முன்னே மயிலாட, பின்னே முழவனைய பலாப்பழத்துடன் கடுவன் நிற்கிறது.

இது மிகப் பழங்கால நாட்டுப்புறக் காட்சியாக உளது. இதன் தொடர்ச்சியாக வளர்ந்த இசை, கூத்து, ஆடற்கலைகளைச் சங்கப் பாடல்கள் இன்று கண்முன்னர்க் காட்டுவனபோல் சித்திரிக்கின்றன. ஆயினும் அவ் ஆடலும் பாடலும் இசையும் தடம்மாறிப் போயின.

கடும்பரிப் புரவி நெடுந்தேர் அஞ்சி
நல்லிசை நிறீஇய உரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் இனியனால் எமக்கே.

(மேற்படி)

மணம் செய்து மகிழ்ச்சிதந்த, தலைவன் எத்துணை இனியன் தெரியுமா? தலைவி மூன்று உவமை சொல்லி, அவ் இனிமையை அடுக்குகிறாள்.

விரைந்து செல்லும் குதிரைகளையுடைய, உயர்ந்த தேர்களைப் பெற்றுள்ள அதியமான் அஞ்சியின், தொல் புகழை தன் பாடலால் என்றும் நின்று நிலவச் செய்பவன் புகழ்வாய்ந்த பாணன். நல்ல இசையை நன்கு வரையறை செய்த இனிமை மிக்க இசைநூலின்படி, எண்ணின் முறையில் தாளம் தவறாது இயற்றிய பண்ணைவிட இனியவன், நம் தலைவன்.

அவன் பல பண்ணுடன் தன் திறமையாலே புதிது புதிதாக இயற்றிய திறத்தை விடவும் இனியவன்.

மணம் புரிந்துகொண்ட அந் நாளைவிடவும் இனியன் என்பதை, இவ்வாறு தலைவி கூறுகிறாள்.

ந.மு. வேங்கடசாமி நாட்டாரையா, கரந்தைக் கவியரசு. ரா. வேங்கடாசலம் பிள்ளை இருவரின் உரைவிளக்கம் வருமாறு : "நயவரு பனுவல் என்றது இசைத்தமிழ் நூலை. எண்ணு முறை நிறுத்த - அலகு முறைப்படி அமைத்த. அலகு - சுருதி. பண்களுள்ளே ஏழு நரம்பின் இயன்றது பண் எனவும் ஆறு ஐந்து நான்கு எனக் குறைந்த நரம்புகளால் இயன்றது திறம் எனவும் படும் என்பது, 'நிறை நரம்பிற்றே பண்ணென லாகும், குறைநரம்பிற்றே திறமெனப் படுமே' என்னும் நூற்பாக்களான் அறியப்படும்."

இவ்வாறு வருவனவற்றைப் பாடிக் காட்டி விளக்குவார் இன்று எங்கே? இதன்படி பாடி இன்புறுத்துவாரும் எங்கே?

**கடவுள் உறையும் கந்து**

.... வேங்கை

அடுமுரண் தொலைத்த நெடுநல் யானை
மையல்அம் கடாஅம் செருக்கி, மதம்சிறந்து
இயங்குநர்ச் செகுக்கும் எய்படு நனந்தலைப்
பெருங்கை எண்கினம் குரும்பி தேரும்
புற்றுடைச் சுவர புதல்இவர் பொதியில்
கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து
உடனுறை பழைமையின் துறத்தல் செல்லாது
இரும்புறப் பெடையொடு பயிரும்
பெருங்கல் வைப்பின் மலைமுதல் ஆறே.

(மதுரை ஈழத்துப் பூதன் தேவனார், அகம். 307)

தலைவன் பிரிய எண்ணியபோது, தோழி அவன் போக நினைக்கும் வழியின் கொடுமையைக் கூறிச் செல்லுதலை விலக்கும் கூற்றமைந்தது இப்பாடல்.

வேங்கைப் புலியை வென்று, அதன் வலிமையைத் தொலைத்தது ஒரு நெடுநல் யானை. அது மயக்கம்தரும் மதம் பெருக்கி உலவுகிறது. அது அவ் வழிப் போவாரைக் கொல்லும். முள்ளம் பன்றிகள் திரியும் அக்காட்டில் பெரிய தலையையும் கையையும் உடைய கரடிக்கூட்டம், புற்றாஞ் சோற்றைத் தேடும்.

அங்கு ஒரு 'பொதியில்' இருந்தது. இப்போது அதுஇடிந்து அதன் சுவர்களில் புற்று வளர்ந்து, புதராகிவிட்டது. அங்கு கரிய அடிப்பாகத்தையுடைய கந்து என்ற 'தறி' (கல்தூண் அல்லது மரத்தறி) இருக்கின்றது. அதில் கடவுள் உறைந்ததால் மக்கள் அதை வணங்கி வாழ்ந்தனர். இப் பொழுது மக்கள் போய்விட்டதால், 'கந்து' மட்டுமே உளது; அதிலிருந்த கடவுளும் போய்விட்டது. அங்கு நீண்டகாலமாக வந்து தங்கும் புறாக் கூட்டம், பழக்கம் காரணமாக அதை விட்டுப் போக மாட்டாமல் தம் இனிய பெண்புறாக்களுடன் வந்து தங்கிக் கூடி வாழ்கின்றன. இத்தகைய பெரிய பாறைகள் நிரம்பிய ஊர்களை உடையது அப் பாலை நில மலைவழி. (இத்தகைய வழியைக் கடந்து போதல் கூடுமோ என்பது தோழியின் கேள்வி.)

மக்கள் பொதியில் என ஒரு பொது இடம் அமைத்து, சுவரெழுப்பி, நடுவே கந்து என ஒன்றை நட்டு வைத்து அதையே கடவுள் என வணங்கி வழிபட்டு வந்தனர். இப்பொழுது வழிபடுவோரும் போய்விட்டதால், வெறும் கந்து மட்டும் நிற்கக் கடவுளும் போய்விட்டதாகக் கூறுவது மிகுந்த சிந்தனைக் குரியது.

வடவர்க்கு அக்கினியே கடவுள்; வேள்வியே வழிபாடு. பிற கடவுளர் எல்லாம் மேல் உலகத்தில் உள்ளனர். அதனால் உருவ வழிபாடோ, கோயிலோ எதுவும் அவர்களுக்குக் கிடையாது.

தமிழர்களுக்கு ஒரு தறியோ, கல்லோ, கருவியோ கடவுளுக்கு அடையாளமாக வேண்டும். அவ் உருவிலேயே கடவுள் இருக்கிறார். அதனால் கடவுளும் உருவ வழிபாடும் கோயிலும் தமிழர்க்கே உரியவை.

தமிழர்க்கு ஒரு சிறுபுல் முதல், சாணி, மஞ்சள் உருண்டை வரை, ஏதேனும் ஓர் அடையாளம் கடவுளாகிவிடும். அவர்களின் அன்பு கலந்த

பக்தியாகிய நம்பிக்கையே அவ் அடையாளத்தில் இறைத் தன்மையை 'ஆவாகனம்' செய்து விடுகிறது.

இதற்கு வடமொழி மந்திரங்கள் தேவை இல்லை. வேத உபநிடதம் முதல் அவற்றின் சாரம் எனக் கருதும் கீதை வரை எதிலும் கடவுள், கோயில், வழிபாடு பற்றி ஒரு சொல்கூட இல்லை. அவர்களுக்கு வேள்வியே வழிபாடு; அவர்கள் அக்கினி தேவன் மூலம், வேள்வியில் போடுவன மேலுலகக் கடவுளரின் பசியாற்றப் போய் விடுகின்றன.

முதலில் இங்ஙனம் உயிரினங்களைக் கொன்று மேலுலகத் தேவர்களுக்குச் சோம பானத்துடன் அனுப்பியதை, புத்தர் பெருமான், 'சத்தியாக் கிரகம்' செய்தே தடுத்தார். ஆனால் இவர்கள் புத்த தருமத்தையே உருமாற்றிவிட்டார்கள்.

இன்று மக்களுக்குப் பயன்படும் உடைகள், உணவு வகை, பழங்கள் என அனைத்தையும் வேள்வி, ஹோமம் என்ற பெயரால் நெருப்பில் போடுகிறார்கள்.

தனக்கு எதையும் கொடு என்று கேட்காது, உண்மையான அன்பையே கேட்கும் இறைவனுக்குத் தங்கத் தேர்முதல் வைரமுடி வரை, அக்கடவுள் கேட்பதாகச் சொல்லி, கடவுளரிலும் பணக்காரக் கடவுள், ஏழைக்கடவுள் எனப் பல வகையினரை உருவாக்கிவிட்டார்கள். செலவிற்கேற்ப புண்ணியம் கிடைக்குமாம். ஆன்மிகப் புண்ணிய வாணிகம் செழித்தோங்குகிறது. அதனால் அன்பு தேவைப்படாமல் போகிறது.

கருந்தாட் கந்து, மாத்தாட் கந்து, கந்துடை நிலையினும், கன்றாப்பூர் நடுதறி என வரும் அனைத்தையும் ஆராய வேண்டும்.

கோயில்கள் தோன்றி வளர்ந்த வரலாற்றை முழுவதும் விளக்க வேண்டும்.

தமிழர்கள் ஓர் அரசனுக்குரிய அனைத்தையும் இறைவனுக்கு என - அரண்மனை போலும் கோயில், அனைத்து உபசாரங்கள் - என எல்லாவற்றையும் மாற்றிய வரலாறும் தெளிவுறுத்தப் படவேண்டும்.

திராவிடர் தம் வழிபாட்டின் நெறிமுறை சார்ந்த நடைமுறைகள், இன்றும் காசி, கேதாரம், சீர்சைலம் என வடநாட்டில் இருப்பதுபோலத் தென்னாட்டிலும் மக்கள் நேரே இறைத் திருமேனி அருகே சென்று, தாமே நீராட்டி அபிடேகம் செய்து, தாமே மலர் சூடி தாமே பாட்டுப்பாடி வழிபட்டுத் தியானத்தில் அமரும் வழிபாட்டு நெறிமுறை தமிழகக் கோயில்கள் அனைத்திலும் இடம் பெற வேண்டும்.

### கார்கால முல்லை நிலம்

தலைவன் பாசறையில் இருக்கின்றான். போர் இன்னமும் முடிந்தபாடில்லை. கார் காலமோ வந்துவிட்டது. அவன் கார்காலம் தொடங்கியதும் வந்து விடுவேன் என்று சொல்லிச் சென்றான். இப்போது கார்காலம் வந்தும் அவன் புறப்பட முடியாததால் வருந்துகின்றான். அவ்வாறு தான் வருந்துவதை அறியாத தன் மனைவி, அங்கே வீட்டில் தன்னை நொந்து வருந்துவாளே என்று தன் நெஞ்சிற்குக் கூறுவதாகப் பாடற் பொருள் உளது.

இடைக் காடனார் கார்காலத்தை ஏற்ற முல்லை நிலக் காட்சியை வரைந்து காட்டுகிறார். மழைபெய்கிறது, எவ்வாறு பெய்கிறது?

**இருவிசும்பு இவர்ந்த கருவி மாமழை**
**நீர்செறி நுங்கின் கண்சிதர்ந்தவை போல்**
**சூர்பனிப் பன்ன தண்வரல் ஆலியொடு**
**பரூஉப் பெயல் அழிதுளி தலைஇ, வான் நவின்று**
**குரூஉத்துளி பொழிந்த பெரும்புலர் வைகறை**

பெரிய வானத்தின் மேலே சென்ற, மின்னல் இடியுடன் கூடிய கரிய மேகம் நீர் நிறைந்த நுங்கின் கண் சிதறியவைபோல, தெய்வமுற்று நடுங்குவது போன்ற குளிர்ச்சிமிக்க ஆலங்கட்டிகளுடன், பருத்த மழைத்துளிகளாகப் பெய்தது. இவ்வாறு வானத்தில் பரவி, ஒளிவீசும் துளிகளைப் பெய்து, இருள் நீங்கிப் புலர்ந்த வைகறைப் போது திகழ்கிறது.

செய்துவிட்டன்ன செந்நில மருங்கில்
செறித்து நிறுத்தன்ன தெள்ளறல் பருகி
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
வலம்திரி மருப்பின் அண்ணல் இரலையொடு
அலங்குசினைக் குருந்தின் அல்குநிழல் வதிய

கார்கால மழையில் மானினம் துள்ளிக் குதிப்பதை இது காட்டுகிறது. செயற்கையாக ஒழுங்குபடச் செய்து வைத்தது போன்ற செம்மண் நிலம்; அதில் கொட்டி நிரப்பி நிறுத்திவைத்தது போன்ற தெளிந்த அறல் நீரைப் பருகி, சிறிய குட்டிகளைத் தழுவிக் கொண்ட துள்ளுநடை இளம் மான்கள், வலமாக முறுக்கேறிய கொம்புகளையுடைய தலைமை வாய்ந்த ஆண்மான்களுடன், அசையும் கிளைகளையுடைய குருந்த மரத்தினடியிலுள்ள நிழலில் தங்கின.

சுரும்பு இமிர்பு ஊத, பிடவுத்தளைஅவிழ
அரும்பொறி மஞ்ஞை ஆல, வரிமணல்
மணிமிடை பவளம் போல, அணிமிக
காயாஞ் செம்மல் தாஅய், பலவுடன்
ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்ப
புலன் அணி கொண்ட கார்எதிர் காலை

வண்டுகள் ரீங்காரமிட, பிடரி அரும்புகள் மலர, அழகிய புள்ளிகளையுடைய மயில்கள் ஆட வரிவரியாய்க் கிடக்கும் மணலில் அழகாக உதிர்ந்து கிடக்கும் காயாம் பூக்களிடையே பட்டுப் பூச்சிகள் ஊர்வது நீல மணியுடன் கலந்து கிடக்கும் பவளம் போல அணிசெய்கின்றன. இவ்வாறு காடுசூழ் முல்லை நிலம் அழகு பெற்று விளங்கும். கார் காலம் வந்தது.

ஏந்து கோட்டு யானை வேந்தன் பாசறை
வினையொடு வேறுபுலத்து அல்கி, நன்றும்
அறவ ரல்லர்நம் அருளா தோரென
நம் நோய் தன்வயின் அறியாள்
எம் நொந்து புலக்கும்கொல் மாஅ யோளே

– (இடைக்காடனார், அகம். 304)

பாடல் பல அழகுத் தொடர்களாலும், பின்னப் பட்டுள்ளது. கருவி மாமழை – மின்னல், இடி போலும் கருவிகளையுடைய முகில். நீர் செறி நுங்கு – நீர் கண்தோறும் நிறைந்த நுங்கு. தண்வரல் ஆலி – குளிர்ச்சிமிக்க பனிக்கட்டி போலும் ஆலங்கட்டி. பருஉப் பெயல் அழிதுளி – கொட்டும் மழையில் விழும் பெருத்த துளிகள். பெரும் புலர் வைகறை – ஒளி விளங்கித் தோன்றும் காலைப் பொழுது. தெறிநடை மடப்பிணை – மழை வரவால் துள்ளு நடைபோடும் இளம் பெண்மான்.

வலம்திரி மருப்பு, அலங்கு சினைக் குருந்து, அரும் பொறி மஞ்ஞை, மணிமிடை பவளம், கார் எதிர் காலை, ஏந்து கோட்டுயானை – இவ்வாறு ஒவ்வொரு தொடரும் அவ்வப் பொருளின் இயல்பை, உள்ளவாறு காட்டும். சங்கப் பாடல்களின் சிறப்பு இத்தொடர்களின் கூட்டுறவால் பாட்டை நிறைவு செய்வதுதான்.

**செய்துவிட்டன்ன செந்நில மருங்கில்**
**செறித்து நிறுத்தன்ன தெள்ளறல் பருகி**

இயற்கையாய் அமைந்த ஒன்று, நன்கு கைவினைப்பாட்டுடன் செய்து வைத்தன போல அமைந்துவிடுவதுண்டு. இதனையே வரைபடம் போல், இவ் அடிகள் புனைந்து காட்டுகின்றன.

## பரத்தை சொன்ன நகைச் சுவை

உலகம் சிலவற்றில் அன்றும் இன்றும் ஒன்று போல்தான் உளது. தலைவன் பரத்தை வீடு சென்று, ஆடிப் பாடிவிட்டு, வீட்டிற்கு வந்தான். தலைவி அவன் புனலாடி வந்ததை அறிந்து, ஐயப்பட்டு வினவினாள். அவன் தான் யாரையும் பார்க்கவில்லை என்றும் காவிரியில் யாருடனும் நீராடிவரவில்லை என்றும் பொய் சொன்னான். இதைக் கேள்விப்பட்ட பரத்தை, இவ்வாறு பொய் சொன்னவனைப் பற்றிக் கிண்டலாக, அவ்வாறாயின் நேற்று காவிரி வெள்ளத்தில் நம்முடன் நீராடியவர் யார் என வினவிச் சிரித்தாள்.

மனைவியிடம் பொய் சொல்லும் பழக்கம் அன்றும் இருந்தது என்பதை நினைத்து, இன்றைய ஆடவர் சிலர் ஆறுதல் கொள்ளலாம்.

நறுவிரை தெளித்த நாறிணர் மாலைப்
பொறிவரி இனவண்டு ஊதல கழியும்
உயர்பலி பெறூஉம் உருகெழு தெய்வம்
புனையிருங் கதுப்பின் நீ கடுத்தோள் வயின்
அனையேன் ஆயின் அணங்குக என் என
மனையோள் தேற்றும் மகிழ்ந னாயின்

நறுமண நீர் தெளித்த, மணம் மிக்க மாலையில், பொறி வரி வண்டுகள் ஊதாது அஞ்சிப் போகுமாம். இவ்வாறு வண்டுகள் மொய்க்க அஞ்சும், மிகுந்த பலிகளைப் பெறும் அச்சந்தரும் தெய்வம் மீது ஆணையிட்டுத் தலைவன் சொல்கின்றான்.

அழகிய கரிய கூந்தலையுடைய, நீ ஐயப் படுகின்ற பரத்தையுடன், நான் அவ்வாறு நீராடினேன் என்றால், அத்தெய்வம் என்னைத் தண்டிக்கட்டும் என்று தன் மனைவியை இம் மருதநிலத் தலைவன் தேற்றுகின்றானாம். அவ்வாறாயின்...

யார்கொல் வாழி தோழி! நெருநல்
தார்பூண் களிற்றில் தலைப்புணை தழீஇ
வதுவை ஈரணிப் பொலிந்த நம்மொடு
புதுவது வந்த காவிரிக்
கோடுதோய் மலிர்நிறை ஆடி யோரே

– (இடையன் நெடுங்கீரனார், அகம். 166)

நேற்று, களிறு போன்று பெரிய புணை – தெப்பத்தின் தலைப்பக்கத்தைத் தழுவி, நம்முடன் கூடி மகிழும் அலங்காரத்துடன், கரை கடந்து ஓடிவரும் காவிரி வெள்ளத்தில் நீராடி மகிழ்ந்தவர் வேறு யாராக இருக்கும்? தோழி!

மனைவிக்கு அஞ்சிப் பொய்கூறும் தலைவரைப் பரத்தை நகையாடிக் கூறுகிறாள்.

## முருகனின் திருப்பரங்குன்றம்

நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்
கொடி நுடங்கு மறுகில் கூடல் குடாஅது
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி உயரிய
ஓடியா விழவின் நெடியோன் குன்றத்து
(எருக்காட்டுத் தாயங்கண்ணனார், அகம். 149)

உயர்ந்த யானைகளையுடைய, போர் வல்ல பாண்டியனது கொடிகள் அசையும் தெருக்களையுடைய கூடல் மாநகரத்தின் மேற்குத் திசையில், பல புள்ளிகளையுடைய தோகையை விரிக்கும் மயிலினை, வெற்றிக் கொடியாக உயர்த்திய, இடையறாத விழாவினையுடையது முருகனது திருப்பரங்குன்றம்.

## நடுகல் வழிபாடு

பொருள் கடைக் கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது. செல்வம் தேட வெளிநாடு போதலே அன்றைய வழக்காறு. அதற்கு விருப்பத்தை விளைவித்த தன் நெஞ்சுடன் பேசி, தலைவன் செலவழுங்குகின்றான். செலவழுங்குதல் - செல்லுதலைத் தவிர்தல். ஆனால் இது தலைவன் பொருள் தேடச் செல்லாமலே, மனைவியுடன் தங்கி இன்பம் துய்த்துக் கொண்டிருப்பான் என்று பொருள்படாது. அவ்வாறெல்லாம் சொல்லியும் அவள் மனத்தைத் தேற்றியும் தன் மனத்தையே தேற்றிக் கொள்ளவும் இவ்வாறு சில நாள் தங்கிப் பிறகு பிரிந்து செல்வான்.

தலைவன் தன் மனைவியின் அழகைக் கூறி, 'இவளினும் சிறந்தன்று ஈதல் நமக்கென'த் தன் நெஞ்சம் தனக்குச் சொல்வதாகக் கூறுகின்றான். பிறகு தான் செல்ல நினைக்கும் காட்டின் அச்சந்தரும் நிலையை விவரிக்கின்றான். இறுதியில் 'வருக என்னுதி யாயின், வாரேன் நெஞ்சம்!; வாய்க்க நின் வினையே' என்று முடிக்கின்றான்.

இடையே பாலைநிலைக் காட்டின் தன்மையைச் சொல்லும் போதுதான், 'நடுகல்' பற்றிய குறிப்பு வருகிறது.

வீளை அம்பின் விழுத்தொடை மழவர்
நாள்ஆ உய்த்த நாமவெஞ் சுரத்து
நடைமெலிந்து ஒழிந்த சேட்படர் கன்றின்
கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேலூன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்
வெருவரு தகுந கானம் நம்மொடு
வருக என்னுதி யாயின்
வாரேன் நெஞ்சம் வாய்க்க நின் வினையே

(மதுரை மருதன் இளநாகனார், அகம். 121)

சீழ்க்கை ஒலியுடன் தப்பாது அம்பெய்யும் மறவர்கள், காலையில் ஆக்களைக் கவர்ந்துகொண்டு அச்சந்தரும் பலைவழியில் போயினம். நீண்ட தூரம் நடந்ததால், ஓய்ந்து நின்றுவிட்ட கன்றினது, கடைக் கண்ணிலிருந்து ஒழுகும் நீரைக் கண்டு, இரக்கப்பட்டுக் கரந்தையார் நின்றனர். அவ்வாறு நிரைமீட்டு நின்ற கரந்தையாருடன் வெட்சியார் போரிடவே, மீட்க முயன்றவர் பொருது பட்டனர்.

அவர்களுக்கு நடுகல் எடுத்து, அவர்தம் பெயரும் பீடும் (பெருமையும்) அக் கல்லில் எழுதி (செதுக்கி), மயில் பீலி சூட்டி விளங்கும்படி வைத்தனர். அதன் முன் அவ்வீரனது வேலினை ஊன்றி, அதில் கேடயத்தைச் சார்த்திவைத்தனர். இவ்வாறு தொடர்ந்து, வரிசையாக நடுகற்கள் இருந்தமை, பகைவரது போர்முனை இருப்பை ஒத்துக் காணப்பட்டதால், அவ்வழி அச்சந்தரும் இயல்பினை உடையதானது.

இந் நடுகற்களை முதலில் வெறும் கல்மட்டும் நட்டனர் என்றும் பிறகு பெயரும் பீடும் எழுதி நட்டனர் என்றும் பின்னர் சிலையாக வடித்து அமைத்தனர் என்றும் அறிகிறோம்.

புறநானூற்றில் நடுகல் பற்றிய பாடல்கள் பலவுள. அவை பல வெட்சி, கரந்தைத் திணை பற்றியன (261, 263, 264). இப் போர் முறை

மிகப் பழைமையானது. எனவே நடுகல் பற்றியனவும் தொன்மைமிக்க காலத்தன. பின்னர் வீரர்கள் போரில் மடிந்தால் அவர்கட்கு நடுகல் நடுவது வழக்காறாயிற்று. மாங்குடி கிழார் 'ஒளிறேந்து மருப்பிற் களிறு எறிந்து வீழ்ந்தெனக் கல்லே பரவினல்லது, நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே' என்று பாடுகிறார் (புறம். 335). இந் நடுகல்லைத் தெய்வமாக நினைத்து, பலிகொடுத்தனர். இறைச்சியும் கள்ளும் பிறவும் படைத்து, தொழுது நின்றனர். கோப் பெருஞ்சோழனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் பற்றிய வரலாறு புறநானூற்றில் வருகிறது. தொல்காப்பியர், வெட்சித்திணையில்

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல் என்று
இரு மூன்று வகையில் கல்லொடு புணர (1006)

என்று கூறுவதும் இதன் தொன்மையை வலியுறுத்தும்.

இளங்கோவடிகள், தொல்காப்பியர் வகுத்த நெறிப்படியே வஞ்சிக் காண்டத்தை வகுத்து, கண்ணகிக்குக் கல்லெடுத்ததைப் பாடி இருப்பது, தமிழர் இதன் மீது கொண்டிருந்த ஆழ்ந்த பற்றைப் புலப்படுத்துகிறது.

இன்றைய அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ள நடுகற் செய்திகள் மிகப் பலவாகும்.

பொதுவாக இது,

தமிழரின் உருவ வழிபாட்டிற்கான வேரெனத் தோற்றுகிறது; தமிழரின் படையலிட்டுத் தொழும் படைப்பு நெறியினையும் இது விளக்குகிறது.

தென் புலத்தார் என முன்னோரை வழிபடும் நெறிக்கும் இதுவே கால்கோளிட்டது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர், வானத்துறையும் தெய்வமாகலாம் என்ற கருத்தை உருவாக்கியதும் இதுவே. தமிழரின் வீரத்திற்கும் பத்திமைக்கும் வித்திட்டதும் இதுவே. பிற்காலக் கோயிற்கலை வளர்ச்சிக்கான மூலங்களை இதன் வரலாற்றில் காணலாம்.

தமிழர் சமயநெறிக்கும் இது அடிப்படையாய் அமைந்தது எனில் மிகையாகாது.

## பொதினி – பழனி ஆனது

தலைவன் பிரிந்தவன் வரக் காலம் தாழ்த்த போது, தலைவி தோழியிடம் திருவாவிநன்குடி – பொதினி மலையில் இருந்து, அவன் சூள் உரைத்ததை நினைப்பூட்டுகிறாள். மாமூலனார் ஒரு வரலாற்றுப் புலவர் என்பதை நாம் அறிவோம். அவர் முருகன் வழிவந்த நெடுவேள் ஆவி என்பானது மலை பொதினி என்று கூறுகிறார். பொதினியே மக்கள் பேச்சு வழக்கில் பழனி ஆனது. இதைப் பழநி என எழுதுவது, பிற்காலப் புராணக் கதைகளுடன் தொடர்புடையது. எனினும் மூலப்பெயர் பொதினி – அது பழனி ஆனதும் பழநி ஆனதும் காலப்போக்கில் ஏற்பட்டவை. இன்று பெரிதும் பழனி என்றாவது எழுதவேண்டும். பொதினி என்றே பெயர் மாற்றினால் குற்றமில்லை.

தமிழக மக்கட் பெயர்களும் ஊர்ப் பெயர்களும் ஆற்றுப் பெயர்களும் மலைப்பெயர்களும் தெய்வப் பெயர்களும் பெரிதும் காரணம் காட்டக் கூடிய தூய தமிழ்ப் பெயர்கள். இவற்றை சமஸ்கிருதமயமாக்கியும் உருமாற்றித் திரித்தும் வழங்குவனவற்றை, ஆராய்ந்து திருந்திய வடிவங்களை மட்டுமே ஆள்வது என்றைக்கு நடைபெறுமோ?

வண்டுபடத் ததைந்த கண்ணி, ஒண்கழல்
உருவக் குதிரை மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
அறுகோட்டு யானைப் பொதினி ஆங்கண்
சிறு காரோடன் பயினொடு சேர்த்திய
கற்போல் பிரியலம் என்ற சொல் தாம்
மறந்தனர் கொல்லோ தோழி!

– (மாமூலனார் அகம். 1)

வண்டுகள் மொய்க்கும் மலர்க் கண்ணியினையும் கழலினையும் உடைய அச்சம்தரும் குதிரைகளையுடைய மழவரை வென்ற, முருகனைப் போன்ற நல்ல போர் வெற்றியினையுடைய மன்னன் நெடுவேள் ஆவி. (ஆவியர் குடிவந்த இம் மன்னன் முருகனின் மலைக்குரியவன் மட்டுமன்று, அம்முருகனின் பழந்தமிழ்க் குடிவழி வந்தவன்.) அந் நெடுவேள் ஆவியினது, அறுத்துத் திருத்திய கோட்டினையுடைய யானைகளிருக்கும் பொதினி மலையாகிய அவ்விடத்தே, நம்முடன் இருந்தான். அப்போது அவன், சாணைக்கல் செய்வோன் அரக்குடன் சேர்த்திய சாணைக்கல் எவ்வாறு பிரிக்கவே முடியாதோ, அதுபோல் நாமும் பிரியோம் என்று கூறிய சூளுரையை மறந்தனன் போலும்? (சொன்னபடி இன்னமும் திரும்பிலன்).

## பறவைகளின் நண்பன் ஆஅய் எயினன்

காக்கைகளுக்கு நேரம் தவறாது உணவு வைத்துப் பழக்குவதுண்டு. ஆஅய் எயினன் ஒரு பறவைக் கூட்டத்திற்கே, இடையறாது உணவூட்டி, அவற்றுடன் சிறுகச் சிறுகப் பழகியுள்ளான். அவை அவன் அருகே வந்து அவன் தோளில் அமர்ந்தும் மடியில் விளையாடியும் மிக நெருங்கிப் பழகியுள்ளன.

அவன் ஒரு போரில் மிகக் கடுமையாகப் போர் செய்து, இறுதியில் போர்க் களத்திலேயே மாண்டு வீழ்ந்தனன். இதை உணர்ந்த பறவைக் கூட்டம் அங்கே ஒன்றாகக் கூடி, கடும் சூரிய வெப்பம் அவன் உடல்மீது தாக்காதபடி, நிழல்செய்து காத்தனவாம். இச்செய்தியை பரணர் அகநானூறு 181 ஆம் பாடலிலும் 142ஆம் பாடலிலும் குறித்துள்ளார்.

கபிலர் பறவைகளைப் பழக்கி, அவை வயலெல்லாம் போய்ச் சுழன்று தேடி, பறம்பு மலைக்கு நெற்கதிர்களைக் கொத்திக் கொண்டுவரச் செய்தார். பழங்காலத்தில் பறவைகளைப் பழக்கி, தூதனுப்பும் முறை உலகெங்கும் இருந்துளது. ஆஅய் எயினன் பறவைகளின் நண்பனாய் வாழ்ந்த செய்தியும் மிகப் பெரிய வியப்புக்களில் ஒன்றாகும்.

அடுபோர் மிஞ்இலி செருவிற்கு உடைஇ
முருகுறழ் முன்பொடு பொருதுகளம் சிவப்ப
ஆஅய் எயினன் வீழ்ந்தென, ஞாயிற்று
ஒண்கதிர் உருப்பம் புதைய, ஓராங்கு
வம்பப் புள்ளின் கம்பலைப் பெருந்தோடு
விசும்பிடை தூர ஆடி

(பரணர், அகம். 181)

போர் செய்ய வல்ல மிஞ்இலி என்பானுடன் செய்த போரில் உடைந்து, முருகனைப் போலப் போர்க்களம் சிவக்கும்படி கடும்போர் செய்து, ஆஅய் எயினன் பட்டு வீழ்ந்தனன். இதனால், அவன் உடல்மீது சூரியனின் கதிர்களாலாகிய சூடு தாக்காமல், அவ் வெயிலை மறைத்து, புதிய பறவைகளின் கூட்டம் எல்லாம் ஒருங்கு கூடி, ஆரவாரித்து, வானத்தில் வட்டமிட்டுப் பறந்தன.

இவனைப் 'புள்ளிற்கு ஏமமாகிய பெரும் பெயர், வெள்ளத்தானையினை'யுடையனெனப் பிறிதோரிடத்தில் பரணரே (142) கூறுவதும் காண்கின்றோம்.

அக்காலத் தமிழர்கள் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தனர் என்று மட்டும் அல்லாமல், உறவு கொண்டாடியும் வாழ்ந்தமையை இவை போன்ற செய்திகளால் அறியலாம்.

## உவகை வெள்ளம்

ஒருவரடையும் மகிழ்ச்சிக்கு அளவுகோல் உண்டா? மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தேன் என்று கூறலாமா? உவகைக் கடலில் மூழ்கினேன் எனலாமா? நானடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை எனலாமா?

ஒரு பெண் எல்லையற்ற மகிழ்ச்சியைத் தான் அடைந்ததற்கு ஓர் உவமை கூறுகிறாள். அதுதான் உவகை தரும் உவமை ஆகிறது.

தலைவன் திருமணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டான். திருமணம் நடக்கப் போகிறது. இந்த நல்ல செய்தியைத் தோழி தலைவிக்குக் கூறுகிறாள்.

அப்போது தான் அடைந்த மகிழ்ச்சிபற்றி அத் தோழி உவமை கூறுகிறாள்.

மழை பெய்யாமையால் நாட்டில் வறுமை தாண்டவமாடியது. கலப்பை வேலையின்றி மூலையில் தூங்கியது. கோடைகால வெப்பம் நீடியதால் எங்கும் பசுமை என்பதே அற்றுப் போனது.

குன்றுபோல் கரைகள், பறவைகள் வந்து தங்க இயலாத நிலை குளத்தினுள்ளே நீரில்லாத வெப்பம். இவ்வாறு குளங்கள் வறண்டு கிடந்தன.

அவை நீர் நிரம்பும் படி ஒருநாள் இரவு பெருமழை பொழிந்து கொட்டியது. அப்படிப்பட்ட இன்பம் மிக்க விடியற் காலத்தே, அவ் வூர் மக்கள் எல்லாம் மகிழ்ச்சியிற் கொண்டாடினர்.

'என்றூழ் வியன்குளம் நிறைய வீசிப்
பெரும் பெயல் பொழிந்த ஏம வைகறைப்
பல்லோர் உவந்த உவகை எல்லாம்
என்னுள் பெய்தந்தற்றே'

(கபிலர், அகம். 42)

வெப்பம் மிக்க பெரிய குளங்கள் எல்லாம் நிரம்பும்படி, அதிர்ந்து வீசிப் பெரிய மழைபொழிந்த, நன்மை மிக்க வைகறைப் போதில், அவ்வூரிலுள்ள பலரும் கொண்ட மகிழ்ச்சி உவகை அனைத்தையும் கொண்டுவந்து, என் ஒரே இதயத்துள் பெய்தது போல, எனக்கு மகிழ்ச்சியானது. (தலைவன் திருமணம் செய்ய முடிவு செய்ததால் வந்த மகிழ்ச்சி.) அனைவரின் மகிழ்ச்சியையும் ஒரே இதயத்தில் கொட்டினால் எவ்வாறிருக்கும்? இவ் உவமையைக் கேட்கும் ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சி மிகும் அல்லவா?

## கற்பகம் பல்கலைக் கழகம்

ஈச்சநாரி அஞ்சல், கோயம்புத்தூர் 641 021

•

செவ்விலக்கியக் களப் பயிற்சித் தொடர்
Training in Classical Thamizh Literature

சான்றிதழ் வகுப்பு
Certificate Course

•

அகநானூற்றில் சிறுகதைகள், நெடுங்கதைகள், புதினங்கள், நாடகங்கள், திரைக் காட்சிகளுக்கான கருக்கள் உள்ளன.

தேர்ந்தெடுத்த பாடல்கள் மிக எளிமைப்படுத்தித் தரப் பட்டுள்ளன. 'நெடுந்தொகை' எனப்படும் இதன் சிறப்பனைத்தையும் காண இந்நூல் ஒரு நுழை வாயிலாகும்.

எதிர் காலத்தில் அகநானூறு பற்றிய குறும்படங்கள், சுவரொட்டி ஓவியங்கள், திரைக் காட்சிகள் தோன்ற இந்நூல் ஒரு தூண்டுகோலாகும்.

தொடர்பு கொள்க

தமிழ்த்துறைத் தலைவர்
**கற்பகம் பல்கலைக் கழகம்**
கோயம்புத்தூர் 641 021

**தமிழண்ணல்**
ஏரகம், சதாசிவநகர்
முதன்மைச் சாலை
மதுரை 625 020